


பகவான் ஸ்ரீ ரமண மஹர்ஷி

ரமண கீதம்

ஸ்ரீ
ரமண கீதம்

இயற்றியவர்
ஸ்ரீ சாது ஓம்

பகவான் ஸ்ரீ ரமண மஹர்ஷிகளது

நூற்றாண்டு விழா மலர்

பதிப்பாளர்:
ஸ்ரீ டி. என். வேங்கடராமன்
தலைவர், நிர்வாகக்குழு,
ஸ்ரீ ரமணாச்ரமம்
திருவண்ணாமலை
1980

முதற் பதிப்பு . . 1962
இரண்டாம் பதிப்பு. 1980

இந் நூலாசிரியரின் இதர நூல்கள் :-

ஸ்ரீரமணவழி (இருபாகங்களும்).
ஸ்ரீஅருணாசல வெண்பா.
ஸ்ரீரமண குருவரு ளந்தாதி.
ஸ்ரீரமணாக்ஷர மலர் மாலை.
குருவாசகக் கோவை உரை (அச்சில்).
உபதேச வுந்தியார்—உரை.
பகவத் கீதா சாரம்—உரை.

English books by the same author :-

The Path of Sri Ramana—Part I
The Path of Sri Ramana—Part II.

விலை ரூ. 4.

அச்சிட்டோர் :-
கீதா அச்சகம், 18, திருமஞ்சனக் கோபுரத்தெரு,
திருவண்ணாமலை — தமிழ்நாடு. 606 601.

26-2

பதிப்புரை

பகவான் ஸ்ரீரமண மஹர்ஷிகளைச் சற்குரு வாகக் கொண்டு, ஸ்ரீசாது ஓம் அவர்கள் துதித் தியற்றிய **ஸ்ரீ ரமண கீதம் 1962**ல் வெளியிடப்பட்டதி லிருந்து தமிழர்களாகிய அநேக ரமண பக்தர்கள் இதிலுள்ள அரிய பாடல்களைக் கேட்டும் ஓதியும் இன்புற்று வந்துள்ளனர். "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்"லுமாறு இப் பாடல்கள் மிக எளிய தமிழ்நடையில், இசைத் தமிழுக் கேற்ற பல்வேறு இராகங்களில் அமைந்து, கேட்போ ருள்ளத்திற் சிறந்த குருபக்தியைத் தூண்டி வளர்ப்பதாக அமைந் துள்ளன. ஸ்ரீ பகவானது இருபெரும் உபதேச நெறிகளாகிய 'ஆன்ம விசாரம்—ஆன்ம சமர்ப்பணம்' ஆகிய இரண்டிலும் ஈடுபட்டுள்ள சாதகர்கள் பலர்க்கும் தத்தம் சாதனைக் கனுகூலமான கருத்துக்க ளடங்கிய பாடல்களா லான இந்நூல், முதற் பதிப்பில் 45 பாடற் றலைப்புக்களை மட்டுமே கொண்டு, 60 பக்கங்களையே யுடையதோர் சிறு புத்தக வடிவில் வெளிவந்தது. ஆனால், பிறகு இந் நூலாசிரியரின் இனிய பல பாடல்களும் சேர்க்கப் பெற்று, 108 தலையங்கங்களைக் கொண்ட ஆறு பகுதிகளாகத் தொகுக்கப் பெற்று, முதற் பதிப்பினும் இருமடங்கு பக்கங்க ளுடையதாய், ஸ்ரீரமண பகவானின் நூற்றுண்டு விழா மலருள் ஒன்றாய், தற்போது வெளியிடப்படுகின்றது.

ஸ்ரீரமண கீதப் பாடல்களின் இசையினிமையையும் பொருட்செறிவையும் தமிழ்மக்களே யன்றிப் பிறமொழியினரும் சுவைத்துணர்ந்து ரமணபக்தியிற் றிளைக்கும் பொருட்டு, இந் நூலிலிருந்து 20 பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, நூலின் இறுதிப் பகுதியாகச் சேர்த்துள்ளோம். அன்பர்கள் அனைவர்க்கும் இந் நூல் எளிதிற்கிடைக்குமாறு இதை ஸ்ரீரமண நூற்றுண்டு விழா மலராக வெளியிடுவதற்குப் பேருழைப்பை மேற்கொண்டு பகவத் சேவை புரிந்த நூற்றுண்டு விழாக் குழுவின் செயலாளர், ஸ்ரீமான். A. R. நடராஜன் அவர்களுக்கும், இந் நூலின் பாடல்களிற் சிலவற்றை இசையினிமை துலங்கப் பாடி, ஒலிப் பதிவு செய்து, ஸ்ரீபகவானது அருட் புகழ் பரவ இசைத்தொண் டாற்றிய திருமதி. சுலோசனு நடராஜன் அவர்களுக்கும் ரமணபக்தர்களின் சார்பில் என் நன்றி உரிய தாகுக.

பதிப்பாளர்.

ஸ்ரீரமணுச்சிரமம், திருவண்ணுமலை.
7—12—1979

PUBLISHER'S NOTE

'Sri Ramana Gitam' is sung by Sri Sadhu Om in praise of his Sadguru, Bhagavan Sri Ramana Maharshi. Ever since this work was first published in 1962, many Tamil devotees of Sri Bhagavan have been singing and enjoying these poems and songs, which contain numerous encouraging ideas and clues to help aspirants who are following the two great paths — Self-enquiry and self-surrender — taught by Bhagavan Sri Ramana. These songs, moreover, are not only composed in many varied ragas, but are also written in such a simple style of Tamil that any listener can easily understand their meaning and thus have true Guru-bhakti sown and nurtured in his heart. The first edition of this work was published as a small book of sixty pages containing only 45 songs, but it is now coming out with double the number of pages and with 108 poems classified into six chapters as a special publication for the Birth Centenary of Sri Ramana Bhagavan.

Twenty songs from 'Sri Ramana Gitam' have been selected as a sample and translated into English in order that, besides enjoying the melody and music of these songs, devotees both in India and abroad who do not know Tamil may also understand the wealth of spiritual ideas contained in them. On behalf of all the devotees of Sri Bhagavan, I would like to thank Sri A. R. Natarajan, the secretary of our Centenary Celebrations Committee, who has done a noble service to Sri Bhagavan by taking such great pains to bring out 'Sri Ramana Gitam' as a Centenary Celebration issue in order that it might easily reach the hands of many devotees. My hearty thanks also to Smt. Sulochana Natarajan, who has done the worthy service of rendering some of the songs of this work in music and recording them on long-playing records and pre-recorded cassettes.

Sri Ramanasramam, Tiruvannamalai
7th December, 1979.

T. N. VENKATARAMAN

முன்னுரை

நினைக்க முக்தி யருள்வதால் முக்தித் தலங்களுள் அதி மர்மமான சிவஸ்தல மென்றும், பூமியின் இதய மென்றும் நந்திகேசுவரரது வாக்காற் புகழப்பெற்று விளங்கும் **அருணசலம்** என்னும் ஞானுக்கினி மலையின் தென் சாரலில், சாக்ஷாத் ஸ்ரீ தக்ஷிணு மூர்த்தி சொருபமாய் எழுந்தருளிய, உலக மகா குருவாகிய **ஸ்ரீரமண பகவானைப்** பாட்டுடைத் தலைவராகக் கொண்டு ஸ்ரீசாதுஓம் ஸ்வாமிகளாற் பாடப்பட்ட குருஸ் துதிகளே **ஸ்ரீரமண கீதம்** என்னும் இந்த இசைநூ லாகும். இந் நூலாசிரியர் தம் இளம்பிராயத்திலேயே ஸ்ரீரமண பிரானைத் தரிசித்து வணங்கித் தமது சற்குருவாகக் கொண்டு, தம் குருபக்திப் பிரவாக வேகத்தை அரிய இனிய செந்தமிழ்க் கவிகளாகப் பாடி வருபவர். ஸ்ரீ ரமணகுருவைத் தாம் முதன் முதலில் தரிசிக்க வந்தபோது பாடிக் கொணர்ந்த 'குயிலொடு கூறல்' என்ற பாடலையும், பிறகு 1950ஆம் ஆண்டில் தம் குருநாதனின் திருமேனி மறைவால் ஏற்பட்ட பிரிவாற் ருமையால் உள்ளம் விம்மி வெதும்பிக் கண்ணீர் வடித்துப் பாடிய 'அண்ணுமலை ரமணுண்டி' என்ற சிந்துப் பாவையும் படிப்போர் இந் நூலாசிரியரின் ரமண பக்தியை நன்குணர முடியும்.

முற்றவத்தால் தமது பதினுன்காவது வயதிலேயே தமிழ்க் கவி யூற்றுக் கண் திறக்கப் பெற்றவராயிருந்த ஸ்ரீஸ்வாமிகள் ஸ்ரீரமண குரு தரிசனங் கிடைத்த பிறகு ஸ்ரீபகவானுலேயே சில இலக்கண நுட்பங் களும் போதிக்கப் பெற்ற பாக்கியத்தால் அற்புதமான, எண்ணற்ற, தமிழ்ப் பாவினங்களில் ஸ்ரீபகவானைத் துதிக்க வல்லவ ரானுர். ஸ்ரீபக வானைத் தரிசித்த அன்றே, மிகச் சிறந்த ரமண பக்தருள் தலையாய வரும், தமிழ்ப் பெரும் புலவரும், அருட்கவியரசும், ஆன்ம ஞானியுமான ஸ்ரீ முருகனுருடன் ஸ்ரீ பகவானுலேயே நட்பிற் பிணைக்கப்பட்டு அவரு டன் இலக்கிய வுறவு கொண்டு இந் நூலாசிரியர் அளவளாவி வந்த காரணத்தால், இவரது செய்யுள் நடை மெருகேறிய பொன்னுய் மிளிர்ந் தது. இவ்வாறு ஸ்ரீஸ்வாமிகள் அவனருளாலேயே அவன்றுள் வணங்கி, சற்குருவைப் பாடும் பணியே பணியாய்ப் பெற்றுப் பிறவிப் பயனுற் றுய்ந்தார். இவர் பாடிய 'அருணுசல வெண்பா' என்ற நூலின் 52ஆவது பாடலில்,

"தானேசொல் லிக்கொடுத்துத் தன்பெயரைச் சொன்மதலை
யானே மகிழன்னை யைப்போலத்—தானேயென்
வாய்ப்பாட செஞ்சொல் வழங்கி வலிந்தூட்டுந்
தாய்ப்பா லருணு சலம்!"

என்று வரும் வெண்பாவை நோக்கு மிடத்து ஸ்ரீரமண திருவருளே இவரைத் தனது கருவியாகக் கொண்டு, பாட்டிசைக்கச் செய்து, அதைக் கேட்டினிக்கவும் செய்கின்றது என்பதை யாவரும் உணர முடிகின்றது!

ஏனைய தெய்வ நாமரூபங்களை இராக தாள இசையோடு பாடி மகிழ எவ்வளவோ தமிழ்ப் பாட்டுக்கள் நம்மிடையே நிலவுவதைக் காணும் போதெல்லாம், ஸ்ரீரமண பிரானையே என் இஷ்ட தெய்வமும் சற்குருவு மாகக் கொண்டிருக்கும் நான், "இவ்வாறு நம் சற்குரு ரமணரைப் பலவகை இராக தாளங்களோடு பாடி மகிழ யாராவது பாட்டியற்றித் தரமாட்டார்களா" என்று கருதி ஏங்கி நின்ற துண்டு. ஸ்ரீசாதுஓம் ஸ்வாமிகளின் ஸ்ரீரமண கீதங்களை அவர் பாடப்பாட நான் நேரிற் கேட்டு மகிழும் வாய்ப்பு ஏற்பட்ட இப்போது எனது ஏக்கம் நீங்கியதோடு என் போலவே விருப்பமுள்ள பற்பல ரமண பக்தர்களது ஆவலும் இனி நம் தமிழ் நாட்டிற் பூர்த்தியாகிவிட்டது என்ற பேரானந்தத்தை யடைகின்றேன்.

தன்னை ஆட்கொண்ட ஸ்ரீரமண பிரானது அருட் புகழை ஆயிரக்கணக்கான துதிகளாக இயற்றுவதும் ஸ்ரீபகவானின் திருமுன் அவற்றைப் பாடி மகிழ்வது மாகவே தம் வாணுளை இறை பணியிற் கழிப்பவர் ஸ்வாமிகள். அன்பர்கள் சிலர் இப பாடல்களை அச்சேற்றி வெளியிட விரும்பியபோது அவர், "நான் பாடுவது என் இறைவன் செவியில் மட்டும் படுவதற்கும், அதைக் கேட்டு அவர் அருள் புரிவதற்கும் மட்டுமே; இயற்றிய பாடலை இறைவன் திருமுன் பாடி முடிக்கும் போதே நான் பாடிய நோக்கம் முடிந்து விடுகின்ற தல்லவா? பிறகு அவற்றை அச்சில் வெளியிடுவதோ, அல்லது உலகோர் நடுவில் எடுத்துச் சென்று பாடுவதோ என் வேலை யல்ல!" என்று கூறி விடுகின்றார்!

"இறையுன் குரல்கேட்க வேண்டுமேல்—வே
றெவர் காதுங் கேளாம லேத்துவாய்"

என்று இந்நூலில் 8வது கீதத்தில் அவர் பாடியிருப்பதே அவரது இக் கருத்துக்களை நன்கு வெளிப்படுத்துகின்றது.

ஸ்ரீரமண கீதத்தின் சிறப்பு முழுவதையும் எடுத்துக் கூறுவது என் சக்திக்கு மேற்பட்டது; இந் நூலை ஓதும் தமிழகமே அதைப் புரிந்து கொள்ளட்டும். இங்கு ஒரு சில மட்டும் எழுத விரும்புகிறேன். இந் நூலிலுள்ள பாடல்களுட் சில ஸ்ரீஸ்வாமிகளின் தவ வாழ்வில் அவ் வப்போது நடந்த சில நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுவதாகவும், சில அவ் வப்போது இருந்த அவரது மனநிலையை விளக்குவதாகவும், சில அன் பர்கள் கேட்ட ஆன்மீகக் கேள்விகளுக்கு எழுந்த விடைகளாகவும், சில அவரது வாழ்வில் நிகழ்ந்த ஸ்ரீரமண திருவருட்கருணையை விளக் கும் சின்னங்களாகவும், இன்னும் சில ரமணோபதேசங்களாலான அத் வைத சாஸ்திரத்தை அப்படியே ஆனந்த ஸ்தோத்திரங்களாக வடித்த இசைப்பாடல்களாகவும், மேலும்சில உத்தம குருபக்தியின் லக்ஷண வாக்கியங்களாகவும் பல்வேறு சுவைகளில் அமைந்துள்ளன. ஸ்ரீசாது ஓம் ஸ்வாமிகள் இத்தகைய இசைப் பாடல்களை இயற்றுவதோடு மட் டும் நில்லாமல் தம் இனிய குரலால் அவற்றின் அர்த்த பாவங்கள் மலர அவைகளை உருகிப் பாடும் இசை நயமும் சற்குரு வருளாற் பெற்றி ருப்பது ரசிக்கும் ரமண பக்தர்களின் பாக்கியமே எனலாம்.

ஸ்ரீதியாகராஜ ஸ்வாமிகளின் கீர்த்தனங்களைத் தற்காலத்தில் அரிய இனிய பக்க வாத்தியங்களுடன் சங்கீதக் கலையின் சாமர்த்தியம் வெளிப்பட பெரிய வித்வான்கள் மூலம் நாம் கேட்கும் போது, "அக் காலத்தில் அநேக பக்க வாத்தியங்களின் சிறப்பின்றி, பக்தி வாக்கியச் சிறப்போடு மட்டும் அக் கீர்த்தனங்களின் மூலபுருஷர் தன் இஷ்டதெய் வமான ஸ்ரீராம பிரானின் திருமுன் அமர்ந்து தானே தனியே பரவச மாய்ப் பாடிக் கொண்டிருந்ததைக் கேட்டிருந்தோமானால் அது எப்படி யிருந்திருக்கும்" என்று வியப்போடு கருதிப் பார்க்கவும் நேருகின்ற தன்றோ? அவ்வாறு, வருங்கால ரமண பக்தர்கள் வருந்தாம லிருக்கும் பொருட்டு, இந்த ரமண கீதங்களை ஸ்ரீஸ்வாமிகள் பாடும்போதே நூற் றுக்கணக்கான பாடல்கள் நாடாப் பெட்டிகளில் (Cassette tapes) ஒலிப்பதிவும் செய்து வைக்கப்பட்டுள்ளது நம்மவர்க்கு நல்ல தோர் சேமிப் பாகும்.

அருணகிரியாரின் திருப்புகழைப் போன்ற சந்தப் பாக்கள்-வகுப் புகள் முதலியனவும், பலவகைப் பதிகங்களும், கீர்த்தனங்களும், கண் ணிகளும், துதிகளும், பஜனாவளிகளும், நாமாவளிகளும், மேலும்

தற்காலத்திற் சிறப்புறுவன வான—ஆனால் பக்திச் சிறப்பும் அத்வைதச் சீர்மையும் நிறைந்த—மெல்லிசைப் பாக்களும் தம்மிடத்தே கொண்டு இந்நூல் ரமண பக்த சமூகத்தின் எல்லாவித இசைவிருப்பங்களையும் பூர்த்தி செய்விப்பதா யமைந் துள்ளது. இது மட்டுமன்றி, கர்நாடக சங்கீத இராகங்களில் பல வர்ணங்களும் கீர்த்தனங்களுங் கூட ஸ்ரீரமண ஸ்துதிகளாக ஸ்ரீசாது ஓம் ஸ்வாமிகளால் இயற்றப் பட்டவை வெளிவர விருக்கின்றன. எனவே, ஸ்ரீ பகவா னருளால் தமிழ்நாட்டுச் சங்கீத அரங்குகளில் ஞானரசமும் பக்திரசமும் பொங்க வித்வான்கள் ஸ்ரீரமண பிரானைப் பாடுவதற்குத் தேவையான தமிழ்ப் பாடல்களுக்கு இனி பஞ்சமே யிராதென்று திருப்தி யடைகின்றேன்.

தமிழ்மொழி யறியாதவர்களாய், ஆனால் பகவான் ஸ்ரீரமணரது அருட்கவர்ச்சிக் காளாகி, ரமணபக்தர்களாய் வாழும் மக்கள் நம் பாரதத்தில் மட்டுமன்றிப் பாரின் பன்னாட்டிலு முள்ளனர். அவர்களுட் பலர் ஸ்ரீரமண கீதங்களை ஸ்ரீஸ்வாமிகள் பாடும்போது உடனமர்ந்து கேட்டு, இன்புற்றுப் புளகாங்கித மடைவ துண்டு "தமிழ்ப் பாடல் களினிடையே அடிக்கடி 'அருணாசலா, ஸ்ரீரமணா' என்றுவரும் புனித நாம சப்தமும், இசையினிமையுமே எங்களுக்கு இவ்வளவு பக்தியுணர்ச்சியைத் தூண்டுகின்றனவே; இப் பாடல்களின் கருத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துத் தந்தால் நாங்கள் இன்னும் ஸ்ரீபகவானது அருட் சிறப்பை எவ்வளவோ அதிகமாக உணர்ந்து கொள்ள முடியுமன்றோ!" என்று கேட்பதுண்டு. அத் தகையோர்களுக்காகவே இந்நூலின் இறுதியிற் சேர்க்கப் பட்டுள்ள ஸ்ரீரமண கீத ஆங்கில மொழிபெயர்ப்புகள் தோன்றின. அவற்றை அவ்வப்போது ஸ்ரீஸ்வாமிகளே தமிழினின்றும் சுவைகுன்றாது ஆங்கிலத்தில் மொழிபெயர்த் தளித்தார். இந்நூலில் அவை களும்இடம் பெற்றுள்ளது இந் நூலுக் கமைந்த மற்றொரு சிறப்பு அம்சமாகும். ஆங்கில மறிந்த ரமண பக்தர்களும் இதனாற் பயனுறுவர் என்பது திண்ணம்.

2—12—1979
தீபத் திருநாள்

M. V. ரமணாசலம்.
மதுரை.

உள்ளுறை

		பக்கம்
	காப்பு	1
	ஸ்ரீ அருணாசலரமண சோடச மூலாக்ஷரத் தோத்திரம்	2

I கீதங்கள்

1	ரமணா ரமணா	7
2.	ஸ்ரீரமண நாமமே	8
3.	கருணாகர நாதன்	10
4.	அருணாசல ரமணா	11
5.	ஸ்ரீஅருணாசல குரு ரமணம்	13
6.	அற்புத மாயை	15
7.	உனக்கே நமஸ்காரம்	17
8.	இறைவனைக் கண்டிட எண்ணினால்	19
9.	குயிலொடு கூறல்	20
10.	இதய வாழ்வு	22
11.	எப்படியோ அருள்வாய்	22
12.	அருணாசலத்தைப் பாராய்	23
13.	ஸ்ரீரமண நினைவு	24
14.	வருந்தாதே நெஞ்சே	25
15.	அருட்புக லடைவு	25
16.	என்ன வேண்டும்	26
17.	வரமொன்று தந்தான்	27
18.	காரணம் என்ன சொல்வேன்	27
19.	என்ன விந்தையே	28
20	அது நீயே	29
21.	உனது திருவருளே	29
22.	பகவான் ரமணனையே பாடுகின்றோம்	30
23.	ஒன்றே ஞாபகம்	30
24.	வாழி ரமணன்	31

II துதிகள்

1.	ஸ்ரீ அருணாசல லிங்காஷ்டகம்	32
2.	ஸ்ரீ ரமணா சரணம்	34
3.	ஸ்ரீ ரமணேச தெய்வம்	38
4.	அண்ணாமலை ரமணாண்டி	41
5.	இன்னும் எத்தனை நாள்	46
6.	பாப்பாப் பாட்டு	49
7.	உன்னருளால் ஆகட்டும்	54
8.	கொஞ்சம் பொறு	54
9.	எத்தனையோ கற்றனையே	56
10.	ரமண அடிமை(தாஸ)லக்ஷணம்	58
11	என்சொல்லி எண்ணுகேனே	58
12.	'ரமணா' எனச்சொன்னால்	61

III சந்தப் பாக்கள்

1.	ரமண விநாயகன்	62
2.	ஸ்ரீ ரமண கொலு வகுப்பு	62
3.	ஸ்ரீ ரமண அருள்நோக்க வகுப்பு	65
4.	கொம்புகாலற்ற குருபதாஷ்டகம்	66
5 to 27	திருப்புகழ் சந்தங்கள்	68 to 82

IV கீர்த்தனங்கள்.

1.	கிரிவலம்	83
2.	எந்நாளும் உன்னருள்	83
3.	அனாதி சுகார்ணவம்	84
4.	அழகாகுமா?	84
5.	நினைவு ஏனோ ?	85
6.	அவரே குருபகவான்	86
7.	நானோ அதிகாரி	87
8.	ஆன்மக் கல்வி	88
9.	ரமண பகவா னருள்	89
10.	ஸஹஜ சமாதி	89
11.	எது பெரிது ?	90
12	யாரோ பாராய்	91
13	நானெனும் பொருள் நீ	92
14.	ஞானத் துயில்	93
15.	அவ்யாஜ கருணை அருணமலை	94
16.	ஸ்ரீ ரமணா சாந்தி சக்தி	95 & 106
17.	குரு சொற் புரியாக் கூட்டம்	96
18.	எப்போது நீ அறிவாயோ	97

V பஜனாவளி

1.	ஸ்ரீ ரமண நாம மகிமை	98
2.	ரமணாய நம ஓம்	102
3.	ரமணேச்வரா—அருணேச்வரா	103
4.	ஜெய அருணாசல ரமணன்	104
5.	ஹர ஹரோ ஹரா	104
6.	பிரஜ்ஞானம்	105

7. ஞான சுந்தா ரமணன் 106
8. மனமே மனமே ஓடிவா 106
9. அண்ணாமலையானே 107
10. நாவே விடாது சொல்வாய் 107
11. அன்பே வடிவமானாய் 108
12. ஜெயஹே ரமணா 109

VI நாமாவளி

1 to 11 110 to 113
ரமண சரித சங்கிரகம் 113
வாழி விருத்தம் 116

English Translations

I கீதங்கள்—Gitangal

1. To You alone my namaskarams 117
2. If you want to see God 118
3. Life in the Heart 119
4. In any way You wish 120
5. See Arunachala! 121
6. Be not disheartened, O mind! 122
7. Taking refuge in His Grace 122
8. What do I need ? 123
9. A boon He gave me 124
10. What reason can I give ! 124
11. What a wonder ! 125
12. That is You alone ! 125
13. Only on Bhagavan Ramana do we sing 126
14. The only remembrance 127

II துதிகள்—Tutigal

15. Wait a little 128
16. Have you not learnt so much ! 129
17. The signs of a slave of Ramana 130

IV கீர்த்தனங்கள்—Kirtanangal

18. Ever in hope of Thy Grace 131
19. Why thinking ? 131
20. The Peace and Power of Sri Ramana 132

ஸ்ரீ
ரமண கீதம்

நமோ பகவதே ஸ்ரீ அருணசல ரமணய

ஸ்ரீ ரமண கீதம்

ஸ்ரீ ரமணத் தியானம்.

அருவுரு வமைந்து ஞான வருளிரு நயன மேந்திப்
பொருளெது வெனப்போந் தார்க்குப் புக்கக மாகி யன்பர்
மருளுறு மயக்கந் தீர்க்கும் மஹாகுரு ரமண மூர்த்தித்
திருவடி கண்ணி லொற்றிச் சிந்தையில் தியானம் செய்வாம்.

ஸ்ரீ விநாயகர் துதி

(வெண்பா)

குருரமண ஞானசிவக் குன்றமே நீயே
கரிமுகனு வந்தருளிக் காப்பாய்—திருவருளா
லுதமிசைப் பண்ணடியே னுவிலுதித் தேரமண
கீத மிசைக்கக் கிளர்ந்து.

ஸ்ரீ சரஸ்வதி துதி

(வெண்பா)

வேதன் விழையொளியே வித்தைகளின் ரூயேநின்
பாதந் தயவாலென் பால்தந்தால்—நாதங்
கமழுங் கவின்மலருங் கற்றூரின் இன்பத்
தமிழுமென் னுதழைக்குந் தா.

ஓம்
நமோ பகவதே ஸ்ரீ அருணசலரமணய

ஸ்ரீ அருணசலரமண ஷோடச மூலாக்ஷர நமஸ்காரத் தோத்திரம்

ஓம்

ஓமெனு மான்ம வொலியதன் மூல
வுண்மையா யுளத்துள பொருளாய்,
தாமுறை யருண சலசிவ சக்தி
தனையெடுத் துலகெலா மிறைக்குஞ்
சாமியா யடியர் தந்தைதா யாகித்
தக்ஷிண மூர்த்தியா யெழுந்த
நாமெனு மகண்ட நாமசற் குருவாம்
ரமணபூங் கழனமஸ் கரிப்பாம்.

ந

1. "**ந**மவெனும் பொருளோ நானெனு மகந்தை
நனியித யத்தினி லடங்கி
யிமியுமே லெழாம லிருப்பதே, யதனு
லிவ்வித நமஸ்கரித் திருப்பாய்
தமதெனு மெல்லாந் தலைவன துடைமை,
தனையறி" யெனவரு டந்து
நமையுளத் தொடுக்கு நற்றுணை யான
ரமணபூங் கழனமஸ் கரிப்பாம்.

மோ

2. **மோ**னமாம் வலிய முதலுப தேச
முறையினு லருளிய முதல்வன்
ஏனைய நோக்கும் வாக்குடன் பரிச
மெம்மனோ ரெய்திட விரங்கித்
தானது வாகுந் தத்துவா னுபவந்
தனதடி யார்பெறத் தரைமேல்
ஞானமே வடிவ னுவவ தரித்த
ரமணபூங் கழனமஸ் கரிப்பாம்.

ப

3. "பரமெலா மிறைவன் பதத்திலிட் டுள்ளே
பளிச்சிடு மகவனு பவத்தி
லுரம்படுஞ் சகஜ வுணர்வையே நேரே
யுனதுலட் சியமெனக் கொண்டாற்
றரம்படு பலவாஞ் சாதனைச் சிரமந்
தவிரலா" மெனுமுள வுரைக்க
நரம்படு மருணை நாதனு யெழுந்த
ரமணபூங் கழனமஸ் கரிப்பாம்.

க

4. "கருவமுற் றடங்காக் கலைஞரி னேதுங்
கற்கிலா ரான்மிகக் கல்விப்
பெருமையிற் குரிமை - பெற்றவ ரென்ற
பேருரை மெய்க்கவெம் போன்ற
திருவிலார் தமக்குந் தெளிவுணர் வருளிச்
செய்தநற் சிவத்திரு வருளா (ம்)
*நரலையா யிதய நடமிடு ஞான
ரமணபூங் கழனமஸ் கரிப்பாம்.

வ

5. வலிவிலா நெஞ்ச மனிதராய், பத்தி
வழியிலே வந்து(ப்)மா யைக்குப்
பலியென நசுக்கப் படுபவர் தமைக்காப்
பாற்றிடப் பரமகா ருணிய
மலிவினு லண்ணு மலைப்பெரு மானே
வலிவில்வந் தருளியவ் வடியார்
நலிவெலா மகற்றி ஞானமே பொழியும்
ரமணபூங் கழனமஸ் கரிப்பாம்.

தே

6. தேசுரு விலிங்கத் தெய்வமா யெழுந்த
சிவனரு ணுசலச் சிந்தை

*நரலை—கடல்

மாசறு மிளமை வயதிலே தன்னுள்
வாய்ந்திடச் சோடச வயதி
லீசனே தானு மிதயவாழ் வெய்தி
யிகந்துறந் தருணேவந் திறப்பா
ணுசமா காத ஞானமே நல்கும்
ரமணபூங் கழனமஸ் கரிப்பாம்.

ஸ்ரீ

7. **ஸ்ரீ**யய லாகாத் திருவரு ளாந்தன்
றிருவடி யடைந்தவர்க் குடலின்
ஞுயையும் மறப்பித் தவருளங் கவருந்
தயாளுவாய், சதிபதி யுறவின்
மாயையைக் கடந்த மணுளனு யன்பர்
மனங்கவர்ந் தருட்சிவ ஞான
நாயக ஞுகி நம்மையாட் கொண்ட
ரமணபூங் கழனமஸ் கரிப்பாம்.

அ

8. "**அ**கமெனு முணர்வே யாகமோ டிணேந்தா
லகந்தையிவ் வத்தியா சத்தாற்
செகமெலாந் தன்னி னன்னியம் போலத்
தெரியுமச் சேர்க்கையற் றமல
வகமக மாநின் றவிர்தலே ஞான
வனுபவ மறியென வுணர்த்தி
நகசிகை யளவிற் சிவவடி வான
ரமணபூங் கழனமஸ் கரிப்பாம்.

ரு

9. "**ரு**த்திர னயன்மா லும்பரோ டிம்ப
ருலகங்க ளுடலறி யாத
நித்திரை வருங்கா னிகழ்வதோ வெனினு
நீயிருப் பதிற்றடை யுண்டோ?
சத்தறி வின்ப சகஜநீ யாகத்
தனேயறிந் தமர்க"வென் றருளி
நத்திய வர்க்கு ஞானமே வழங்கும்
ரமணபூங் கழனமஸ் கரிப்பாம்.

ஞ

10. 'ஞ'வென வின்ப மைக்கிய மசியா
நற்பொருண் மூன்றினை நவின்றோர்
*பாவினி லருண பருவத விளக்கம்
பண்ணிய ஞானபண் டிதனுய்,
சாவினைக் கடந்த சாட்சியா யான்ம
தத்துவ வித்தகர் தமது
நாவகத் தருட்பா நயமளித் தருளும்
ரமணபூங் கழனமஸ் கரிப்பாம்.

ச

11. "சலமனந் திரும்பித் தானெழு மூலத்
தானமே தெனவிசா ரித்தா
னிலையுறு மதுவே நினதிய லறிவா(ம்)
நிஜவுரு, வுணர்க" வென் றிதயக்
கலையறி வித்துக் கவலறு பரம
கைவல்ய சித்தியாம் ஞான
நலமுற வருளுங் குருபர னை
ரமணபூங் கழனமஸ் கரிப்பாம்.

ல

12. லட்சிய மிதப ஞானமே யன்றி
நாட்டவர் புகழ்பல சித்தி
மெச்சிய வான விவிதபோ கங்கள்
விழைந்துளம் விணபல வியற்ற
றுச்சமென் றுணர்த்தித் துயரற விழிப்பிற்
றுயிலுறுந் துரியமே துலக்கு
நற்சிவ ஞான நாயக னை
ரமணபூங் கழனமஸ் கரிப்பாம்.

ர

13. "ரமித்தக மகலா நாட்டமே ஞான
ரமணபே ரின்பமா மஃதோ
ரிமைப்பொழு தேனுந் தெவிட்டிடாக் குறையா

* "ஓர் பா" என்றது, 'சத்திய சிற்சுகம்' என்று தொடங்கும் ஸ்ரீ பகவா னருளிய 'அருணசல நவமணிமாலை' இரண்டாவது செய்யுளைக் குறிக்கும்.

வின்பமுன் னிதயத்தின் மனதை
யமிழ்த்தி"டென் ஞேதி யனுபவ மெய்த
வருட்கரப் பிடியினுள் ளழைத்து
நமைக்கொடு போம்சீ ரருட்குரு நாத
ரமணபூங் கழனமஸ் கரிப்பாம்.

ம

14. **ம**திக்குள வழுக்கை மாற்றிஞ லிதய
வடிவமாம், மதம்பல விதையே
கதிப்பன வன்றிக் கடவுளை யெங்கோ
ககனத்திற் காட்டுதற் கல்ல;
துதிப்பதான் பனது சுத்தியா" மென்றே
துலக்கிநந் தோற்றுவாய்க் கிழக்கு(ம்)
நதிப்பிர வாக மாகிய **பகவான்**
ரமணபூங் கழனமஸ் கரிப்பாம்.

ண

15. '**ண**'முடி வான நாமமேற் றருணை
நகர்ப்பெய ருலகெலா நவிலத்
தா(ம்)முடி வான தத்துவப் பொருளாய்,
சகஜச மாதியிற் றரைமேன்
மாமுனி வோர்கள் வாழ்வகை கண்முன்
மனிதர்க ளறிந்துய வாழ்ந்து
நா(ம்)முடி வான நலம்பெற வருளும்
ரமணபூங் கழனமஸ் கரிப்பாம்.

ய

16. **ய**மநிய மாதி யோகநிட் காம்ய
யஜ்ஞமும் பத்தியும் ஞானந்
தமையனுட் டிக்கத் தாஞெரு வியத்தி
சத்திய மென்பதே தவரு
யமைவதா லேதா ஞரெனக் காண
லணைத்தற னெனவறி வுறுத்தி
நமதிய லறிவா னந்தமா ரமிக்கும்
ரமணபூங் கழனமஸ் கரிப்பாம்.

I கீதங்கள்

1. ரமண ரமண

இராகம்:- கானடா. தாளம்:- ரூபகம்.

ரமண ரமண ரமண ரமண
ரமண ரமண ரமண ரமண

1. அருண சலனே ரமண வெனுமித்
திருநா மமதே செகமா யமறப்
பெருமா வலியா யுடையே னருள்வாய்
குருநா யகனே பகவான் ரமண. (ரமண)

2. காடும் மலையுங் கடுமா தவர்கள்
தேடும் பொருளைப் பெறவே தினமுள்
நாடும் பரிசே பரிசென் றிதயத்
தாடும் (ஸ்)புரணத் தகநா யகனே. (ரமண)

3. அயனே யரியே யறியா வழலின்
மயனே யருண சலனே ரமண
பயனிவ் வுடலாற் பெறுதற் கெனையுன்
வயமாக் கியருள் புரிவாய் ரமண. (ரமண)

4. நானே தெனநீ யறிவா யெனிலத்
தானே பொருளாய், தடையே துமிலா
வானு குவையென் றகமு றிடுசெந்
தேனே குருவே சிவனே ரமண. (ரமண)

5. அழியாப் பதமுன் னருளா லலதென்
னெழியா வலைமா மனமே தழியும்?
வழியா துமிலே னுனையன் றியருள்
பொழிவாய் ரமண பரிபூ ரணனே. (ரமண)

6. தேகா திகளே திடமா யகமாம்
மோகா ரணியம் முடிவா யறுமோ
ஆகா திதெனு லருண சலநின்
சாகாப் பதமே சரண யினனே. (ரமண)

7. கலையும் பணியுங் கவியும் புகழும்
அலையும் மனநா சமுறச் செயுமோ?
தலையும் பணியச் சரணு கியணு
மலையும் ரமணே சனுமே கதியே. (ரமணு)

8. தீரா தபவத் திரையற் றுள்முன்
சீரார் பதமுற் றலாச் சுகமே
ஆரா தினுமேன் அலமா றருள்வாய்
தாரா யினியுன் சரணும் புயமே. (ரமணு)

9. நிறைமா நிதியும் நிலமும் பணியும்
முறைசெய் யரசும் பெறினும் முடிவிற்
குறையா துமிலாப் பதமிங் குறுமோ
இறைவா இவையேன்? எனையாள் ரமணு. (ரமணு)

10. கெடுவல் வினைவா சனையான் மயலால்
உடலும் மனமும் உலகும் நினையாத்
திடமுன் னருளாற் சிறியேன் பெறவே
கொடைநீ யருள்வாய் குருவே ரமணு. (ரமணு)

2. ஸ்ரீ ரமண நாமமே

இராகம்-கர்நாடக தேவகாந்தாரி தாளம்-ஆதி

1. ஜன்ம நாசமே சேர வைப்பதும்,
கன்ம வாசனை கழல வைப்பதும்
புன்மை யாவையும் போக்க டிப்பதும்,
நன்மை யாவதும் **ரமண நாமமே.**

2. மலம ழிப்பதும், மனம ழிப்பதும்
வலம ளிப்பதும் வரம ளிப்பதும்
சொலவி னிப்பதும் சுகம ளிப்பதும்
நலம ளிப்பதும் **ரமண நாமமே.**

3. வல்ல தென்பதும் மாயை தீரவே
கொல்ல வல்லதும் கூடி ஏகமாய்ப்
புல்ல வல்லதும் புண்யம் யாவினும்
நல்ல தென்பதும் **ரமண நாமமே.**

4. கோத கன்றதும் குணமு யர்ந்ததும்
சாத னப்பலம் தான ளிப்பதும்
சேத னத்ததும் சிவம யத்ததும்
நாத னுவதும் **ரமண நாமமே.**

5. திடம ளிப்பதும் திருவ ளிப்பதும்
உடனி ருப்பதும் ஒய்வி லாத்துயர்
அடவி சுட்டக மகமென் றன்பருள்
நடன மாவதும் **ரமண நாமமே.**

6. அன்று மாலயன் அயர நின்றதும்
வென்று மாயையை வீட ளிப்பதும்
கன்றின் தாயெனக் கருணை செய்வதும்
நன்று நன்றுநம் **ரமண நாமமே.**

7. தேட்ட மாவதும் தியான மாவதும்
ஊட்ட மாவதும் உள்ளி ருந்தருள்
ஆட்ட மாவதும் அகமு கத்தில்நம்
நாட்ட மாவதும் **ரமண நாமமே.**

8. கான மாவதும் கடவு ளாவதும்
பான மாவதும் பரம தத்துவத்
தான மாவதும் தன்ன வர்க்கருள்
ஞான மீவதும் **ரமண நாமமே.**

9. அத்த னைதும் அருண மாமலைச்
சித்த னைதும் தெய்வ மானதும்
முத்தி யானதும் மோன மும்நவ
ரத்ன மானதும் **ரமண நாமமே.**

10. அம்மை யப்பனும் ஆசை யப்பனும்
எம்மை யப்பதம் எய்து விப்பதும்
இம்மை யிற்குரு என்றுள் ளூறிடும்
நம்ம யப்பொருள் **ரமண நாமமே.**

——

3. கருணகர நாதன்

இராகம்:-கர்நாடகதேவகாந்தாரி தாளம்:- ஆதி

ரமணா யநமோ ரமணா யநமோ நமவே
ரமணா யநமோ ரமணா யநமோ நமவே

1. கருணா கரநா தனுனைக் கதியாய்ப் பெறுமோர்
அருளா தரவிந் தனையன் பினகப் பொருளே
ஒருநா ளுமுனைப் பிரியா வரமீந் தருள்வாய்
அருணா சலனே **ரமணா யநமோ நமவே.** (ரம)

2. சிவசத் திமயத் திருவா ளவெனக் கருளாற்
பவமுக் திசுவைப் பழமே பரிவா லருள்வாய்
தவசத் தியர்ஞா னியர்தம் மகமன் றினிலே
நவநா டகனே **ரமணா யநமோ நமவே.** (ரம)

3. அழிவா குமுடற் றளையற் றருளா லறிவாம்
விழியே திறவாய் விரைவாய் குருவா கதிருச்
சுழியின் றசுயஞ் சுடரே சுனையாய்க் கருணை
பொழிநா யகனே **ரமணா யநமோ நமவே.** (ரம)

4. மதியா(ம்) மதிவா ழவொளிச் செயுமர் விதயக்
கதிரே கருணைக் கடலே கடைக்கண் ணருளின்
நிதியாங் குவையே நினையே சரணா யுடையேன்
பதியே **பகவான் ரமணா யநமோ நமவே.** (ரம)

5. கலையா வினுமே தருமான் மசிவக் கலையே
அலையா வழியா கவெமக் கருள்செய் தருணா
சலநா தனெனத் தரைமீ துலவும் பரமே
தலைவா **பகவான் ரமணா யநமோ நமவே.** (ரம)

6. தகவா யுலகெங் கும்வணங் கும்ஜெகத் குருவே
பகவான் அடியோம் பதியே யருள்பாய் நயன
முகமே முதல்வா முனிநா யகவெம் முடன்வாழ்
அகமே **பகவான் ரமணா யநமோ நமவே.** (ரம)

7. தரைமீ துலவிச் சரண்தந் ததனிக் கடவுள்
உருவே குருநீ யெனவுண் மையின்மூ வுலகும்
பரவுஞ் சுரமா னிடபன் மதசற் குருவே
பரமேச் வரனே **ரமணா யநமோ நமவே.** (ரம)

8. கவிசித் திதருந் தவமுக தகலா மகுட
நவரத் னமகா மணியே யருணா சலபூம்
பவனத் துறைதே வபராத் பரமோ னசதா
சிவசத் திமயம் **ரமணா யநமோ நமவே.** (ரம)

9. மனவே தனையா(ம்) மரணம் ஜனனங் கெடவே
இனியா ரருள்வா ரெனவேங் குமெமக் கெனநீ
தனிமா னிடதே கமெடுத் ததயா நிதியே
புனிதா **பகவான் ரமணா யநமோ நமவே.** (ரம)

10. அருணா சலநா தனபே தசொரு பவருள்
தருவாய் ரமணா தலைவா தருகற் பகமாய்
உருவாய் வருவா யருள்வா யுயிருக் குயிரே
குருவே பகவான் ரமணா யநமோ நமவே. (ரம)

4 அருணாசல ரமணா

இராகம்-ஆனந்த பைரவி தாளம்-ஆதி

அருணாசல ரமணாகுரு வருணாசல ரமணா
அருணாசல ரமணாசிவ அருணாசல ரமணா

1. சிவசுந்தர வழகந்தண ஜெகமாகுரு ரமணா
பவபந்தம தறசிற்சுக பதமீந்தருள் ரமணா
தவமுந்திரு பலமெய்ச்சுகந் தரவந்தருள் ரமணா
புவனந்தொழு மலர்சேவடிப் புனிதாகுரு ரமணா. (அ)

2. தினமுன்பத மிருகைத்தொழு திருவாழ்வருள் ரமணா
வினயத்துடன் ரமணப்பெயர் விழைநாவருள் ரமணா
மனமுன்னருள் வடிவத் து(ன்)னி மகிழற்கருள் ரமணா
நனவிற்றுயி லுறவற்புத நடமிட்டருள் ரமணா. (அ)

3. பரவத்திரு வருணாசல பதமுட்டிய ரமணா
அரவொப்பிய மனமற்றிட வருளிட்டருள் ரமணா
இரவிற்பக லிலுமுன்னுட னிணைவித்தருள் ரமணா
சிரமத்தெனை மிகவற்பமு மிடவொப்பிலா ரமணா. (அ)

4. கருணைக்கட லருணக்கிரி கடவுட்சுத ரமணா
இரு(ள்)நைத்திட வுதியற்புத விதயக்கதி(ர்) ரமணா
தருணத்திது பழவாதனை தவிரற்கருள் ரமணா
அருணைப்புகழ் புவிமூவிலு மதிரச்செய்த ரமணா. (அ)

5. படமுந்துறு பணிகங்கண பரமேச்வர ரமணா
கடவுட்டரை யிடைமானிட வுடலேற்றனை ரமணா
கெடசிச்சட முடிநீயகங் கிளர்வுற்றெழு ரமணா
மடமற்றென திடரற்றுனை மருவச்சுக ரமணா. (அ)

6. உதநித்திரை குமிழிக்கிணை யுலகத்துயி ருனையே
அததற்குதித் திடநிற்றிட வழிவுற்றிட வமையும்
பததத்துவ மெனலெற்கநு பவமுற்றிட விதுகால்
பதிதத்துவ மெதுவத்திலென் றனைவைத்தருள் ரமணா. (அ)

7. சிலையைக்குனி தனுவாக்கினை சிவகோசரி யுணரப்
புலையைத்திரு வமுதாக்கினை புவிவந்தபின் னருணை
*மலையைக்கட லெனவாக்கினை மகனென்சிறு மதியை
அலைபற்றநுட் பரமாக்குவை யதியற்புத ரமணா. (அ)

8. சகமாயையு முனதன்பின ளதனாலுன தடியார்
அகமாயம தழியும்பர வமுதம்மழை பொழியும்
மிகவேகமு முறுமூழ்வினை விடுபட்டிடு மெளிதாய்
இகமேலுன தடியார்க்கரு ளிணையுங்குரு ரமணா. (அ)

---

*மலையைக் கடலென வாக்கினை :- ''அருள் நிறைவான அமுதக்கடலே'' என்று ஸ்ரீ பகவான் அருணாசலத்தை அமுதக் கடலாகக் கூறிய அருள்வாக்கைச் சுட்டுவது.

9. அணிமஞ்சுறை யருணாசல ரமணா நினதருளால்
கணமுன்றனை மறவாதுனக் கடவேனெனி லுலகிற்
பணமுந்துகி லிடமுஞ்சுவை யுண்வும்பெறப் பலவாய்
எணவும்மன முளதோவெனக் கிதுநீயருள் ரமணா. (அ)

10. விரியாதுள மலராயினு மெனதுள்ளமு முனதாம்
பெரிதாகிய வருளால்விக சிதமாவது பெரிதோ?
அரியாதியி தரசீவர தகவாரிஜ குகையில்
அறிவாய்ரமி பரமாத்மனே யருணாசல ரமணா. (அ)

5. ஸ்ரீ அருணாசல குரு ரமணம்

இராகம் - மோஹனம் தாளம் - ஆதி

அருணாசல குருரமணம் அருணாசல குருரமணம்
அருணாசல குருரமணம் அருணாசல குருரமணம்
அருணாசல குருரமணம் அருணாசல குருரமணம்
அருணாசல குருரமணம் அருணாசலமே.

1 யதிநாயக பரவடிவம் எவரும்பணி யிறையுருவம்
கதியேதரு மதியனெனுங் கடவுட்சிவ கதிர்மதியம்
துதிசெய்யடி யவரிடம்வந் துறையும்பர சுகநிலயம்
அதிசீதள பரமசிவம் அருணாசல குருரமணம். (அ)

2 ஜகநாடகந் தனைநிஜமாய்த் திடமாய்நினைத் திடுமடியேன்
சுகநாசகப் பஹிர்முகமே தொடராதெடுத் துரிமையுடன்
மகனாமென வருள்புரியும்; மனமாமுய லகனவன்மேல்
அகநாடக சிவசொருபம் அருணாசல குருரமணம். (அ)

3 சகியாதுளம் உலகினிலே தனியாய்த்துய ரடையுமெனைத்
தகியாதொரு பவமுமினித் தவவாழ்வினைத் தருவதனாற்
சுகியாகவே யுறவருளுந் துணையாம், நரசுரவுலகம்
அகிலாண்டசற் குருசொருபம் அருணாசல குருரமணம். (அ)

4 இமமாமலைத் தவமுயலும் எவரும்பர சிவனுடலில்
"நமதாண்டவன் அருணமலை ரமணாவெனும் பெயருடனே

இமையோர்தொழ வுள''னெனவந் தணைவார்க்கிறை யருள் புரியும்
அமலாத்துமப் பரமசுகம் அருணாசல குருரமணம். (அ)

5 பசுமாபதி சிவனருணா சலமாயுறை பரமனருட்
சிசுவாகிய திருவடிவம் சிவசுந்தர ரமணமயம்
விசுவாகரம் புனைந்தடியார் வினைவாசனை யெனுமனமாம்
அசுராதிசங் கரம்புரியும் அருணாசல குருரமணம். (அ)

6 பயனுடிலாப் பெருமுனிவோர் பலநாள்புரி தவவலிவின்
பயனுயடை படுபொருள்தம் பரமேச்வர பதமுடனே
தயவால்மனி தனினுருவில் தரைமீதுல வியதெனினும்
அயன்மால்தொழும் ஒளிவடிவம் அருணாசல குருரமணம். (அ)

7 வருணாதிப னெனவருளின் மழைபெய்குரு நமதிதயத்(து)
இருணாசம துறச்சிறிதும் இமையாதுத விடுமதுநங்
கருணாகர ரமணனெனக் கனிவார்எவர் அவர்கணிலே
அருணோதய வெழில்வதனம் அருணாசல குருரமணம். (அ)

8 இகமும்பர மிருவகையும் இசையும்புகழ் கலைபலவும்
மகவும்பிற வகைசுகமும் மனையும்பல மனிதருளே
தகவும்சுக தனவகையும் தருமே,தனைச் சரணடைவார்
அகநாசகத் திருநடனம் அருணாசல குருரமணம். (அ)

9 விதிமீறிநல் வரமருளும் வினைவாய்விடு படவருளும்
நதியாடுவர் பெறுநலமும் ''ரமண''வெனி லுறவருளும்
எதிரென்றொரு தடையெதுவும் இலையாம்படி விலகவரும்
அதிபாலியத் துறவரசன் அருணாசல குருரமணம். (அ)

10 பிணிபோய்ச்சுகம் பெறவருளும் பிறவாப்பர நிலையருளும்
மணியாதிபொன் னணிபலவும் மனைமேலுற வரமருளும்
பணியாள்நிலம் பசுவுணவும் பணியுந்தரும் பலபலவாம்
அணிமாதியை அடிமைகொளும் அருணாசல குருரமணம் (அ)

6. அற்புத மாயை

இராகம் - சிந்துபைரவி தாளம் - ஆதி

நமோரம ணுயந மோரம ணுயந மோவரு ணுசலனே
ஸ்ரீரம ணுயந மோரம ணுயந மோவரு ணுசலனே.

1. அற்புத மாயையி னுல்விரி கின்றவிவ்
வண்டமெல் லாமுமனக்
கற்பனை யென்றுமெய் கண்டவை தீர்ந்து
கடந்தபெ ருந்தவனே
தற்பர ஞானப ராபர னேயருள்
தந்தைச தாசிவனே
சற்குரு வேபர மாத்மதி ருஷ்டிநீ
தந்தருள் தந்தருளே! (நமோ)

2. சுற்றிய மைந்தசு கந்துயர் யாவுமுள்
தோன்றிடக் காரணமாப்
பற்றிய 'தேகம்நான்' என்றெணும் பைத்தியப்
பாமர பாவமிதை
எற்றி யெறிந்தென துண்மைநீ என்றறிந்
தின்புற வின்னருளான்
முற்றறி விந்தருள் வாய்தொழின் மூன்றும்
முடித்த முனீச்வரனே. (நமோ)

3. செத்தவர் எத்தனை எத்தனை கண்டு
தெரிந்துமின் னுந்தெளியா(து)
இத்தரை மீதினில் ஞாயம் எனக்குற
ஏன்முயல் கின்றனனே!
சத்திய மற்றபு விக்குறு வாழ்வினைச்
சார்வது விட்டுனிடம்
புத்திய தித்துபு றத்தைவி லக்கப்
புரிந்தருள் பூரணனே. (நமோ)

4. கண்வழி காண்பன காண்பவ னுயின், நான்
கண்டிட வொன்றுமில்லை!
மண்ணுல கில்தன மாமலை சேர்த்திடும்
வாழ்விலு மொன்றுமில்லை!

விண்ணுல கின்பம் மனத்தின் விகற்பம்!
விசித்திர மொன்றுமில்லை!
உண்முக மாகி, உனக்கெனை யீவதே
உத்தமம் உத்தமமே. (நமோ)

5. தோன்றி யொடுங்கும் ஜீவேச ஜகங்கள்
சுழுப்பதியி லில்லையென்றால்,
ஏன்தெரி யும்நன வுக்கன வெண்ணி
இருப்பனோ? என்றுமிதைப்
போன்ற மஹாபழி புத்திம யக்கைப்
புறந்தள்ளி ஆன்மநிலை
ஊன்றி யிருந்திட வேண்டும்; எனக்கருள்
ஊட்டுக, ஊட்டுகவே. (நமோ)

6. மேலுட லோடுயிர் வாழ்பொழு தேயருள்
மெய்நிலை கண்டடியேன்
பாலுட னீங்கிமி தந்திடு வெண்ணெயாய்ப்
பாரினில் வாழ்ந்திடவே
காலடி வீழ்ந்துனைக் கண்டு துதித்தனன்
காரண சற்குருவே!
ஆலடி யன்றொரு நால்வரை ஆரருள்
ஆழ்த்திய ஆண்டவனே! (நமோ)

7. தன்னை யறிந்தென கந்தை யழிந்திடத்
தந்திரம் செய்தருள்வாய்;
என்னி லிதற்கொரு வன்மையி லேனிதை
எந்தை யறிந்திடுவாய்;
உன்னை யலாலுத விக்கினி யாரிடம்
ஓடியி ரந்திடுவேன்?
அன்னைய லாற்குழ விக்கினி யாதர
வாரெனச் சொல்லுவதோ? (நமோ)

8. என்ன நடந்ததின் றென்ன நடப்பினி
யென்ன நடந்திடுமோ?
அன்னவை யாவு மறிந்தம ஹேசன்நீ
யல்லவோ, ஆதலினால்

என்னை யடைந்துன் எழிற்சுவை காட்டநீ
எண்ணி யிசைந்திலையேல்,
உன்னை யடைந்துநான் உண்மை யுணர்ந்திட
உள்வலி யுள்ளவனோ? (நமோ)

9. "இன்றுவ ரும்சில நாளில்வ ரும்திரு
வின்னருள்!" என்றெளியேன்
நின்றழ நீநெடு நாளதை, நீட்ட
நினைந்தனை யோ? அறியேன்!
கன்றுவ ரும்வழி யைக்கற வைப்பசு
காப்பது கண்டிலையோ?
நன்றிது! நானுனக் கின்றிது கூறுதல்
நாடில் நகைப்பலவோ? (நமோ)

10. "தகதக" வென்றொளி வீசுமுன் தண்ணுரு
தாரணி வாழ்பொழுதே
முகமுக மோடொரு நோக்கிலெ னக்கருள்
மூட்டிய மெய்முறையால்,
மிகமிக சீக்கிர மேயொளி ஞானமும்
வீசுமெ னத்தெளிந்தேன்;
"அகமக" மென்றருள் ஆடல் புரிந்திட
அன்பொடெ ழுந்தருளே! (நமோ)

7. உனக்கே நமஸ்காரம்!

இராகம் :- செஞ்சுருட்டி தாளம்:- ஆதி

1. உனக்கே நமஸ்காரம் உனக்கே நமஸ்காரம்
உண்மைப் பரம்பொரு ளேரமணா
மனக்கண் விளக்கிடும் அகக்கண் மணியே
உனக்கே யுனக்கே நமஸ்காரம்!

2. பார்க்கும் பொழுதெல்லாம் என்னுள் ளிருந்தவை
பார்ப்பதோ டென்னையும் பார்ப்பவனே!
ஊக்க மெனக்களித் துய்க்கும் ரமணா
உனக்கே யுனக்கே நமஸ்காரம்!

3. கேட்கும் பொழுதெல்லாம் என்னுள் ளிருந்தவை
கேட்பதோ டென்குரல் கேட்பவனே!
ஊட்ட மளித்தெனை யுய்க்கும் ரமணா
உனக்கே யுனக்கே நமஸ்காரம்!

4. முகரும் பொழுதெல்லாம் என்னுள் ளிருந்தவை
முகர்வதோ டென்னை முகர்பவனே
உகந்தபே ரன்பினால் உய்க்கும் ரமணா
உனக்கே யுனக்கே நமஸ்காரம்!

5. சுவைக்கும் பொழுதெல்லாம் என்னுள் ளிருந்தவை
சுவைப்பதோ டென்னைச் சுவைப்பவனே
உவக்குங் கருணையால் உய்க்கும் ரமணா
உனக்கே யுனக்கே நமஸ்காரம்!

6. தொட்டிடும் போதெல்லாம் என்னுள் ளிருந்தவை
தொட்டறிந் தென்னைத் தொடுபவனே!
உட்பல மீந்தெனை உய்க்கும் ரமணா
உனக்கே யுனக்கே நமஸ்காரம்!

7. எண்ணுவ தெல்லா மறிந்தெனுள் எண்ணவோர்
எண்ணமில் லாதெனை எண்ணுவனே!
உண்ணுவ தென்னை யுகந்த ரமணா
உனக்கே யுனக்கே நமஸ்காரம்!

8 அறிபவை யாவு மறிந்தென் னகத்தென்னை
யறிந்தவா றென்றும் அமர்பவனே
உறுந்துய ரின்றியே யுய்க்கும் ரமணா
உனக்கே யுனக்கே நமஸ்காரம்!

9. தூங்கும் பொழுதென்னுள் தூக்கம் கனவுமென்
தோற்றமுங் கண்டு துலங்குவனே
ஓங்கும் அறிவொளி யுய்க்கும் ரமணா
உனக்கே யுனக்கே நமஸ்காரம்!

10. மாயு முடலக மாய மழித்தெனை
வாழ்வித்து நான்என வாழ்பவனே
ஓயும் படிக்கெனை யுண்ணும் ரமணா
உனக்கே யுனக்கே நமஸ்காரம்!

11. எல்லாப் பொழுதிலும் எல்லா விடத்திலும்
எல்லாமா யென்னுள் ளிருப்பவனே
உல்லாச மாயுள் ளுலாவும் ரமணா
உனக்கே யுனக்கே நமஸ்காரம்!

8. இறைவனைக் கண்டிட எண்ணினால்

1. இறைவனைக் கண்டிட வெண்ணினால்—வே
றெதையுமே காணா திருந்திடு;
இறைவ னுனைக்காண வேண்டுமேல்—வே
றெவருங்கா ணாமலி ருந்திடு.

2. இறைவன்சொல் கேட்க விரும்பினால்—வே
றெதையுமே கேளா திருந்திடு;
இறையுன் குரல்கேட்க வேண்டுமேல்—வே
றெவர்காதுங் கேளாமல் ஏத்துவாய்.

3. இறைவனை நீதொட வெண்ணினால்—வே
றெதையுந் தொடாம லிருந்திடு;
இறைவ னுனைத்தொட வேண்டுமேல்—வே
றெதுவு முனைத்தொட விட்டிடேல்.

4. இறைமணம் முகர்ந்திட விச்சையேல்—வே
றெதையுமே நீமுக ராதிரு;
இறையுனை முகர்ந்திட வேண்டுமேல்—வே
றெதனாலு மேமுக ராதிரு.

5. தெய்வ ருசியைநீ தேடினால்—நா
தீஞ்சுவை தேடா திருந்திடு;
தெய்வ முனைச்சுவைத் தேகொள்ள—வேண்டில்
சேகத்தாற் சுவைக்கப் படாதிரு.

6. வெய்யிலி லோட விரும்பினுல்—நிழல்
வீட்டை விரும்பிலே என்றுதான்—பொருள்
பொய்யுல கில்மனம் போகுமேல்—ஈசன்
போகட்டு மென்றே பொருள்படும்.

7. சொப்பனப் பித்த மிருந்திடில்—இன்னும்
தூக்கம் விடவில்லை என்றுதான்—பொருள்
இப்புவி நீமெய்யென் றெண்ணினுல்—ஈசன்
என்பது பொய்யென்ற வெண்ணமே.

8. அட்ட வுணவை யுண்ணுமலே—நேரம்
ஆக்கிற் பசியில்லை என்றுதான்—பொருள்
கெட்டதை நீவிடக் கூசினுல்—தெய்வக்
கேண்மையெல் லாம்வெறுங் கேலிதான்.

9. காம னிருப்பிடம் ராமனே—ஒரு
காலு முருன்;அருட் கைவில்லோ—டுள்ளே
ராம னிருப்பிடம் காமனே—வரான்
நாசமுற் ருனிதை நம்புவாய்.

10. ஐம்புல னுலும் ரமணனை—நன்
கனுபவிக் கவெண்ணில் ஆதமே—விரைந்
தெம்பெரு மானருள் கூடும்நீ—இனி
யேனு முயன்றே யெழுந்திரு. (இறை)

9 குயிலொடு கூறல்

இராகம் - காம்போதி தாளம் - ஜம்லப

1. இளங்குயிலே யண்ணலிடம் எனக்காக நீசென்று
"விளங்குமன தருள்தாக வேட்கையினுல் வெம்புகின்ருள்
களங்கமிலா வருட்பிழம்பே, கண்ணேஸ்ரீ ரமணேசா,
வளங்கனிந்த மலைமருந்தே, வா"வென்று கூவாயோ?

2. "அறியாதி ருந்தவளுக் கன்றே யுணர்த்தியருட்
குறியா லுனைக்கொடுத்தாய் அன்றுமுதல் கோவென்றே
வெறியா லழுதழுது விம்முகின்ருள் ரமணேசா,
வறியார்க்கே யீவாயே, வா"வென்று கூவாயோ?

3. "அண்ணு மலைநினைந்தே அழன்மெழுகா யுருகியுளம்
புண்ணுகிப் புலம்புகின்ருள் போயொருகால் பாராயோ?
எண்ணுத மனத்தார்க்கும் இரங்குவையே ரமணேசா,
கண்ணுளா, வா"வென்றே கனிவோடே கூவாயோ?

4. "திருச்சுழியின் செல்வரடி தீண்டாமல் தெருநாய்போல்
இருக்கமனம் சகியாமல் ஏதேதோ புலம்புகின்ருள்
உருக்கியசெம் பொன்போன்ற ஒளிமலையே ரமணேசா,
சுருக்கெனவே வா"வென்றே சொல்லெடுத்துக் கூவாயோ?

5. "கண்டவரெல் லாநகைக்கக் கண்கலங்கி யழுகின்ருள்
கொண்டவர்கை விடிலந்தக் கோதைமனங் கொதிக்காதோ?
அண்டமெலா மளிக்கும்அரு ணுசலனே, ரமணேசா,
பண்டெழுந்த கடலமுதே பார்"என்று பகராயோ?

6. "மையாடு கண்ணிலண்ணு மலையாட வுள்ளுருகி
மெய்யாடித் தளர்கின்ருள்; வீண்காலம் கழியாமுன்
ஐயா,அ வட்குயிரே, அழகாளா, ரமணேசா,
செய்யாயோ வருள்"என்றே சென்றுடனே கூவாயோ?

7. "என்றேனு மகம்புணர்வா ரென்றெண்ணி வாழ்கின்ருள்;
இன்றேநீர் 'இல்லை'என்ருல், இப்பொழுதே பிணமாவாள்;
குன்றே விளங்குசிவக் கொழுந்தேஸ்ரீ ரமணேசா,
நன்றேயின் றிவள்மகிழ வா"வென்று நவிலாயோ?

8. "உண்பதற்கோ, உலகரைப்போல் உடுப்பதற்கோ அன்றி
கண்பதைக்க வுனக்காகக் காத்திருந்து நலிகின்ருள; [யிவள்
விண்பரக்கும் அருணமலை வேந்தேஸ்ரீ ரமணேசா,
பெண்பதைக்கப் பாபமன்ருே? வா"வென்று பேசாயோ?

9. "கரம்பூண்ட வளைகழலக் கண்ணயரக் கால்தளர,
மரம்போன்றே கிடக்கின்ருள், மன்னவநின் மலரடிகள்
சிரம்பூணக் கொடுப்பீரேல் ஜீவன்வரும்; ரமணேசா,
வரம்வேண்டும்; வரல்வேண்டும்; வாவென்று கூவாயோ?

10. "கருத்தழிப வுனையெண்ணிக் காய்கின்ற தவளாக்கை!
மருத்துவர்வந் 'திவள்நோய்க்கோர் மருந்தில்லை' எனமீண்டார்;
திருத்தநின தருள்மருந்தே தேவையின்று ரமணேசா,
வருத்தமென்ன? என்னுடனே வா"வென்று கூவாயோ?

10. இதய வாழ்வு

இராகம் - செஞ்சுருட்டி   தாளம் - ஆதி

1. கொண்டுசெல் வாரே ஒருதின மிதயக்
குகையில் ரமணகுரு நாதன்-என்னைக்
கண்டவர் சொல்லாக் காட்சி விளங்கும்
ககன வுலகினிலே வாழ-என்னைக் (கொ)

2. தாகமும் பசியும் தன்னலப் பகையும்
தமசுமில் லாப்பர வெளியில்-ஞான
மோகன ரமணன் மோன முரளியே
முடிவிலா துலவிடு மங்கே-என்னைக் (கொ)

3. நனவுடன் துயிலும் கனவுமில் லாத
ஞானர வியொளிரும் நாட்டில்-அங்கே
மனமுட லகன்றே அவருடன் ஏக
மங்கள வாழ்வினில் வாழ-என்னைக் (கொ)

4. குறைபிணி துயரும் மரணமும் காம
க்ரோத வுலோபமு மணுகா-தங்கே
அறிவொளி நிலவில் ஆனந்த மாக
ஆத்ம ரமணகுரு நாதன்-என்னைக் (கொ)

5. போனவர் திரும்பாப் புதுநக ரதிலே
பொன்மய மாளிகை யுள்ளே-அங்கே
ஞானமெய் ரமணச் சபைநடு வதிலே
நாதன வருடனே வாழ-என்னைக் (கொ)

11. எப்படியோ அருள்வாய்!

இராகம் - பியாக்   தாளம் - ரூபகம்

1. எப்படியோ அருள்வாய்—அதை
எவ்விதம் நானறிவேன்?
இப்படி யப்படியென்—றுன்னை
ஏற்பது வீணல்லவோ? (எ)

2. வாழ்வில் எவையெல்லாம்—நான்
வாய்ந்திடில் நன்மையுண்டோ
யாவையும் நீ யறிவாய்—தரும்
வல்லமை யும்உடையாய்! (எ)

3. நின்னருள் சம்மதமாய்—எது
நேர்ந்திடு மோவதெல்லாம்
என்மனப் பூரணமாய்—ஏற்(று)
இன்புற வேயருள்வாய். (எ)

4. புன்மை யொழிந்திடவும்—அருள்
போத மெழுந்திடவும்
என்னினும் என்பொருட்டாய்க்—கவலை
ஏற்பவன் நீயல்லவோ! (எ)

5. தூநெறி நீதருவாய்!—நான்
துன்புற நீசகியாய்!
ஏனினி மேற்கவலைப்—படு
வேன்குரு வேரமணா! (எ)

12. அருணாசலத்தைப் பாராய்!

இராகம் - சரஸ்வதி மனோஹரி தாளம் - ஆதி

1. அம்மா! அருணா சலத்தைப் பாராய்! சும்மா விருக்குதே!
அதுபோ லமர்ந்துள் ளசையா திருக்க வாசை
பெருக்குதே!
இம்மா திரத்தி னிருப்பே வலிந்திங் கென்னை யிழுக்குதே!
"ஏதும் நினையா தென்போ லிரு"வென் றென்னுள்
ளொலிக்குதே (அம்)

2. காணக் காணக் கருத்துள் ளொடுங்கிக் கண்கள் நிலைக்குதே!
கல்லன் றுயிரைக் கவருங் காந்தக் கவர்ச்சி பலிக்குதே!
ஆணைப் பெண்ணை, அனைவ ருளமும் அபக ரிக்குதே!
ஆசை யழிக்கும் ஆசை பெருக்கி யமைதி யளிக்குதே!
(அம்)

3. உள்ளங் கவர்ந்த கள்வன் ரமணன் ஒளிந்தங் குள்ளானோ?
உச்சிச் சிகர வடிவா யொளிரும் ஒற்றைக் கண்ணனோ
மெள்ளந கைக்கும் வெற்புரு ரமணன் வெளியில் வாரானோ?
விலகா தென்றன் விழியைக் கவர்ந்த வேந்தன்
ஆனானோ? (அம்)

4. விளக்கைச் சுற்றும் விட்டில் அயரா விதமாய் அடியேனே
வெற்பைச் சுற்றும் வேட்கை பொங்கி மேன்மேல் எழுவேனே !
விளக்கில் வீழ்ந்தவ் விட்டில் மடியும் விதமாய் மனந்தானே
விண்ணேன் அருணா சலனால் அழியும்! வேறொன் றறியேனே. (அம்)

5. கருதக் கதிநல் கருணா சலனிக் கடவுட் கிரையானேன்;
கருமத் திரளுங் கவலைச் சுழலுங் கழலக் கடவேனே!
அருமைப் பொருள்எற் கருணா சலஸ்ரீ ரமணப் பெருமானே!
அவனிப் பொருளாற் பயனென்? அவனாண் டவனா னடியேனே. (அம்)

13 ஸ்ரீ ரமண நினைவு

இராகம்:- ஜோன்புரி தாளம்:- ஆதி

நினைத்தாலும் இனிப்பூறுதே-(a)ரமணனை-(b)அருணாசலத்தை(நி)

1. (a) என்-மனந்தான வனைத்தேடுதே-(b) உள்ளே-மனந்தா ...
என்னை-அணைத்தாவி பிணைத்தன் றுள் இணைத்தானைக் கணப்போது (நி)

2. உனைக்காண விழித்தேடுதே-(a) ரமணா-(b) மீண்டும்-உனை ...
(a) என்-வினைக்காம்தண் டனைத்தானோ மனக்காதல் பலிக்காதோ (நி)
(b) தீ-வினைக்காம் .. (c) முன்செய்த-வினைக்காம் ... ... (நி)

3. உன்-உருக்காண விருப்பாகுதே-(a) திரு-உருக் ... ...
(b) அருள்-உருக் ...
(a) முன்-நெருப்பான பொருப்பேயுன் அருட்கண்புன் சிரிப்பின்று (நி)
(b) மாலயன்முன்-நெருப்பான ... ... (நி)

4. (a) மனம்-அயக்காந்த வயத்தாகுதே-(b) உயிர்-அயக்காந்த
உடல்-மயிர்க்கால்கள் சிலிர்ப்பாகி உயிர்க்காமல் நினைக்காமல் (நி)

5. (a) உடல்-இளைத்தாவி நிலைசோருதே (b) மனம்-இளைத்தாவி
என்னை-விளித்தாசை களைக்காமல் அளித்தானெங் கொளித்தானோ. (நி)

14. வருந்தாதே நெஞ்சே!

இராகம் - சாமா தாளம் - ஆதி

வருந்தாதே—நெஞ்சே—வருந்தாதே
வாழ்வில் சுகமுமுண்டு—மேவுந் துயருமுண்டு (வரு)

1. வரும்பெருந் துன்பமும்போய் மறந்திடும் நாளுமுண்டு
அருஞ்செல்வஞ் சேர்வதுண்டு வெறுங்கையு மாவதுண்டு (வரு)

2. திண்மையுடல் குன்றிச் சிதைவ தியல்பேயுன்
உண்மை நிலைக்கென்றும் ஊறில்லை யாதலினால் (வரு)

3. நல்லோனென் றேயுன்னை நாட்டிற் புகழ்ந்தோர்பின்
பொல்லா னெனப்பேசி புன்மொழி புகன்றாலும் (வரு)

4. நன்றுதீ தென்றிங்கே நடப்பதெல் லாம்ரமணன்
அன்றிவரா தவன்றன் அருட்செய லென்றெண்ணி (வரு)

5. ஐயன் ரமண னுன்றன் ஆன்மலா பங்கருதிச்
செய்யும் பெருங்கருணைத் திருவிளை யாட்டென்றே. (வரு)

15. அருட்புக லடைவு

இராகம் :-செஞ்சுருட்டி தாளம் :-ஏகம்

1. என்னை—உய்விக்க எண்ணங்கொண்ட—ஓர்பெரும்
உத்தமனை யடைந்தேன்—அவன்
செய்விக்கும் லீலைகளால்—என்னையவன்
தேர்ந்ததை நானறிந்தேன்!—என்னை, (உய்)

2. மாலுமி யின்றி பெருங்—காற்றில்
மரக்கல மாகாமல்—மேன்
மேலு மெனைக் காத்தே—யருள்செய்யும்
விந்தையை என்னசொல்வேன்—என்னை, (உய்)

3. துன்பந் தருவன போல்—எனக்கொரு
சூழ்நிலை தோற்றுவிப்பான்—ஆனால்
இன்பம் அதன் முடிவாய்—எனக்கவன்
ஏற்படுத் திக்கொடுப் பான்—என்னை, (உய்)

4. எண்ணத்திற் கெட்டாததாய்—முன்கூட்டி
ஏதேதோ திட்ட மிட்டே—யருள்
வண்ணத்தி லூறிடவே—என்னையவன்
வளர்ப்பதைக் காணுகின் றேன்—என்னை, (உய்)

5. இத்தனைப் பொறுப்புடனே—குழந்தையாய்
என்மேல் விருப்புடனே—யுள்ள
சத்திய ரமணனையே—என்றென்றும்
சரணு கதியடைந்தேன்—என்னை, (உய்)

16. என்ன வேண்டும்?

இராகம் - செஞ்சுருட்டி தாளம் - ரூபகம்

1. என்ன வேண்டும், என்ன வேண்டாம் என்பதை யெல்லாம்
என்னைவிட நன்கறிந்தோன் எம்பெரு மானே!
தன்னை வேண்டும் அன்பர் தந்தை தாயுமா ருனே
பின்னையார்பின் பேகவேண்டும் பிள்ளையாம் நானே!
—எனக்(கென்னவேண்டும்)

2. நானினைத்த தீவதென்ருல் ஞாய மாகுமா?—ஸ்ரீ
ரமணனிச்சை யன்றியேதும் நல்ல தாகுமா?
தானினைத்த தீவன்! கேட்போன் தாசனுகுமா?
சர்வமும்அ றிந்தோன்செய்கை தப்பு மாகுமா?
எனக்(கென்னவேண்டும்)

3. இச்சையற்ற வாழ்விலுள்ள இன்ப மின்பமே!
எண்ணமற்ற ஞானமொன்றே இன்ப மின்பமே!
அச்சமற்ற வாழ்வளிப்போன் அப்ப னென்பமே!
அன்றிமாந்த ரால்விளைவ யாவும் துன்பமே!
—எனக்(கென்னவேண்டும்)

4. காண நல்ல தேயெனக்குக் காட்டி வைப்பனே!
காதுநாசி காயம்நாவும் கட்டி வைப்பனே!
ஆணவங் கிளம்பிடாமல் ஆத ரிப்பனே!
அவ்வப்போதங் கானவாறே ஆட்டி வைப்பனே!
—எனக்(கென்னவேண்டும்)

5. என்றுநானெங் கென்னவொன்றி யற்ற வேண்டுமோ,
அன்றதங்கே ஆக்குவான்கேட் டாக வேண்டுமோ?
நன்றேயன்றித் தீமைவந்திங் கென்னைத் தீண்டுமோ?
ஸ்ரீ—ரமணனன்றி வேறெனக்கென் னுக வேண்டுமோ?
—எனக்(கென்னவேண்டும்)

17. வரமொன்று தந்தான்

இராகம்:- சாமா தாளம்:- திசிர ஏகம்

வரமொன்று ரமணேசன் தந்தான்
வாழ்வில் தானாக (வ)

1. உரமுண்ட அறியாமை மாற—இந்த
உலகங்கள் கனவாகத் தீர
நரமன்று நானென்ற போதம்—கண்டு
நடுநின்று வாழென்று சொல்லி. (வ)

2. யாதொன்று மறியாத வென்னை—தனக்
காளென்று கொண்டேற்ற பின்னை
ஏதொன்று மில்லாமல் வைத்தான்—நான்
என்னென் றுரைப்பே னிதைத்தான். (வ)

3. கண்ணார மனமாரக் கண்டேன்—என்னைக்
கரைசேர்க்கும் கலமாகக் கொண்டேன்
எண்ணாத துயிலாத நாட்டில்—வாழ
எளிதான வழியொன்று காட்டி. (வ)

4. உடலென்றும் உயிரென்றும் ஏதும்—பிரித்
துணர்கின்ற உரனில்லாப் போதும்
கிடவென்று தன்காலி லிட்டான்—உள்ளங்
கிளர்கின்ற நடமாடி விட்டான்!—வேறு
கதியின்றி பதியாகி விட்டான்! (வ)

18. காரணம் என்ன சொல்வேன்!

இராகம்:- கர்நாடக தேவகாந்தாரி தாளம்:- ரூபகம்

1. காரணம் என்ன சொல்வேன்—உன்
கருணை மழையினுக்கே—செய்த
தாரணை தியானமெல் லாம்—ஒரு
சாதனை யல்ல வப்பா—ரமணா (கா)

2. நாரணன் நான்முகனின்—முயற்சி
நாண மடைந்த தென்றால்—வே
றுருணைத் தன்தவத் தால்—முயன்
றடைந்திடக் கூடுமப்பா—ரமணா (கா)

3. சாத்திரங் கற்ற தில்லை—சதுர்
சாதனை யுற்றதில்லை—ஆனால்
பாத்திர மாகிடவே—அடிமைப்
படுத்திய நின்னருட்கே—ஒரு (கா)

4. ஆடித் திரிந்த வென்னை—உன்மேல்
ஆசைப் படுத்தி யுன்னைப்
பாடிப் பதம் பெறவே—தந்திரம்
பண்ணிய நின்னருட்கே—ஒரு (கா)

5. பூருவ புண்ய மல்ல—இதுநாள்
புரிந்த தவமு மல்ல
யாருமில் லா நிலையில்—எனக்குன்
னருட்டுணை வந்ததென் ருல்—ஒரு (கா)

6. தாய்தந்தை யாகினை நீ—அருளும்
சற்குரு வாகினை நீ—தன்னை
ஆய்வழி செய்தவன் நீ—வலியவந்
தாண்டவன் நீரமணு—ஒரு (கா)

19. என்ன விந்தையே!

இராகம் - செஞ்சுருட்டி தாளம் - ஆதி

மாலோர்க்குங் காண்பரிதாய் நின்ற தந்தையே—இம்
மண்ணோருங் காணவந்தாய் என்ன விந்தையே.

1. பூலோகம் செய்தபெரும் புண்ய ரூபமோ—நீதான்
பொய்யாத சாதகரின் பூர்ண த்யாகமோ—அன்றி
நூலோதி ஏமார்ந்தோர் நொந்த தாபமோ—நாங்கள்
நோகாமற் கண்டுகொண்ட ரமண ரூபமே. (மா)

2. பன்னூற்றுண் டுக்கொருகாற் பாரில் தோன்றிடும்—ஞானப்
பகலவனே **ஸ்ரீரமண பகவனே** யுனைக்—காண
என்னோற்றோம்! என்னோற்றோம்! ஏதுமில்லையே!—எனினும்
எங்கள்முன்னும் வந்து நின்ரு யின்ப ரூபமே. (மா)

20. அது நீயே!

இராகம் :- செஞ்சுருட்டி தாளம் :- ஆதி

1. உலகம் நிறைந்த ஒளிநீயே
உணர்வாய் விளங்கும் ஒளிநீயே
பலவென்று தோன்றும் பகிரண் டகோடி
யலைநின் றவாழி நிலைநீயே!

2. வானம் ஒடுங்கும் வெளி நீயே
மனமற் றமோன மதுநீயே
மானந் திருந்த மலரோ னுமால்முன்
மறைவற் றெழுந்த மலைநீயே!

3. நிகழ்கா ல(ம்)நின்ற நிலைநீயே
நிசிநா ளிலாத அசிநீயே
அகமா யிருந்துள் ளறிவின் பமான
பகவா னதீத பர(ம்) நீயே!

4. எல்லா மொடுங்கு மிட(ம்) நீயே
இயல்பாய் விளங்கும் சுய(ம்) நீயே
இல்லாத தின்றி யெல்லா முமாகி
சொல்லா சொரூப சுக(ம்) நீயே!

5. அருணு சலேச னவன்நீயே
அகஞா னமான சுக(ம்) நீயே
குருநா மமான ரமணு யதேவ
நமவென் னுமுள்ள மதுநீயே!

21. உனது திருவருளே

இராகம் :- தேவகாந்தாரி தாளம் :- ஆதி

1. உனது திருவருளே—இந்த—உலகக் காட்சியெல்லாம்
மனது வடிவினனுய்—நீயே—மாயையும் ஆகுவையே
தனதுள் ளறிவொளியா—யிதயம்—தங்கும் போதினிலே
எனது நானிலதால்—தோன்ற—எதுவு மில்லையயலே்
—ரமணு (உன)

2. அறிவு வடிவினன்நீ—யானுலும்—அருணு சலத்தினிலே
உறவில் குருவடிவாய்—கண்முன்—உடலோ டுலவினையே
மறைவில் அறிவொளியாய்—வாழும்—வழியை யருளினையே
இறைவ நினதருளால்—எனையுன்—இயல்பி லிணைத்தருளே
ரமணு (உன)

22. பகவான் ரமணனையே பாடுகின்றோம்

இராகம்:- தேசியம் தாளம்:- ஆதி

பகவான் ரமணனையே பாடுகின்றோம்—அவன்
பாதமலர் நம்தலைமேற் சூடுகின்றோம்
குகையாம் இதயத்திலே கூடுகின்றோம்—சற்
குருவருளா லுலகில்விளை யாடுகின்றோம். (ப)

1. அகம்யார் ஆய்வதனுல் அகந்தை மாய்வதனுல்
சுகக்கடல் ஆழ்வதனுல் தோற்றமெலாம் ஓய்வதனுல்
ஜெகமென் றென்றுமில்லை, தேசகா லங்களில்லை
சிவமே யுள்ளதன்றி ஜீவநான் ஏதுமில்லை. (ப)

2. செல்வம் வறுமையெல்லாம் சிறுமை பெருமையெல்லாம்
நல்லவை தீயவெல்லாம் **ரமணனே** யன்றியில்லை!
வல்லவன் அருளின்வழி வாழ்வையே ஒப்படைத்தோம்
எல்லா மிறைவனன்றி யென்னதென் றேன் நினைப்போம்?(ப)

3. உடல்பொரு ளாவியிலே யுரிமைகொண் டாடாமலே
கடவுள் ரமணன் கையிற் கருவிக ளாய்க்கொடுத்தோம்
உடையோ னிடமவற்றை யொப்படைத்த காரணத்தால்
விடவே றென்றுமில்லை வேண்டுவது மொன்றுமில்லை (ப)

4. விரும்ப வெறுக்கவென்றே வேறென்றும் வெளியிலில்லை
திரும்பி யகமுகமே சிவசிவ வென்றிருப்போம்
விரும்புவோ னெழுவதெங்கே வெளியு முள்ளுமெங்கே
திரும்புவ **திருப்**பேயன்றிச் செயல்வடி வாவதில்லை. (ப)

5. இருப்பாம் அறிவையன்றி இன்பம்வே றென்றுமில்லை
இருப்பெனும் சக்தியன்றி யெழுச்சியன் னியமுமில்லை
இருப்பவ னிருப்பதன்றி யெழுந்திட எவனுமில்லை
இருப்பே ரமணனென்னும் இறைவனைக் காண்பதனுல் (ப)

23. ஒன்றே ஞாபகம்

(வந்தே மாதரம் என்ற மெட்டு)

ஒன்றே ஞாபகம்—நமக்—கொன்றே ஞாபகம்
ரமணா ரமணா உயிர்க்குயிர் நாயகம்
உன்றன் நாமமே தாரகம். (ஒன்)

குன்றரு ணேசன் கிரிவல சேவனம்
குருரம ணேசன் றிருவடி ஜீவனம்
அவாங்மனம் அஹமவன் நிவேதனம்
அருணு சலமே ஞாபகம்—அஃ
தொன்றே ஞாபகம்.

24. வாழி ரமணன்

இராகம்- மோஹனம் தாளம்- ஜம்பை

1. ஆதியரு ணுசலன பேதகுரு வாழ்க
ஆத்மவடி வானபர மாத்மனவன் வாழ்க
ஜோதியருட் ஜோதிசிவ ஜோதிகுரு வாழ்க
ஜோதிரம **ணேசகுரு** ஜோதிசிவன் வாழ்க. (ஆ)

2. பாமரரும் பார்த்திடவே பாரிலுறு பாதன்
நாமரம **ணேசனரு** ணுசலகு மாரன்
மாமனம ழித்துவச மாக்குமஹா வீரன்
மாயைவலை மீட்டருள வந்தவதி கரான். (ஆ)

3. சகடமென இடமகலும் விடவுலக ஆர்த்தி
தனதடியிற் படுமடியர் விடவருளுங் கீர்த்தி
கபடமட அட்மனதைத் திடமுடன ழுத்தி
தகிடதக நடனமிடும் **ரமணகுரு மூர்த்தி.** (ஆ)

4. சதம்தனது பதம்எனவே தவம்புரியும் தாபம்
மிதந்தனையும் மிகுந்திடவே விரைந்தருளும் தீபம்
பதம்பரவி நிதம்பணிவோ ரிடம்முன்னுள பாபம்
அதம்படவே வதம்புரியும் விதம்**ரமண தீபம்.** (ஆ)

5. தீனஜன மானிடரும் க்ஷேமமுறக் காவாய்
மோனவழி யானவரு ளியுங்குரு வாவாய்
தானகரு ணுகரனே ஞானமய தேவா
சற்குருப ரா**ரமண தேவ**ஜெய தேவா. (ஆ)

II துதிகள்

1. ஸ்ரீ அருணாசல லிங்காஷ்டகம்

இராகம் - கல்யாணி　　　　　　　　　　　　　　　　தாளம் - ஆதி

1. ஆதியு மந்தமி லாச்சிவ லிங்கம்
அரியய னிடையெழு மக்கினி லிங்கம்
ஜோதிச தாசிவ ஜோதியி லிங்கம்
சூட்சும வாத்மசொ ரூபவி லிங்கம்
பாதிசி வைக்கருள் பங்குள லிங்கம்
பண்டெழு மார்கழி யாதிரை லிங்கம்
நாதமு தற்பொரு ளாகிய லிங்கம்
ரமணனெ னும்அரு ணாசல லிங்கம்.

2. மூலம தாகமு ளூத்தெழு லிங்கம்
முக்தர் சுவைத்திடுங் கைக்கனி லிங்கம்
ஆலமி டற்றில டக்கிய லிங்கம்
அன்பருக் காதர வாகிய லிங்கம்
மாலய னேத்திவ ணங்கிய லிங்கம்
மாமணி வாசகர் வாழ்த்திய லிங்கம்
ஞாலமி தற்கக மாகிய லிங்கம்
ரமணனெ னும்அரு ணாசல லிங்கம்.

3. சுந்தர பொன்மய சோபித லிங்கம்
சுத்தம னத்திற்சு கோதய லிங்கம்
அந்தர தேவர்கள் பூஜித லிங்கம்
ஆவர ணாதிய கற்றிடும் லிங்கம்
பந்தம கன்றவர் சொந்தவி லிங்கம்
பக்குவ ருள்ளமி னித்திடும் லிங்கம்
நந்தமிழ் நாட்டெழும் ஞானவி லிங்கம்
ரமணனெ னும்அரு ணாசல லிங்கம்.

4. சத்தினர் செய்பிர தக்ஷிண லிங்கம்
சத்தறி வின்புரு நித்திய லிங்கம்
சித்தர்கள் முக்தர்கள் சேவித லிங்கம்
தீனத யாளச தாசிவ லிங்கம்

பக்தியு ளத்தினிற் சிக்கிய லிங்கம்
பண்ணவர் பாடும்ப ராபர லிங்கம்
நத்தின வர்க்கருள் ஞானவி லிங்கம்
ரமணனெ **னும்அரு ணசல லிங்கம்.**

5. சோமனைச் சென்னியிற் சூடிய லிங்கம்
தூயசு யம்புரு வாகிய லிங்கம்
காமனைச் சுட்டக டைக்கணி லிங்கம்
கண்ணுத லாங்கரு ணகர லிங்கம்
ஏமனை நூறிய விச்வர லிங்கம்
எங்குரு வாம்ரம **ணேச்வர லிங்கம்**
நாமநி னைப்பருள் ஞானவி லிங்கம்
ரமணனெ **னும்அரு ணசல லிங்கம்.**

6. மூவினை மூலம றுக்குமி லிங்கம்
மோனம தாலுப தேசிக லிங்கம்
சாவினை மீறிய சாக்ஷியி லிங்கம்
தத்பொரு ளாகிய சங்கர லிங்கம்
ஆவியை யீர்க்கும்**அண் ணமலை லிங்கம்**
ஆருயி ராகிய வாத்தும லிங்கம்
நாவுயர் நால்வரும் பாடிய லிங்கம்
ரமணனெ **னும்அரு ணசல லிங்கம்.**

7. பூரண ஞானபு ராதன லிங்கம்
போத சுகப்பரி பூரண லிங்கம்
ஆரண மேன்முடி வாகிய லிங்கம்
அஞ்சலென் றேயப யந்தரும் லிங்கம்
காரண மற்றருள் காட்டுமி லிங்கம்
கவலைய றுத்திடுங் கற்பக லிங்கம்
நாரண னுன்முக னுடிய லிங்கம்
ரமணனெ **னும்அரு ணசல லிங்கம்.**

8. அட்டமு கத்தரு ணசல லிங்கம்
அந்தர்மு கத்தக மாகிய லிங்கம்
வெட்ட வெளிப்பொரு ளாகிய லிங்கம்
வீரவி ராகியர் மேவிடு லிங்கம்

சுட்ட மனத்திரு நீறணி லிங்கம்
சொல்மனம் ஒன்று*மண் ணுமலை லிங்கம்
நட்ட நடுப்பொரு ளாகிய லிங்கம்
ரமணனெ னும்அரு ணாசல லிங்கம்.

2. ஸ்ரீ ரமண சரணம்

இராகம் - கேதாரம் தாளம் - ஆதி

1. அருணா சலனே ரமணா சரணம்
அண்ணா மலையாய் சரணம் சரணம்
கருணா நிதியே சரணம் சரணம்
கடவுள் ரமணா சரணம் சரணம்
குருநா யகனே சரணம் சரணம்
கொடையோ ருருவே சரணம் சரணம்
நரவே டமுறும் சிவனே சரணம்
ரமணா சரணம் சரணம் சரணம்.

2. தீனர்க் கருள்வோய் சரணம் சரணம்
தேவா ரமணா சரணம் சரணம்
மோனப் பிழம்பே சரணம் சரணம்
மூலப் பொருளே சரணம் சரணம்
ஈனக் களைநீக் கிடுவோய் சரணம்
எனையா ளுடையாய் சரணம் சரணம்
ஞானக் களிறே சரணம் சரணம்
ரமணா சரணம் சரணம் சரணம்.

3. ஆசைப் பொருளே சரணம் சரணம்
அப்பா ரமணா சரணம் சரணம்
மாசற் றவனே சரணம் சரணம்
மருணீக் கிடுவோய் சரணம் சரணம்
தேஜோ மயனே சரணம் சரணம்
சிவமங் களனே சரணம் சரணம்
ராஜர்க் கரசே சரணம் சரணம்
ரமணா சரணம் சரணம் சரணம்.

*சொல், மனம், ஒன்றும் நெருங்கமுடியாத லிங்கம் என்பது பொருள்.

4. என்மா குருவே சரணம் சரணம்
இறைவா ரமணு சரணம் சரணம்
புன்மை யொழிப்போய் சரணம் சரணம்
புனிதா புகலே சரணம் சரணம்
தொன்மா முடியே சரணம் சரணம்
தொழுவார் துணையே சரணம் சரணம்
நன்மை யருள்வோய் சரணம் சரணம்
ரமணு சரணம் சரணம் சரணம்.

5. கண்கா ணவருங் கடவுள் சரணம்
கவலைய றுப்போய் கதியே சரணம்
பண்பா டளிக்கும் பரமா சரணம்
பதியே **ரமண பகவான்** சரணம்
மண்பால் வந்தம ஹேசா சரணம்
மறைநூல் முடிவோர் வடிவே சரணம்
நண்பா நாதா சரணம் சரணம்
ரமணு சரணம் சரணம் சரணம்.

6. அற்றூர்க் கருள்வோய் சரணம் சரணம்
அன்பே யருளே சரணம் சரணம்
பெற்று யென்னைப் பிதாவே சரணம்
பிரியாய் பெரியோய் சரணம் சரணம்
பற்றே களைவோய் சரணம் சரணம்
பற்று யுனையே தருவோய் சரணம்
நற்று ணிழலே யருள்வாய் சரணம்
ரமணு சரணம் சரணம் சரணம்.

7. கடுவா தையெலாங் களைவாய் சரணம்
கௌபி னதரா சரணம் சரணம்
விடுவா யில்லாய் சரணம் சரணம்
வேதப் பொருளே சரணம் சரணம்
தொடுவா யுள்ளே சுயமே சரணம்
துரியா தீதா சரணம் சரணம்
நடுவாய் நடமா டிடுவாய் சரணம்
ரமணு சரணம் சரணம் சரணம்.

8. ஆதா ரமதா யாஞய் சரணம்
அம்மை யப்பா குருவே சரணம்
பாதா தரமே தருவாய் சரணம்
பரஞா னமயப் பழமே சரணம்
வேதா திருமாற் கரியாய் சரணம்
வினைசுட் டழிக்கும் விழியாய் சரணம்
நாதா தீதா சரணம் சரணம்
ரமணு சரணம் சரணம் சரணம்.

9. தாயே தமரே சரணம் சரணம்
தலைவா முதல்வா சரணம் சரணம்
வாயாற் றுதிப்போர் வரமே சரணம்
மனவாக் கிறந்த மௌனி சரணம்
மாயா மயக்க மறுப்போய் சரணம்
மன்ஞ சரணம் மகிழ்வே சரணம்
நாயே னெனையுங் காப்போய் சரணம்
ரமணு சரணம் சரணம் சரணம்.

10. தாஞய் தலைமை பெற்றுய் சரணம்
தானே தாஞம் பொருளே சரணம்
ஞாஞ கார ரமணு சரணம்
நான்நா னெனவுள் நடிப்போய் சரணம்
தேஞர் நாமத் திதிப்பே சரணம்
தேசா விசா சரணம் சரணம்
"நாஞ ரெனப்பார்" என்போய் சரணம்
ரமணு சரணம் சரணம் சரணம்.

11. அலியாண் பெண்ணு மல்லாய் சரணம்
அவையா யவைகட் கரியாய் சரணம்
புலிவாய்க் கொளல்போற் புணர்வாய் சரணம்
புறமே கவிடாப் புகலே சரணம்
கலிவா யெனைமீட் டருள்வாய் சரணம்
கரையற் றவருட் கடலே சரணம்
நலியாப் பொருளே சரணம் சரணம்
ரமணு சரணம் சரணம் சரணம்.

12. இமையும் பிரியா விறைவா சரணம்
இமையோர்க் கரசே சரணம் சரணம்
எமையாட் கொண்டாய் சரணம் சரணம்
எல்லாம் வல்லாய் சரணம் சரணம்
தமியே னருமைத் தந்தாய் சரணம்
தயவே புரிவாய் சரணம் சரணம்
நமனின் நமனே சரணம் சரணம்
ரமணு சரணம் சரணம் சரணம்.

13. வல்லார்க் கெல்லாம் வல்லாய் சரணம்
மனமற் றெளிர்மா மலேயே சரணம்
எல்லாப் பொழுது முள்ளாய் சரணம்
இங்கங் கெங்குமி ருப்போய் சரணம்
பொல்லாங் கொழிக்கும் புனிதா சரணம்
புவிமேற் குருவாம் பொருளே சரணம்
நல்லோர்க் கினிக்கும் நாமா சரணம்
ரமணு சரணம் சரணம் சரணம்.

14. பூமிக் கிதயப் பொருப்பே சரணம்
பூன்றப் பொருளே சரணம் சரணம்
ஓம்உற் பவிக்கு மொன்றே சரணம்
உளமா மகமே சரணம் சரணம்
காமத் திரளைக் கடிவோய் சரணம்
கவருங் காந்தக் கண்ணு சரணம்
நாமச் சுவையே சரணம் சரணம்
ரமணு சரணம் சரணம் சரணம்.

15. தேவா திபனே சரணம் சரணம்
திரையற் றசிவத் தெளிவே சரணம்
பாவாற் பரவும் பயனே சரணம்
பகவான் ரமணு சரணம் சரணம்
சாவா நிலேயே தருவோய் சரணம்
தனுபோ தமழித் தருள்வோய் சரணம்
நாவா யானேய் சரணம் சரணம்
ரமணு சரணம் சரணம் சரணம்.

16. தமசற் றொளியே தருவோய் சரணம்
தனிலாழ் தவவித் தையனே சரணம்
சமனு ருமிலாச் சதுரா சரணம்
தானு யொளிர்சத் தகமே சரணம்
கமலோ னரிசங் கரனே சரணம்
கரையேற் றுகடைக் கண்ணு சரணம்
ரமணு க்ஷரமா வடிவே சரணம்
ரமணு சரணம் சரணம் சரணம்.

3. ஸ்ரீ ரமணேச தெய்வம்

இராகம் - மாயாமாளகௌளை தாளம் - ஏகம்

1. அண்ணும லக்கண்ண மர்ந்தோங்குந் தெய்வம்
அனுயா சமாய்க்கட் டழித்தாளுந் தெய்வம்
விண்ணோங்கு தேவர்க்கு மெட்டாத தெய்வம்
விழிப்பிற் றுயின்றோர்வி ழிக்கண்ட தெய்வம்
கண்ணுலி ழுத்துக் கரைத்துக் கதிக்கே
கலக்கத்த ரும்போத காமாரி தெய்வம்
திண்ணங்கொ டுத்தென்னுட் டித்திக்குந் தெய்வம்
சிவப்ரம்ம **ரமணேச தெய்வமே தெய்வம்.**

2. எல்லோருங் கைவிட்டி கத்தாத ரங்கெட்
டிருக்கின்ற தீனர்க்கு மீகின்ற தெய்வம்
மெல்லப்பி டித்தேய ருட்பொற்கு கைக்குண்
மெருக்கிட் டொளிர்விக்கு மெஞ்ஞான தெய்வம்
வெல்லற்க ரும்மாய வேரைப்ப றிக்கும்
விசாரப்பெ ருஞ்சக்தி வேலேந்துந் தெய்வம்
செல்லாவ கத்துட்ப்ர தேசத்தி ழுக்கின்ற
சிற்சக்தி **ரமணேச தெய்வமே தெய்வம்.**

3. பண்கொண்டு பாடப்ப தங்கூட்டுந் தெய்வம்
பணிக்கன்றி வீண்போகப் பண்ணுத தெய்வம்
மண்கண்ட தொல்கால மாகக்கி டைக்காத
மௌனுேப தேசத்தின் வல்லாண்மை காட்டுங்

கண்கண்ட தெய்வங்க திக்கான தெய்வம்
கலங்காத தீரங்க ணித்தாளுந் தெய்வம்
திண்கொண்ட மாயந்தெ ரித்தோட்டுந் தெய்வம்
சிவப்ரம்ம **ரமணேச தெய்வமே தெய்வம்.**

4. தாபப்பு யற்காற்ற டுத்தாளுந் தெய்வம்
தனக்கென் றெணேக்கொள்ளுஞ் சத்தான தெய்வம்
கோபக்கொ டும்பேயின் பாபத்திற் காட்டிக்
கொடுக்காது காக்குங்கு றிப்புள்ள தெய்வம்
ஆபத்து ருப்பாது காப்பான தெய்வம்
அறப்பாதை மீருவ ணப்பான தெய்வம்
தீபப்ப ரஞ்சோதி தெய்வம் சிதேகம்
சிவப்ரம்ம **ரமணேச தெய்வமே தெய்வம்.**

5. தர்க்கித்து வாதாடித் தானுண்மை காணத்
தடிப்புற்ற வாயர்க்குச் சாராத தெய்வம்
மிக்கத்த டித்தப்ப ழம்புத்த கத்திற்
படித்தும்பு ரட்டற்கு ளெட்டாத தெய்வம்
நெக்குற்ற நெஞ்சத்தி னேயம்பு ரண்டே
நினைத்துத்து திப்போரின் பக்திப்பெ ருக்கிற்
சிக்கித்தி திக்குஞ்சி தானந்த தெய்வம்
சிவப்ரம்ம **ரமணேச தெய்வமே தெய்வம்.**

6. கட்டற்ற ஞானக்க ளிப்பான தெய்வம்
கதிக்கன்றி மக்கட்க(ண்) ணக்கட்டுஞ் சித்தி
எட்டுந்தெ ரிந்தோர்க்கு மெட்டாத தெய்வம்
எலாப்பற்றும் விட்டோர்க்கெ ளித்தான தெய்வம்
மட்டற்ற வானந்த வாரிக்கி ழுத்தே
வருங்கங்கை யாய்வந்து வாய்த்துள்ள தெய்வம்
சிட்டர்க்க ருட்சச்சி தானந்த தெய்வம்
சிவப்ரம்ம **ரமணேச தெய்வமே தெய்வம்.**

7. பார்வைக்கு ளேவந்து பட்டோரை யெந்தப
படிக்கும்மு டிக்கும்ப லங்கொண்ட தெய்வம்
ஆர்வங்கொ டுத்தாசை காட்டிப்பி டித்தே
யகங்காரம் மாய்க்கின்ற அன்பான தெய்வம்

கார்வந்து மூடாதென் கண்ணைத்து டைக்குங்
கருத்தாற்க ணத்துங்கண் மூடாத தெய்வம்
சீர்வந்து பாடத்தெ ளிந்தூற்றெ னக்குட்
டெரிக்கின்ற **ரமணேச தெய்வமே தெய்வம்.**

8. உறக்கத்த மூந்தும்பு விக்குண்மை யீதென்
றுணர்த்தற்கு டற்பெற்று லாவுற்ற தெய்வம்
பிறக்கப்பு சிக்கப்பெ ருந்துன்பு மூன்றே
யிறக்கப்பி டிக்காத வெல்லார்க்கு மின்பஞ்
சிறக்கப்பி றக்காதி றக்கத்தெ விட்டா
தினிக்கப்பெ றும்பேறு மெய்தப்ப ரக்கண்
திறக்கத்த ரும்ஞான தீபப்ர காசச்
சிவப்ரம்ம **ரமணேச தெய்வமே தெய்வம்.**

9. பாராதி யண்டம்ப ணிந்தேத்துந் தெய்வம்
பணிந்தேனை வாவென்று பாலூட்டுந் தெய்வம்
நாராய ணன்பங்க யத்தேவர் நாடும்
நடுப்போத மாயுண்ண டிக்கின்ற தெய்வம்
விராதி வீரர்க்கு வித்தான தெய்வம்
விழிக்காத நெஞ்சில்வி ளங்காத தெய்வம்
தீராத ஜென்மஞ்சி தைக்கின்ற தெய்வம்
சிவப்ரம்ம **ரமணேச தெய்வமே தெய்வம்.**

10. கள்ளர்க்கு மன்பேக ளித்தீந்த தெய்வம்
கணக்கற்ற ஜீவர்க்க திக்குற்ற தெய்வம்
தள்ளத்த காதென்றெ னைக்கொண்ட தெய்வம்
தனக்கேப ணிக்கொண்டெ னைத்தாங்குந் தெய்வம்
வள்ளற்பி ரானென்று மண்ணோடு விண்ணும்
வணங்கும்பெ ருந்தெய்வம் வந்தனப ருள்ளம்
தெள்ளத்தெ ளிந்தோங்குஞ் சித்தான தெய்வம்
சிவப்ரம்ம **ரமணேச தெய்வமே தெய்வம்.**

11. கானற்பு னற்கண்ட வாவுங்க ருத்தைக்
கடாக்ஷித் திழுக்குங்க ழற்காந்த தெய்வம்
மோனத்தி ருந்தேமு முக்ஷுக்க ளுள்ளே
முனைப்பற்ற ழிக்கும்மு மூப்போத தெய்வம்

நானற்ற பேரின்ப ஞானம்பெ றற்கிந்த
    நான்யார்? எனக்கான லாமென்ற தெய்வம்
தீனர்க்கு ளேதீன னேனும்வி டாதச்
    சிவப்ரம்ம **ரமணேச தெய்வமே தெய்வம்.**

4. அண்ணமலை ரமணண்டி!

1. அண்ண மலைரம ணண்டி—அரு
    ணசல ஞற்பிறப் பாழியைத் தாண்டி,
கண்ணுலென் உள்ளத்தைத் தூண்டி—அருட்
    காதலாற் கண்ணீரைக் கக்கவைத் தாண்டி! (அ)

2. தாய்தந்தை சாமியு மானுன்—குரு
    தாரக நாமமும் தன்பெய ரானுன்;
வாய்வந்து வாழ்த்திட வைத்தான்—வேறு
    வாழ்வறு மாறென் மனத்தைச் சுவைத்தான். (அ)

3. மொட்டைத் தலையழ காலே—மன
    மோஹன மோன முறுவலி ஞலே,
கட்டழன் மேனியி ஞலே—என்
    கண்ணும் மனமுங் கவர்ந்தத ஞலே, (அ)

4. "**ரமண**" னெனும்பெய ராலே—அநு
    ராக மெழுங்குரல் நாதத்தி ஞலே,
அமல வருட்கணை யாலே—என்னை
    அடியோடு கொள்ளை யடித்தத ஞலே, (அ)

5. சிவவடி வானதி ஞலே—எல்லா
    தெய்வமும் "**நான்**"என்று செப்பின தாலே,
தவவொளி தன்முகத் தாலே—கண்ணுற்
    சங்கை யறவென்னைச் சந்தித்த தாலே, (அ)

6. சோண மலைப்பெய ராலே—அதிற்
    சொக்கிக் கிடக்குஞ் சுகமயத் தாலே,
காண வரும்பல ராலே—"இவன்
    கண்ணன்!"என் றேயாசை காட்டின தாலே, (அ)

7. பார்வை மயக்கத்தி னாலே—திரு
பாத மலர்மது பானத்தி னாலே,
தேர்களிற் றின்னடை யாலே—கண்டென்
சிந்தை கலங்கித் தெளிந்தத னாலே, (அ)

8. கோவணத் தாடையி னாலே—அருள்
கொண்டசொற் கூறிதழ்க் கோவையி னாலே,
பூவணப் பொற்கையி னாலே—அவன்
போதித்த பேரின்பப் போதையி னாலே, (அ)

9. மும்மடி தன்வயி ரூலே—அவன்
மூப்பிலு மிளமையே நான்கண்ட தாலே,
சிம்மகம் பீரத்தி னாலே—குரு
தக்ஷிண மூர்த்தித் திருவடி வாலே, (அ)

10. இத்தனைப் பேரழ காலே!—மன
மெல்லாம் பறிபோயி னேன்அவ னாலே!
"சத்திய மாம்பொருள் நானே"—என்றான்
தன்னை மறந்தவன் தன்வய மானேன். (அ)

11. ஆசையைக் காட்டி யழைத்தே—புவி
யாசைப் பிசாசை யடியோ டழித்தே,
பாச மளித்தவன் பாலே—மனம்
பற்றிய தாசைப் பயித்தியத் தாலே! (அ)

12. மோஹன மோனச் சிரிப்பே—அவன்
முகத்தினிற் கண்டபின் எனக்கே திருப்பே?
சாகவும் நான்துணி வுற்றேன்—இனித்
தாழ்வுவாழ் வெல்லாமென் தன்பொறுப் பற்றேன். (அ)

13. எல்லா மெனக்கென் றிருந்தேன்—உடல்
என்னுரு வென்றிட வேகற்றி ருந்தேன்;
சொல்லாமற் சொல்லி ஏமாற்றி—எல்லாச்
சொத்தும் பறித்தென்னைச் சோம்பேறி யாக்கி, (அ)

14. தன்னைப்போ லாண்டியாய்ச் செய்தான்—என்
 தாய்போல வந்து தனிப்படச் செய்தான்!
"உன்னைக் கொடு"வென்று கேட்டான்—நான்
 ஓடி ஒளிந்தாலு மேவிட மாட்டான்! (அ)

15. தன்னையே நம்பிடச் சொல்வான்—யாரும்
 தானென் றெழுந்தால்தன் சக்தியால் வெல்வான்;
என்னை விடாதவ னென்றே—யானும்
 எல்லோரை யும்விட் டவன்பின்னே சென்றேன். (அ)

16. நானெங்கும் போகச் சகியான்—தானே
 நானென் றணைந்திடும் ஞானச் சுகியான்;
மானமும் போகச் சிரித்தான்—என்னை
 வாழவைப் பான்போல வந்து வரித்தான்! (அ)

17. "என்னிட மேயிரு" என்பான்—"வே
 றெதையும் பாராதே, நீ என்னைப்பார்" என்பான்!
அன்னிய மில்லாத அன்பால்—இன்(று)
 அவனினும் அன்புளார் யாருளர் என்பால்? (அ)

18. யாரிட மும்விட மாட்டான்!—"உனக்(கு)
 யார்வேண்டும்? நானல்ல வோ?"என்று கேட்டான்!
வேறிடம் வேண்டுவ தற்றேன்—என்னை
 வேட்ட ரமணன்சொல் மேன்மையைக் கற்றேன். (அ)

19. யாருங் கேளாமலே பேசி—சொல்வான்
 "அனன்னிய மாகவே நீஎன்னை நேசி";
பாருங் ககனமும் ஏசி,—தானே
 பயனென்று னேபர தேசிசந் யாசி! (அ)

20. கோவண மொன்றே யுடுத்தான்—என்னைக்
 கொண்டுவாழ் வெல்லாமுங் கொள்ளை யடித்தான்;
ஜீவன மெல்லாங் கெடுத்தான்—"நமோ
 ஸ்ரீரம ணாய"வே சொல்லிக் கொடுத்தான்! (அ)

21. கண்ணும் மனமும் களிக்க—புவிக்
காதலும் வாழ்வும் கசந்து புளிக்க,
உண்ணமு தாகவி ருந்தான்—வே
றெருருவ ரெணப்பற்ற வுள்ளம் பொருந்தான்! (அ)

22. எல்லாம் அவனென்ற போதோ—எனக்
கேதுங் குறைவில்லை என்றான்;இப் போதோ,
சொல்லாம லெங்கோ மறைந்தான்!—என்
துக்கத்தைச் சொல்லிக்கொள் வேன்யாரி டந்தான்? (அ)

23. "என்னப்பன் என்னப்பன்" என்றே—அழு
தேங்கித் துயரமு மெய்தின னின்றே;
பொன்னைப் புவனத்தைக் கொண்டோ—வாழ
புத்தி யெனக்கினி போவது முண்டோ? (அ)

24. பித்துப் பிடித்தவ னுனேன் அந்தப்
பேயாண்டி யென்னைப் பிரிந்ததுந் தானே!
செத்து மடிந்தாலு(ம்) நன்றே—அருள்
தேசிக னென்முன் தெரிந்திடா வின்றே! (அ)

25. எப்போது முள்ளவ னென்றான்—என்னை
யேமாற்றித் தன்னுரு வோடெங்கு சென்றான்?
தப்பேதுஞ் செய்துவிட் டேனே?—அதைத்
தானெண்ணி யென்னையுந் தள்ளிவிட் டானே? (அ)

26. தொட்டதைத் "தூ"வென்று தள்ளான்—தொட்டுச்
சொந்த மளித்தவன், ஏனென்னைக் கொள்ளான்?
விட்டக லாததி றத்தான்—அருள்
வெண்கதிர் வீசும்பொன் மேனி நிறத்தான்; (அ)

27. நஞ்சமுங் கள்வருங்கூட—பொறுத்
தான்;குரு நாதன் எனைப்பிரிந் தோட
வஞ்சம் நினைத்தது மேனோ?—மண
வாளனில் லாததோர் வாழ்வெனக் கேனோ? (அ)

28. ஆண்டவன் பின்விட லாமோ?—அரு
ணுசலன் பிள்ளையீ தாற்றிட லாமோ?
"ஆண்டியை நம்பிட லாமோ?"—என்றிவ்
வவனியர் ஏச அவன்கேட்க லாமோ? (அ)

29. ஒன்றுமில் லாதானை யெண்ணி—நான்
உருகுதல் கண்டுல கேளனம் பண்ணி
நன்று நகைத்திட வைத்தான்—உள்ள
நாணமும் போகட்டும் மென்றோ நினைத்தான்? (அ)

30. இப்படி யாருஞ்செய் வாரோ?—தன்னை
இச்சித்த வென்னையும் ஏமாற்று வாரோ?
அப்படிச் செய்திடான்! ஐயே!!—அவன்
ஆசை எழுந்துநான் அழிவது மெய்யே!!! (அ)

31. "நானிதோ! நானிதோ!!" என்றே—குரு
நாத னிருப்ப துணர்ந்தாலு மின்றே
மானிட னுகவா ராரோ?—பாத
மாமலர் சூட மகிழ்ந்துதா ராரோ? (அ)

32. உள்ள முடைந்தழும் போது—அவன்
ஓங்காரக் கிண்கிணி கேட்குமென் காது!
மெள்ள வவன்குரல் கேட்கும்—ஆனுல்
மேனியைக் காணு துளமங்க லாய்க்கும்! (அ)

33. ஆவ லடங்கிடு முன்னே—மறைந்
தான்எனக் கார்துணை யாவது மின்னே?
யாவையும் வல்லவன் றுனே—உரு
வாகவென் கண்முன்னர் ஏன்வந்தி டானே? (அ)

34. எக்குற்ற மும்மன்னிப் பானே!—பின்னர்
என்குற்றங் கண்(டு)ஏன் பிரிந்திருப் பானே?
திக்கற்ற வென்னைப்பா ராரோ?—குரு
தேவ னுருவிற் றிரும்பிவா ராரோ? (அ)

35. இன்றேனு மென்றேனும் மீண்டும்—ரம
ணேச னுருக்கொண்டிங் கேவர வேண்டும்!
அன்றேல் அகதிநான் பாராய்!—அரு
ணசலா, நின்பிள்ளை, என்முன்னங் தாராய்! (அ)

5. இன்னும் எத்தனை நாள் ?

இராகம் - குறிஞ்சி தாளம் - திசிர ஏகம்

1. இன்னு மெத்தனை நாள்—மாயை
ஏகாதி பத்திய மென்னிடமே!
அன்னை யரற்றிவிட் டால்—அதற்
கப்புற மண்ண னடிப்பானோ?
என்னைக் காத்திடவே—ரம
ணேச னெழுந்தான்; நீசமன
முன்னை வாசனைகள்—இனி
முண்டெழ முடியுமோ முன்போலே (இன்)

ஏ ஆசைப் பேயே !

2. ஆசைக் கொடுபேயே—உன்
ஆட்டமெல் லாமும டங்கிவிடும்
நீச உலகினிலே—சுகம்
நெல்லள வில்லை எனுநிஜத்தை
ஈசன் ரமணனருள்—வந்
தென்னுள் விளக்கி யெழுந்ததனால்
ஓசைப் படுத்தாமல்—நீ
ஓடி மறைந்துன் னுருவழிவாய்! (இன்)

ஏ கோபமே!

3. கோபப் பெருமூடா—உன்
கொட்ட மடங்கிக் குறும்பழியும்
ஆபத் தனுகாமல்—பே
ரன்புப் படையை யளித்ததனால்

பாபச் சுடுமொழியை—ஸ்ரீ
பகவா னறுப்பார்! பரமான்ம
தீபத் தொளிமுன்னே—உன்
றிருட்டுத் தனமற் றுருவழிவாய்! (இன்)

ஏ உலோபமே!

4. நரகச் சுயநலமே—உன்
நாடக மோய்ந்திடு(ம்) நாளினிமேல்
பருகு(ம்) நீர்முதலாய்—எல்லாம்
பலர்க்கு மளிப்பதிற் பார்சுகத்தை!
அருகில் ரமணனருள்!—இனி
யாருனைச் சுகமென நம்புவரே?
வரகி லிருந்துமண—நெய்
வடியுதென் றுல்நம்ப மனம்வருமோ? (இன்)

ஏ மோகமே!

5. மோக விடப்பாம்பே—உன்
முன்பல் லிரண்டு முடைந்துவிடும்!
சாகப் போகின்ருய்—ஸ்ரீ
சற்குரு ரமண னருளாலே!
தேகத் தினைநானுய்—விடம்
செலுத்தி மயக்குமுன் றிறமையெல்லாம்
போகப் போகிறதே—பரி
பூரண வுண்மை புரிந்துவிடும்! (இன்)

ஏ மதமே

6. கெட்டாய் மதநாயே—இனிக்
கெஞ்சிடி னும்மிடம் நெஞ்சிலில்லை
முட்டாள் தனமாக —நானே
முதலிலென் றெதிலும் முனைவேனே!
விட்டே னுன்தொடர்பை—குரு
வீர ரமணனின் வீக்ஷணத்தால்!
சிட்டாய்ப் பறந்திடுவாய்—சீசீ
திரும்பிப் பாராதோடி மறைந்திடுவாய்! (இன்)

ஏ பொறுமையே!

7. அற்பப் பொறுமையனே—உன்
 னாட்சி முடிந்தரு ளாட்சிவரும்
முற்பட் டகமகிழ்வேன்—யார்
 முன்வந்து மேன்மையை முன்னிடினும்
பற்பல நாளாக—உன்னாற்
 பட்ட தவமானம்! பாக்யமில்லை!
இப்போ தோடிவிடு—ரம
 ணேசன்கை வாளுனை வீசிவிடும்! (இன்)

ஏ அன்புருவமே!

8. அன்புப் பெருந்துணையே—அரு
 ணாசல னேரம ணாகுருவே
இன்பத் தவநிதியே—பர
 மேச்சுர னேயினி யேனுமெனைத்
துன்பப் படுத்திவந்த—அறு
 துஷ்டப் பகைவரைச் சுட்டெரித்தே
உன்பற் றளித்தருள்வாய்—ஆன்ம
 உத்தம பக்தியை யூட்டிடுவாய். (இன்)

9. எந்தை குருரமணா—உனக்
 கென்மே லிருக்கு மிரக்கமதால்,
சந்தே கத்தினுக்கே—யிடம்
 சற்றுமில் லாமலென் சத்துருமுன்
பந்தயம் வைத்துவிட்டேன்!—எனைப்
 பாது காப்பதுன் பாரமையே!
வந்தே யுதவிடுவாய்—அருள்
 மான ரக்ஷணமுடன் வாழ்ந்திடவே! (இன்)

ஏ ரமணக் கண்ணா!

10. போரை மூட்டிவிட்டாய்—உள்ளே
 பொல்லாதா ருள்ளதைக் காட்டிவிட்டாய்;
யாரைத் துணைகொண்டே—புகை
 யரக்க ரறுவரை யதம்புரிவேன்?

தேரை நடத்தியருள்!—யுத்தம்
செய்ய வெனக்குத் திறமையருள்!
வீரன் ரமணனருள்—என்னுள்
வென்றதென் றிங்கே விளக்கியருள்! (இன்)

6. பாப்பாப் பாட்டு

காப்பு

பாப்பாவி னோடு பகவான் ரமணதுதிப்
பாப்பாட வேகடைக்கண் பார்ப்பானே—சாப்பாடா
நாப்பாட நாம(ம்) நடுநாட வுள்ளமென்றன்
காப்பாய வேழமுகன் காண்.

பாட்டு

இராகம்-புன்னுகவராளி தாளம்-ஆதி

1. ஞானக் குழந்தையடீ நல்லபாப்பா—நீ
ரமணு ரமணுவென்று சொல்லுபாப்பா
ஆனந்த மாகஜெபித் தாடுபாப்பா—சிவன்
அவரேநம் தந்தையடீ யன்புப்பாப்பா.

2. குற்றமில் லாதமனங் கொண்டபாப்பா—நீதான்
குருவைக்கண் டுய்வடையக் கூடும்பாப்பா
மற்றவர் வயதுமுதிர் வெய்திபாப்பா—விண்
வாதம் புரிவாரடீ வண்ணப்பாப்பா.

3. சச்சிதா னந்தமுடற் றுங்கிநடந்தே—யிந்தத்
தாரணியில் வந்ததடி தங்கப்பாப்பா
அச்சுத னயனரு னுயமூவரும்—அதற்
கயலாகா ரென்றுதெளிந் தாடுபாப்பா.

4. அண்ணு மலையினவ தாரமேயடீ—அரு
ணுசல ரமணன்அவன் நாமம்பாப்பா
கண்ணுரக் கண்டதோர் கடவுளிவரே—மற்றுங்
கடவுளெவ் விதங்கண்ணிற் காணும்பாப்பா?

5. யாருங் குருவில்லாம லாத்மஞானியாய்த்—தானே
யவனிக்கெல் லாங்குருவா யானான்பாப்பா
சேருந் தொண்டர்களையந் தீர்ந்துதெளியும்—படி
திவ்ய திருஷ்டியருள் செய்வான்பாப்பா.

6. இருந்த படியிருந்தே யுலகமெல்லாந்—தன்பால்
இழுத்தருள் செய்தபர மேசன்பாப்பா
அருந்தவஞ் செய்தடையு மாத்மஞானமே—கைமேல்
அதிசுல பமாய்த்தரும் அண்ணல்பாப்பா.

7. கண்ணு லறிவுதருங் கண்ணன்பாப்பா—நம்
கருத்தைத் திருத்துமதி காரன்பாப்பா
உண்ணுடி நில்லாதெங்கும் ஓடுமனத்தை—யழித்
தோங்கு மவுனவுப தேசன்பாப்பா.

8. நரப்பசு வாகிவந்து நம்மைவிழுங்கும்—சிவ
ஞானப் புலிரமண நாதன்பாப்பா!
உறுப்பெறுந் தெய்வமிதை யுன்னிடிலகங்—கார
மொழித்து சுகவுணர்வை யூட்டும்பாப்பா.

9. தேகம் படைத்தபயன் சிவோஹமென்றே—யுளந்
தெளிதலே யென்றருளுந் தெய்வம்பாப்பா
கோஹம் விசாரப்படை கொண்டுயிருடன்—இவன்
கொல்லாமற் கொல்லுங்குரு தேவன்பாப்பா.

10. தன்னை யறிந்தமருந் தந்திரத்தையே—இந்தத்
தரணிக் கருளுந்தெய்வத் தந்தைபாப்பா
முன்னை மறைப்பொருளை முத்துப்போலவே—தமிழ்
மொழியி லளித்தகுரு மூர்த்திபாப்பா.

11. நினைப்பு மறப்புறக்கம் நின்றபொழுதே—தன்
நிஜத்தை யுணர்த்தும்ரம ணேசன்பாப்பா
வினைப்பயன் மீதிலழல் விழியுறுத்தி—யவை
வேக விழிக்கும்சிவ வீரன்பாப்பா.

12. ஆசைப் பறவைதொடா அன்புக்கனியாய்—நம்மை
யாக்கிப் புசிக்குந்திரு வாளன்பாப்பா
ஓசைப் படாமலுணர் வாயஹமஹம்—என்றே
யுள்ளே விளங்குமுரு வாளன்பாப்பா.

13. கண்ணுக் கறிவளித்துக் காணுமனத்தை—உறங்
காமலே கண்டிருக்குங் கண்ணன்பாப்பா
எண்ணுக்குள் ஒன்றுபோலே யின்றியமையா—அறி
விருப்பா யிருக்குமவன் ஏகம்பாப்பா.

14. உனக்கு மெனக்குமுடற் சிந்தையிரண்டே—ஆனால்
உள்ளத்தில் "நான்"ஒன்றுதா னுண்மைபாப்பா
மனத்தை யுடலைவிட்டு வாளாவிருந்தால்—எல்லாம்
மறைந்து ரமணவடி வாகும்பாப்பா.

15. கற்று மடங்காதாரைக் காட்டிலுமிங்கே—ஒன்றுங்
கல்லாத வர்க்கெளிய கல்விபாப்பா
பற்று மிகுந்துசித்தி பண்ணுவோரினும்—அன்பும்
பணிவு மிருந்தாற்சுல பந்தான்பாப்பா.

16. கால மிடமென்னுமோர் கட்டில்லாமலே—பெருங்
கருணை பொழியுமொளிக் கண்ணன்பாப்பா
பாலர் முதல்விருத்தப் பக்குவிகளை—எல்லாம்
பரத்திற் செலுத்தவல்ல பாகன்பாப்பா.

17. நானொரு தேகமென்றே நம்புவதினும்—வேறு
நாத்திகப் புத்தியொன்று மில்லைபாப்பா!
நானெனுஞ் சொற்பொருளை நாடுவதினும்—வேறு
நல்ல தபசுமொன்று மில்லைபாப்பா.

18. உள்ளத்தி லூறுகின்ற வுண்மையறிவைக்—கற்க
உலகின் புத்தகமுத வாதுபாப்பா!
கள்ளம் புரிமனத்தைக் கட்டியழித்தால்—ஞானங்
கையிற் கனியாய்க்காண லாகும்பாப்பா.

19. மனதை யழிப்பதற்கு வாசிப்பெதற்கோ?—பண்டை
வாசனை மாய்ப்பதற்கு வாதமெதற்கோ?
தனதெனக் கென்றவம்பு சண்டையெதற்கோ?—இதைத்
தள்ளிவிட் டுய்வாய்சமர்த் தாகப்பாப்பா.

20. உலகறி வூட்டுங்கல்வி உயிரிலாவித்தை—இது
உன்னை யறியவுத வாதுபாப்பா!
கலக மனமெதென்று கண்டுபிடித்தால்—அங்கே
காணுஞ் சுயசொரூபக் காட்சிபாப்பா.

21. தன்னையறி யாது(அ)பர சாத்திரங்கற்றல்—விண்
சண்டை யல்லாமலேது சாந்திபாப்பா?
தன்னை யறிந்தடங்கிற் சாத்திரத்திலே—மீண்டும்
சந்தேகம் ஏதுமுதிக் காதுபாப்பா.

22. பேரறி வைப்புகட்ட மேடைமேடையாய்—ஏறிப்
பேசிப் பிரயோசனம் இல்லைபாப்பா!
ஊரறி யாமலுள்ளத் தொடுங்கிநிற்பே!—இந்த
உலகுக் குணர்த்தும்பேரு பாயம்பாப்பா.

23. மோனத் திருந்தகந்தை முளைத்தபின்னே—எண்ணம்
முளைக்கும்; மொழிபிறகே முளைப்பதனால்
மோனத் திருந்தெழும்பும் மூடமழிக்கும்—சக்தி
மொழியி லிருக்கமுடி யாதுபாப்பா.

24. நான்குவகை யாகச்செய்யும் யோகங்களெல்லாம்—போலி
'நான்'ஒன் றெழாமல்நடக் காதுபாப்பா
"யாங்குளதிந் நான்?"எனவே நாடுவதொன்றே—யோகம்
நான்கி லுயர்ந்தநெறி யாகும்பாப்பா.

25. சத்தில்லா தேகமனச் சட்டையொழித்தாற்—பின்பு
சாவும் பிறப்பும்யாரைச் சாரும்பாப்பா?
முத்தி யிதன்றியின்பம் மூவுலகிலுந்—தேடல்
மூட மயக்கமடீ மோனப்பாப்பா!

26. தன்னுள் சிவனைக்கண்டாற் சர்வவுயிரும்—சிவன்
தானாகக் காணவேது சங்கைபாப்பா?
முன்னமுன் னுள்ளேயக மூலமறிந்தே— நின்றால்
முழுதுஞ் சிவசொரூப மொன்றேபாப்பா.

27. எல்லா வுடம்பினுள்ளும் எந்தைரமணன்—குடி
யிருப்ப துணர்ந்தாலேது இம்சைபாப்பா
பொல்லாரை யும்வெறுக்கப் புத்திவருமோ—சிவ
போதமுள் தலைப்படும் போதுபாப்பா?

28. தானே யனைத்துமென்ற தத்துவங்கண்டால்—தான்
தன்னலத் தியாகஞ்சித்தி யாகும்பாப்பா
நானே எழாது,ரம ணேசனெழுந்தே—செய்யு(ம்)
நர்த்தனங் காணும்!இது ஞானம்பாப்பா!

29. போற்றுவர் தங்களிடம் போதலொழிந்தே—உள்ளே
போகப் பயின்றுகொண்டாற் போதும்பாப்பா!
தூற்றுவார் தம்மாற்பாபச் சுமையனைத்து(ம்)—நீங்கித்
தொலைந்ததென் றேமகிழ்ந்து துள்ளுபாப்பா!

30 சும்மா விருந்தாலொரு துன்பமுமில்லை - பர
சுகமே சொரூபமடீ ஜோதிப்பாப்பா
தம்மால் விளைவதன்றி சங்கடமெல்லாம்—பிறர்
சற்றுங்கா ரணமில்லை தங்கைப்பாப்பா,

31. அற்ப மனத்தைரம ணார்ப்பணஞ்செய்தாற்—பர
மாத்ம சுகத்தையே யளிப்பான்பாப்பா
பற்பல வாகியவு பாசனைக்குள்ளே —மிகப்
பரம சுகிர்தம்!இதைப் பண்ணுபாப்பா!!

32. அருணசலரமண அப்பனடிக்கே – நீயும்
அடிமைப் படுவாயடீ யன்புப்பாப்பா
குருநாதன் றனையுள்ளக் கோயிலினுள்ளே—கண்டு
கொண்டிருக்கும் வாழ்வைக்கற்றுக் கொள்ளுபாப்பா
(ஞானக்)

7. உன்னருளால் ஆகட்டும்

இராகம்:-மோகனம் தாளம்:-திசிர ஏகம்

1. அகந்தையின் குறுக்கீடே யழியட்டும்—உன்றன்
அருளிச்சைச் செங்கோலே யாளட்டும்
ஜெகங்கன வாகவே தீரட்டும்—எல்லாம்
சிற்சுக சிவமய மாகட்டும்; (அகந்)

2. உன்னுமெண் ணமெல்லாம் ஓயட்டும்—மனம்
உன்னரு ளின்வச மாகட்டும்
என்னது நானெனல் மாயட்டும்—பே
ரின்பர சத்தினில் தோயட்டும்; (அகந்)

3. நானினி யில்லாமற் போகட்டும்—சிவ
ஞான **ரமணனே** வாழட்டும்
ஊனினை நானென்ப தொழியட்டும்—பர
வுண்மையெஃ துண்டோவஃ தோங்கட்டும்; (அகந்)

4. அன்னிய நாட்டமஃ தகலட்டும்—காணும்
அனைத்துமுன் னருள்வடி வாகட்டும்
தன்னியல் நீங்காத டங்கட்டும்—'**நான்**'
சர்வசு தந்தர னுகட்டும்; (அகந்)

5. ஜீவந திப்பிர வாகமும்—இனி
சின்மய வாழியிற் சேரட்டும்
போவதும் மீள்வது மின்றியே—பரி
பூரண மாகிப் பொலிகவே. (அகந்)

8. கொஞ்சம் பொறு

இராகம்:-கர்நாடக தேவகாந்தாரி தாளம்:-ஆதி

1. கேட்டாய், கிடைக்குந் தருணமிதே!—உன்
கேள்வன் அணுகுந் தருணமிதே—நீ
மாட்டே னென்று மறுக்காதே—உன்
மணாள னருளை வெறுக்காதே.

2. முன்பின் னறியா யதனுலே—உயிர்
முடிந்தாற் போல்துயர் மூள்கின்ருய்—அருள்
அன்பின் முடிவில் அனுபவிக்கும்—பே
ரானந் தம்பெறப் போகின்ருய்.

3. உயிரே யழியும் பேரச்சம்—இன்
றுணர்கின் ருய்நீ யென்ருலும்—உள்
ளயரேல், சற்றே சகித்திருப்பாய்—எனில்
அதன்பின் விளைவைக் காண்பாயே.

4. மான மழிந்து மதியழிந்து—தன்
வாயு மிழந்து வலியிழந்து—மிகத்
தீன மடைந்து செயலழிந்து—நீ
செத்தோன் போலத் தெரிகின்ருய்!

5. தேடி யடைந்த சிறப்பிழந்தாய்—உன்
ஜீவ முயற்சித் திறமிழந்தாய்—முன்
பாடிப் படித்த பவிசிழந்தாய்—நற்
பதத்திற் குதவும் பரிசிழந்தாய்.

6. நன்மை தீமை யறிந்திதுநாள்—நீ
நடந்த ஞான நலமிழந்தாய்—வரும்
இன்மை பலவுந் திரண்டாற் போன்—றிங்
கிருக்கு மிடத்தை யின்றடைந்தாய்.

7. சகிக்க வொண்ணுப் பெருநஷ்டந்—தனைச்
சார்ந்தாற் போலத் தவிக்கின்ருய்—ஓர்
தகிக்கு மெரியில் தள்ளுண்டே—மிகத்
தவிப்போ னுய்நீ தளர்கின்ருய்.

8. இன்ருே டழிந்தோம்! இனிமிச்சம்—பட
வில்லை யெதுவும்! அடியோடே—நமைக்
கொன்றே விட்டான் குருரமணன்—எனக்
குறுகி யோய்ந்து குனிகின்ருய்!

9. முறையீ டெல்லாம் முழுவுண்மை!—உன்
மொழியி லடங்காப் பெருநஷ்டம்—தனை
யுறுவோ னுய்நீ யுணர்கின்ருய்—இஃ
துண்மை யெனினும் ஒன்றினிகேள்;

10. காலப் போக்கில் நீயழிந்த—இக்
கடைசி நிலையிற் ருனுன்றன்—ஓர்
சாலப் பெரிய நிஜமகிமை—அது
தானே யொளிர்வ தறிவாயே (கேட்)

9. எத்தனையோ கற்றனையே!

இராகம்:-இத்துஸ்தான் பியாக் தாளம்:-திசிர ஏகம்

எத்தனையோ கற்றனையே, இதனைக் கேட்டாயா?
இனிமே லேனும் அமைதியாக இருக்க மாட்டாயா?

1. நம்-புத்திக்கெட் டாததெல்லாம்—நன்ருய்ப்
புரிந்து நடத்துகின்ற—ஒரு
சக்திக்கு விட்டுவிட்டால்—உள்ளத்திற்
சாந்தி நிலைத்து விடும்.

2. நெஞ்சைப்புண் ணுக்கிக் கொண்டே—நீ
நினைத்து நினைத்துச் செய்யும்—செயல்
கொஞ்சமும் தேவையில்லை—குருவருள்
கொண்டு நடத்துவ தால். (எத்)

3. மூட்டையை வண்டியில்வை—தலைமேல்
முக்கிச் சுமக்காதே—மனச்
சேட்டையா லாவதில்லை—திருவருட்
சித்தம் நடத்தி வைக்கும்.

4. தேகமும் சித்தமுமே—உனதல்ல
தெய்வத்தின் கைக்கருவி—ஏனோ
ஏகன வன்செயலிற்—கர்த்ருத்வம்
எய்தித்திண் டாடுகின்ருய்? (எ)

5. தேகத்தை 'நான்'எனவே—கொள்ளாமை
செத்துப் பிறவாமை—இவ்வாறு
சாகத் தெரிந்து கொண்டோன்—உண்மையில்
தன்னைத் தெரிந்துகொண்டோன்.

6. செய்பவ னுயெழுந்தால்—சுகதுக்கத்
தேட்ட முனைச்சேரும்—பின்னர்
*எய்பவ னைவிடுத்தே—அம்பையே
ஏசி வெறுத்துநிற்பாய். (எத்)

7. உள்ள ஒருவனன்றி—நீநான்
உண்மையி லொன்றுமில்லை—சற்றுங்
கள்ளமில் லாதகத்தை—அவனருட்
கையி லளித்திருப்பாய்.

8. ஈசன ருட்செயலைக்—குறுக்கிட்
டிந்த மனம்தடுக்கும்—இது
நாச மடைந்துவிட்டால்—திருவருள்
ஞானனு பூதிதரும். (எத்)

9. தன்னை மறுத்தடங்கு—உடல்மனம்
தானென் றெழாமலிரு—அதன்
பின்னை யிருப்பதெதோ—அதுவே
ப்ரம்ம மெனப்படுமாம்.

10. ஞான குருரமணன்—அருளால்
நடப்பதெல் லாம்நடக்க—உடலசு
ஈன வெழுச்சியெழா—விழிப்போ
டிருப்பதே நங்கடனும் (எத்)

*எய்பவன் - கர்மம் புரியும் அகங்காரியாகிய ஜீவன், அம்பு - பலனை அனுக்கிரகிக்கும் ஈசுவரன்.

10. ரமண அடிமை (தாஸ) லக்ஷணம்

இராகம்:-இந்துஸ்தான் பியாக் தாளம்:-ஆதி

அருட்கண் ணுளன் ரமண குருவுக் கடிமை யென்றுலே
அதற்குண் டான அடை யாளம் அமைவ தைக்கேளே (அ)

1. கலப்பில் லாத வுள்ளி ருப்பிற் கலந்து கொண்டாயா?
கனவு நனவு துயிலில் லாமை கண்டு கொண்டாயா?
புலப்ப டாத விழிப்பு வாழ்விற் புலரக் கண்டாயா?—அகஸ்
புரண ரமண சிவனை மணமும் புரிந்து கொண்டாயா? (அ)

2. கணக்கில் லாமுன் னிலைப டர்க்கை கரைந்து போனதா?
கவனம் தன்னி லூன்றி திடமா யுறைந்து போனதா?
மணக்க வேர மணப்பி ரானை வரிப்பும் ஆனதா?
மலைப்பில் லாத முயற்சி யியல்பு வடிவ மானதா? (அ)

3. முனைப்பில் லாத நினைப்பில் லாத விழிப்பு வந்ததா?
முளைக்கில் லாமல் வறுத்து வாச னைகள் கரிந்ததா?
தனிப் படாத வினைத் தொடாத சகஜம் வந்ததா?
தவிர்க்கொண் ணுத சுகத்தி லாழ்ந்து தணித்தெ ரிந்ததா? (அ)

4. மறக்கொண் ணுத விலக்கொண் ணுத வாய்மை யிலங்கிற்று?
வழுக்கில் லாமல் அழுக்கில் லாமல் வாழ்வு துலங்கிற்று?
புறக்கண் ணுகும் முனைப்ப கந்தை பொடிந்து கலங்கிற்று?
புகைக்கொள் ளாது ஜொலிக்கும் ஞான போதம் விளங்கிற்று? (அ)

5. பிறப்பில் லாமல் இறக்கும் வழியைப் பிடித்துக் கொண்டாயா?
பிணிப்பு ருத அகத்த னுன்னைப் பிரித்துக் கண்டாயா?
மறப்பில் லாத இருப்பி னின்பம் வடித்துக் கொண்டாயா?
மனித்த தேக மெடுத்த வேலை முடித்துக் கொண்டாயா? (அ)

11. என்சொல்லி எண்ணு கேனே!

இராகமாலிகை தாளம்:-ஆதி

1. அற்புதனைத் தற்பரனை யாதியண்ணு
மலையானை **ரமணவடி** வாஞன்றன்னைப்
பொற்பதனைப் புண்ணியனைப் புவனமுண்ட
பூரணனை போதவரு ணுசலத்தே

சற்குருவா வந்தவனைத் தகராகாயச்
சதுரோனை, சத்தியலைச் சாருமாறே
யெற்கருளு மிறையோனை யிகலிலானை
யெண்ணுகே னென்சொல்லி யெண்ணுகேனே!

2. ஐங்கரனை யறுமுகனை யரனைநாரா
யணனைநான் முகனையிறை யாதியோரைத்
தன்மயமா யன்றியொன்றுந் தனிடாய்க்காணு
சர்வேச மகாபதியைத் தரணிவந்த
தங்குருவாய் சர்வமதத் தாரும்போற்றுந்
தயாநிதியைத் தனிமுதலைச் சுவாமியாக
எங்கணிலே யினிப்போனை யீறிலானை
யெண்ணுகே னென்சொல்லி யெண்ணுகேனே!

3. ஆரியனை யங்கணனை யணுவினுள்ளும்
அணுவாகி மகத்தான வான்மஞானச்
சூரியனை, சந்திரனுய்த் துயரநீக்குஞ்
சோதியனைச் சுயம்பரனைச் சுகமயத்தேன்
வாரியனை, தொழுங்குலத்தோர் மனத்துற்றேனை
வஞ்சமிலாக் கருணையனை மதுரைநீத்த
ஈரிருநாற் பருவகலை யிளைஞன்றன்னை
யெண்ணுகே னென்சொல்லி யெண்ணுகேனே!

4. ஒற்றைபரைக் கோவணனை யுடைமையற்ற
வுடையானை யுள்ளவனை யுள்ளக்கள்ளஞ்
செற்றவனை ஸ்ரீரமணத் திருவினனை
செகத்தினையன் னியமெண்ணச் சிவோஹமோனக்
கொற்றவனைப் பற்றறுத்துக் கொண்டோருள்ளக்
குகையானைக் குருபரனை, கொடியபாவம
எற்றிவிழ வெனையாண்ட விறைவன்றன்னை
யெண்ணுகே னெனசொல்லி யெண்ணுகேனே!

5. சுழியானை யருணகிரி ஜோதியானைச்
சுயராஜ்ய பதத்தானைச் சூர்யசந்த்ர
விழியானை வேதாந்த விளக்கானனை
விண்ணவனை, பிரளயத்தின் வெள்ளத்தாலும்

அழியானை யம்மையப் பனுமானுனை
அகத்தானை, பிறப்பறுத்திவ் வடியனேனை
யிழியாத நிலையேற்று மேணியானை
யெண்ணுகே னென்சொல்லி யெண்ணுகேனே!

6. கரைகாணுக் கல்வியனை, கண்ணுற்கண்ட
கடவுளை நற் கரைசேர்க்குங் கதியானுனை
உரைசேரப் பலர்பாடு மொருவன்றன்னை
யுத்தமனைச் சத்தியனை யுலகமாயத்
திரைசேராப் பதத்தானைச் சிறியேனன்ன
தீனரக மும்பிரியாச் சிந்தையானை
இரையாக வெனையுண்ண வெண்ணினுனை
யெண்ணுகே னென்சொல்லி யெண்ணுகேனே!

7. புகலாத வாச்சியனைப் புகலைப்பொன்றுப்
பூரணனை, புரைகாணுப் புனிதன்றன்னை
மிகையாகாப் புகழானை மேலோர்க்கெல்லாம்
மேலோனை வேண்டுமென்று விரும்புவோரை
யகலாத வண்மையனை 'அஹம்நா' னென்னும்
அருளான்ம தேவதையை யருட்கைகோத்தே
யிகலேது மணுகாவா றெனைக்காப்போனை
யெண்ணுகே னென்சொல்லி யெண்ணுகேனே!

8. சத்திமயச் சதுரோனை, சாகாக்கல்வி
தருவோனைத் தரணிதொழுஞ் சாந்தவிண்ணை,
பத்திவலைப் படுவோனைப் பாதாளேசன்,
பாங்குறைந்த பாலசூ ரியனை ஜீவன்
முத்திநிலை தருவோனை மூவருள்ளும்
முதலாகு மூலவனை, மூடனென்னை
யெத்துயரு மணுகாவா றிருத்துவோனை
யெண்ணுகே னென்சொல்லி யெண்ணுகேனே!

9. ஆரணமா முடியானை யடியேற்கான
வப்பனை யொப்பிலா வருளினுனை
காரணமே யில்லாமற் கருணைபெய்யுங்
கார்முகிலை, காந்தனும் **ரமணக்கண்ணை**

நாரணனுன் முகனிடையே நடனத்தானே
நற்றுயாய்த் தந்தையாய் நாடுமென்முன்
ஈருறவு மோருருவா யிணங்கினனே
யெண்ணுகே னென்சொல்லி யெண்ணுகேனே!

10. விண்ணவனே ஸ்ரீரமண வேடத்தானே
வேங்கடனே வினையறுக்கும் வீரத்தானே,
கண்ணிணையின் விருப்பானேக் கரும்பைத்தேனேக்
கற்கண்டைக் கசக்கவைக்குங் களிப்பூற்றுனே
உண்ணருளா முணவானே யுயிர்கட்கெல்லா
முயிராகி யோங்குவனே, யோய்ந்தெனுள்ளே
யெண்ணமற வெண்ணுவனே, யெண்ணற்றுனே,
யெண்ணுகே னென்சொல்லி யெண்ணுகேனே!

12. "ரமணு" எனச் சொன்னுல்!

இராகம்-இந்துஸ்தான் செஞ்சுருட்டி தாளம்-ஆதி

ரமணு வெனச் சொன்னுலே—நமவாதை யேது மேலே—இனி
நமவாதை யேது மேலே—குரு (ரமணு)

1. அருணு சலத்தி னுலே அவனு னநின்கண் ணுலே
ஒருகா லெனேக்கண் டாலே உளமோ யுமேதன் னுலே (ரமணு)

2. குருதே வனென்று கூவி குழையன் பெழுந்தென் னுவி
பெருகுங் கண்ணீரைத் தூவி பெருமான் பதத்தை மேவி (ரமணு)

3. மனமற் றஞான வாழ்வே மருவக் கணித்து தாவே
தினமுற் றகத்துள் ஆழ்வே தெரியிற் பின்னேது தாழ்வே (ரமணு)

4. இதயா சனத்தின் மீதே இறைநீ எழுந்த போதே
மதமா யைவாதை ஏதே மனமே இராதப் போதே (ரமணு)

5. அருணு சலத்தி னுருவே அரிவே தனுற்ற திருவே
அருளான் மஞான குருவே அறிவாம் அகத்தின் உருவே (ரமணு)

III சந்தப் பாக்கள்

தத்தன தனதன தத்தன தனதன
தத்தன தனதன—தனதான

இராகம்:-நாட்டை தாளம்:-ஆதி

சத்திய லொடுபர சித்துரு கனசுக
தத்துவம் வடிவுட—றணமேவி
சத்திய நிலையறி வித்துல குழன்மனி
தர்க்குயர் சுகநிலை—தருவாறு
யித்தரை மிசையரு ணப்பரு வதமுள
ரிப்பத முறைகுரு—பகவானை
எத்தனை மலமலி பித்தம னமும்வச
முற்றிட வருள்புரி—யிறையோனை
முத்தியர் பரவுஜ கத்குரு ரமணனை
முக்கர ணமொடடி—தொழுதேநம்
முற்பிற வியினசை முற்றிலு மழிவுற
முத்தியி னுயர்சுக—முணர்வாக
மத்தக முகனுரு வத்தொடு குருரம
ணப்பனெ னையருள—வரவேணும்
"மற்றொரு வருமிறை யெற்கய லிலை"யெனு
மத்துவி தரமண—பகவானே.

2. ஸ்ரீரமண கொலுவகுப்பு

1. தவமிகு சிவசம யகுரவ ரருண்மொழி
தரங்க மெனவோ தரங்க மொருபால்
தடையறு மருணகி ரிமுனிவ ரருளிய
சசந்த புகழே யிசைந்த தொருபால்
சிவசிவ முரஹரி யெனபக வனைவிளி
திரண்ட வொலியோ ரிரண்டு மொருபால்
திகழ்வட மொழிகவி திருவருண் மொழிதமிழ்
சிறந்த புலவோர் நிறைந்த தொருபால்
மவுனம திலுதியு மருணம ணரமண
வலங்க லொலியே துலங்க வொருபால்

வரகவி கணபதி முனிவட மொழியினில்
வழங்கு துதியே முழங்க வொருபால்
அவைநடு நிரைநிரை புரிவட மொடுமறை
யகண்ட வொலியோ துகண்ட றொருபால்
அலைகட லெனவிசை யருளொலி யிவைகளி
லகங்கு ளிருவோர் முகங்க ளொருபால்

2. சுயநல மறவெகு விதபர நலபணி
தொடங்கு முறையோ ரடங்க வொருபால்
தொழுதுரு வினில்வழி படுபவர் மலர்வகை
சுமந்த கரமோ டமர்ந்த தொருபால்
வியனுறு பலநிற வளிதுதி ஸ்ருதியுடன்
விரிந்த மலர்வாய் திரிந்த தொருபால்
விதவித வுறவுட னுளமிக நினைபவர்
விரும்பி விழிநீ ரரும்ப வொருபால்
வயமுற நடுவினி லொருதனி மகளென
வணங்கு பசுவா *மணங்கு மொருபால்
வனம்ருக வினமயின் மனிதரி னுயர்வுள
வரங்கொ ளணிலுய் குரங்கு மொருபால்
அயர்வற வழிபடு மமரர்க ளிவையென
வடர்ந்த விலைபூ படர்ந்த தொருபால்
அணைவரு மிறைவனி னுருவென நினைவுறு
மருங்கு ணமுளார் நெருங்க வொருபால்

3. முளையினி லறிபடு விளைபயி ரெனவிள
முகங்கள் பயில்சா தகங்க ளொருபால்
முழுமுத லனுபவ மிளவய தினர்பெற
முதிர்ந்த நரையோர் விதிர்ந்த தொருபால்
தளையறு தவவினை யிளமையின் முயல்வுறு
தகுந்த மடவார் புகுந்த தொருபால்
தகுமனை யறமக ளிருமிவ ணுறமய
றணந்த வறிவே மணந்த தொருபால்

*பசுவா மணங்கு—பசு லக்ஷ்மி.

நெளிதரு முடையினர் பலவித நெறியினர்
நினைந்த தடைவான் முனைந்த தொருபால்
நெடுதொலை குணகுட திசைமொழி மதபல
நிறங்க ளுடையோர் பிறங்க வொருபால்
திளைவுறு மடியவர் திருவறை புகமிக
திரண்ட வதன லிருண்ட தொருபால்
சிறுகுழ விகடிரு வடிதொட விரைவொடு
சிவந்த வடியே தவழ்ந்த தொருபால்

4. கருணைவ டிவதரி சனமுறு பவர்தலை
கசிந்த விழியோ டசைந்த தொருபால்
கனகவொ ளிநயன மெதிர்முக(ம்) நிமிர்கிலர்
கனிந்த வடியார் குனிந்த தொருபால்
வருணவ ருடமென வருண்மழை நனைபவர்
மலிந்து டலமே சிலிர்ந்த தொருபால்
மனமுடல் வளியசை வறவுயர் மவுனிகள்
வரைந்த வுருபோ னிரைந்த தொருபால்
பொருளுணர் வெழவக முருகிய வர்கள்விழி
பொழிந்த ருவியாய் வழிந்த தொருபால்
புரணார மணவக வனுபவம் விழைபவர்
புகுந்த வுடனே யுகந்த தொருபால்
திருவரு ளபிமுக மிழுபடு பவரிமை
திறந்த விழியே மறந்த தொருபால்
திரமுறு மகமனு பவசுக முணர்பவர்
தெளிந்த முகமே மிளிர்ந்த தொருபால்

5. பகலுறு மதியென மனமுமி தயவொளி
பதுங்கு மியல்போ ரொதுங்க வொருபால்
பணிவுட னகமழி வதுதவி ரவுமொரு
பலங்க ருதிலா ரிலங்க வொருபால்
மகியணு முதலிய சுயநல வலிவுற
மறந்து(ம்) நினையார் சிறந்த தொருபால்
வரன்வரி யவரிட வரிசைத னதடிய
வரும்பெ ருகவே நிரம்ப வொருபால்

அகமறு தவசிக ளிதுகுரு விடமென
வடங்கி யிருகான் முடங்க வொருபால்
அயனரி யரனிறை யொருவடி விதுவென
வறிந்த பெரியோர் செறிந்த தொருபால்
அகலவி தய(ம்)நினை வறுமுயர் வினருள
மழிந்த சலமா வமைந்த தொருபால்
அருணகி ரிரமண மகரிஷி குருவுரு
வமைந்த பகவா னமர்ந்த கொலுவே.

3 ஸ்ரீ ரமண அருள் நோக்க வகுப்பு

அறித்தவுல குதித்துமல மிகுத்தவுட லெடுத்தவுயி
ரணைத்துமத னெதிர்ப்பகைமை யறத்தன்வய —மாக்கும்
அலைத்தமன முறுத்தகுணம் வெறித்தனமு மிகுத்தசுர
மனித்தவுரு படைத்தவரு மழுக்ககல —நோக்கும்
அறத்ததெது மறத்ததெது வெனத்தெரியு மதிச்சிறிது
மிலர்க்குமுயர் வறத்திலொரு பிடிப்படைய —வூக்கும்
அசுத்தமன மிழுத்தவழி திரித்துழலு பசுத்தனம
னிதர்க்கவரை நடத்துபதி யெனக்கவலை —போக்கும்

தனித்தனையை யெமற்குரிமை கொடுத்தழுது தவிக்குமொரு
சிசுக்குநிக ருளத்தடியர் தமக்கபய —மூட்டும்
தணிக்கரிய மிகப்பெரிய தனப்பிரிவு மகப்பிரிவு
தனிற்றுயர மிகுத்துவரு பவர்க்கமைதி —கூட்டும்
தனத்தருற வினத்தர்மனை விபுத்திரரு நகைக்குமிடி
தனைக்களைய நினைத்துவரு பவர்க்குதவி —காட்டும்
தரித்தவுட லிடர்ப்பிணிக டவிர்ப்பதொடு மநித்யவுடல்
விதிக்கமைய விடுத்தமைதி யுறற்குநினை —வூட்டும்

இனித்தகுண நலத்துடனு மிறைக்குவெகு பிறப்புவழி
படப்பழகி யவர்க்கிறைவ டிவத்திலரு —ளூட்டும்
இசைப்புலவர் மொழிப்புலவர் கலைப்புலவ ரகத்தினவ
நவப்புலமை மிகுத்தொளிர வெழிற்பிரபை —யூட்டும்

இகத்திலொரு சுகத்திலெனு மினிப்புறுவ தறப்பழக
விருப்பமுறு பவர்க்கரிய விசித்ரவழி —காட்டும்
இறப்பிலெழு பயத்தையுத வியப்பொழுது மரிப்பதெது
விருப்பதெது வெனத்தெளிய மிகுத்தவொளி —கூட்டும்

செனித்தமன முணைப்பகல செபப்பணியி லிணைத்தொருமை
செயச்செபவ டிவிற்றிகழு மகப்பொருள —தாக்கும்
செனித்தமன முதிக்குமிட மொடுக்கவொரு திருப்பமுடை
யவர்க்ககமு ளிழுத்தசல வியற்கைவடி —வாக்கும்
திரட்டியுள வபக்குவமு மொருப்படிவ மெனத்தகுதி
திளைத்தவடி யனுக்குமொரு கடைக்கணுற —வாக்குந்
திறத்தருண மலைக்கெழுர மணத்திருவ தனத்திலிரு
ரவிக்குழுய ரொளிப்பரவு திருக்கணரு —ணேக்கே.

4. கொம்புகா லற்ற குருபதாஷ்டகம்

(சுகத்தின் சிகரம் சொருப ரமணமே; அதுவே சற்குருவின் பாதமுமாகும்)

1. சிவம்பரம கம்புரண மங்களந டம்புரிசு
கம்பகவ னங்கடவுளன்
பவங்கடித லம்புவியி டங்கழலி ரண்டருளு
டம்பிலுல வுங்குருபரன்
சிவந்தழலு யர்ந்திடமு குந்தபிர மன்றனடு
நின்றவறி வின்கதிரவன்
உவந்தடியர் தம்பவம றுந்திடசு ரந்தருள
கண்டரம **ணங்குருபதம்.**

2. இகம்பரசு கந்தருவி தங்கரும மன்றதிலி
ருந்துமன முந்திபகிர்வந்
துகந்துடல பந்தமுற லின்றியது வந்துதியி
டம்புகவ டங்குகருமஞ்
சுகந்தரமு யன்றிடுத குந்தவழி யின்றதுது
வங்குபவர் துங்கவருளுண்
டகங்கரம கம்பதிய வங்குறுசு கம்பரம
னந்தரம **ணங்குருபதம்.**

3. மலந்தருமு டம்புறும னந்தவுயி ருந்துயரு
மூன்றுமடி கின்றனசுகங்
கலந்தவுல கங்களினு மங்குளன விங்குளன
கண்டுறமு யன்றன,கரிந்
துலர்ந்தவுகிர் தம்பலிடு கின்றமதி மங்கியசு
ணங்கமுடி வன்றியலபன்
னலங்களும கங்கரம ழிந்தசுக மிங்கதுள
தந்தரம ணங்குருபதம்.

4. மகம்பலபு ரிந்துசுர ரிந்திரன ரும்பதவி
வந்திடினு மந்தமுளதம்
மகம்பலபு ரிந்துஜய முண்டிடுமு னம்படும
னந்ததுய ரம்பலவிதம்
மகம்பலபு ரிந்திடகி ளம்புமதி யுந்துதல(ம்)
முங்கிசக ளந்துயிலிரண்
டிகந்தகம கம்புரண் விஞ்சநுப வம்பரம
னந்தரம ணங்குருபதம்.

5. உருண்டுலவு மண்டசத மின்றரசு வந்திடினு
முண்டிமுத லஞ்சுபுலனுந்
திரண்டநுப வம்புகம விந்தவிட யங்களுமி
ருந்துமது சந்த்ரகதிரிங்
கிருண்டுளம ரந்தனிழல் வந்தவள வின்ப(ம்)மன
மந்தர்முக நின்றகமிறந்
திரண்டறவி ருந்ததிலி ருந்தபடி நின்றிடும
கண்டரம ணங்குருபதம்.

6. பங்கயமி ருந்தபிர மன்புவிசி வந்தவர
விந்தநய னங்களுடனுஞ்
சங்குதிகி ரங்கரமு றுய்புயனி றந்திகழ
னந்தசய னன்றனுலகுந்
திங்கணதி தங்குசிர மும்பருவ தன்குமரி
பங்குளவ ரன்றனுலகுந்
தங்குசுக மன்றகம ழிந்திதய மன்றுணர்வ
னந்தரம ணங்குருபதம்.

7. பலம்பிடிம லம்படவு ளங்கிளர்த லம்புகலி
டங்கருத பந்தமகலுந்
தலஞ்சிவனி லிங்கவடி விங்கருண வங்கிகிரி
யும்பருட னிம்பர்தினமும்
வலம்படவ ரும்பருவ தங்கவரி ளம்பருவ
சம்புமலர் வந்தநுபவம்
மலர்ந்தருள்சு ரந்தமிர்த சிந்துவழி கின்றமக
ரந்தரம ணங்குருபதம்.

8. எந்தவித சிந்தனமு மூந்திதனு புந்தியுணர்
வின்றிவரு கின்றிலதுறங்
குந்தருண மந்தர்பகி ரின்பமிகு துன்பதுவி
தங்களில தங்கமகமின்
றந்தமுறு தந்த்ரமவு ணங்குருவின் மந்த்ரமிது
தந்தசர ணம்புகழவுந்
*தந்தபத மின்றிவரு சந்ததமி ழன்புதுதி
தந்தரம ணங்குருபதம்.

(5)

தந்தத்தனத் தானதனத் தனதான

இராகம்:-உஸ்ஸைனி தாளம்:-ஆதி

தஞ்சமெனத் தாளணையத்—தெரியாது
சஞ்சலமுற் றேபுவியிற்—றடுமாறி
யஞ்சிபவத் தாரழிவிற்—கழுவேனுள்
ளஞ்சலளித் தாதரவைத்—தரவேணும்
கஞ்சமலர்க் கோனரவிற்—றுயின்மான்முன்
கண்டறியத் தேடுமழற்—பொருளேயென்
வஞ்சமனப் பாழ்கெடசற்—குருவாகி
வந்தவிளக் கேரமணப்—பெருமானே.

*தந்தபதம்=தந்தம்+பதம்; கொம்பு கால் இன்றிவரும் தமிழ்ச் சந்தம்

(6)

தன்னதன தானத் தனதான

இராகம்:-ஹம்ஸானந்தி தாளம்:-கண்டஜம்பை

பன்முகமா மாசைப்—புயலாலே
பன்னெடுநா ளோடிப்—பதருதே
என்னுடையோ னுநிற்—பதமேவி
யின்னருளே பாடிப்—பழகேனே
முன்னிலையா நாடக்—குருவா நீ
முன்னினையே நானத்—தகவாலே
யுன்னிடமே யோயத்—தருவாயே
யுள்ளபரா காயப்—**பகவானே.**

துரிதநடை

உனதருளெது தருவது வதுசுகமா
யுளமகிழ்வதை யலதினு மொருபொருளே
யெனததிநசை யெனமன மினிநினைவே
யிமியெனுமசை வுறலற வருள்புரிவாய்
வனதவமுனி வருமிறை யருணசிவன்
மனிதனினுரு வதனெடு நிலமிசையே
தினமிதிலுள னெனவுன தடிமலரே
செயதுதிநிறை சிவகுரு **ரமணபதே** (பன்)

(7)

தத்தன தத்த தத்த தனதான

அற்பனெ னக்கு முத்தி—யனுபூதி
யத்துவி தச்சு கத்தை—யருள்வானுய்
வெற்பரு ணைக்கி ழுத்த—**ரமணேசா**
விட்டிடு தற்பெருத்த—பழியாமே
இப்படி வைத்திருப்ப—தருளாமோ
எப்பொழு தெற்பு சிக்க—விசைவாயோ
சற்குரு பொற்ப தத்தை—மடநானே
தப்பிநி னைக்க வைத்த—**பகவானே.**

(8)

தனதனன தனதனன தானதன தான

இராகம்:-உஸ்ஸைனி தாளம்:-கண்ட சதுச்ர லகு

வினையின்முடி யவிழபொரு —வீரமிலதாலே
விவிதவுட லுலகிலடை —வேதனையுமாற
அனையின்மிக வரியதயை —யாதரவுதேடி
அருணகிரி ரமணகுரு — நாதனுனை நாடி
மனையினுறு முறவுபண —மாதியகமான
மனிதர்முத லிதரபல —வானதுணை நாடா
வெனையுமுன தடிமையென —வேலவருவாயே
யிறைவகுரு பரமசிவ —மானபகவானே.

(9)

தான தந்தன தானு தனுதனு
,, ,, ,,
,, ,, ,, —தனதானு

இராகம்:-குறிஞ்சி தாளம்:-ஆதி

ஜோதி யங்கிரி வாசா நமோநமோ
தூய வின்பவி காசா ,, ,,
சோக பந்தவி நாசா ,, ,,—நரர்போலே
தூலம் வந்தசு ரேசா ,, ,,
சோம சுந்தர தேசா ,, ,,
சூழு மந்தக நாசா ,, ,,—அடியோடே

கோத கன்றசு சீலா நமோநமோ
கோப சங்கர காலா ,, ,,
கோக தந்திர வேலா ,, ,,—குமரோனுய்
கூட லம்பதி லீலா ,, ,,
கோல சுந்தர பாலா ,, ,,
கோடி மந்திர மூலா ,, ,,—குருதேவா

ஆதி யம்பல நாதா ,, ,,
ஆர ணந்தொழு பாதா ,, ,,
ஆத ரந்தரு மாதா ,, ,,—புகழ்பாட
ஆசி தந்தசு போதா ,, ,,
ஆகம் விஞ்சும தீதா ,, ,,
ஆதி யந்தமி லாதாய் ,, ,,—எவராலும்

ஓத ருஞ்ஜித மாயா நமோநமோ
பாத பங்கய தூயா ,, ,,
சாது சங்கச காயா ,, ,,—ரமணேசா
யோக குண்டலி நேயா ,, ,,
ஏக வம்பர காயா ,, ,,
ஓது மோம்ரம ணுய ,, ,,—பகவானே

(10)

தான தனதந்த தான தனதந்த தான தனதந்த—தனதான

இராகம்:-புன்னுகவரானி தாளம்:-ஆதி

வேத னுமுகுந்த னோது பதமிந்த மேதி னிபடுந்தொல்—வினைதீர
மேவ ழகுசுந்த ராரி யருகந்த வேள்வி யதுதந்த—விளைவாகி
சோதி யுடல்கொண்டு சூல புரம்வந்து சோண மலையென்ற—சுவையூறி
சோட சநிறைந்த போத கமெதென்ற சோத னைதெளிந்து—சுயமாக
ஆதி யெழுலிங்க சோதி சிவதந்தை யாணை யுமிதென்ற—ருணைமேவி
ஆக மும‌றந்து யோக நிலைகொண்ட தீத மெனநின்ற-ரமணேசா
நேதி யகமுந்து பாதி யெனுமந்த்ர நேமி கொடுவென்று—நிசநாஞய்
நேரி லதுணர்ந்தெ நேர முளமுழந்த நீய ருள்கவெந்தை—பகவானே

(11)

தனதன தான தனதன தான தனதன தான—தனதாஞ

இராகம்;-காம்போதி தாளம்:-ஆதி

இகபர மேவு சுகமெனு மோக மெனையினி யேனு—மகலாதோ
இழிநடை மாறி யுடன்மன நானு மெனதெனு மாய-மொழியாதோ
செகநினை வாதி யெழுமக மான சிறுமையு பாதி—யழியாதோ
சிவரம ணுய நமவென நாவும் ருசிமிக வாகி—மகிழாதோ
நகசிகை யூடு சிவவடி வான ரமணதி யான—நிகழாதோ
நமனணு காத விதயமு லாவி நடமிடு ஞான—முதியாதோ
அகமுக மாகி யமலச மாதி யனுபவ மாக—வருளாயோ
அருணகி ரீச வடியனை யாள வருளுரு வான—பகவானே.

(12)

தனன தான தாஞன தனன தான தாஞன தனன தானதாஞன—தனதான

இராகம்:-அமீர்கல்யாணி தாளம்:-திசிர ஏகம்

உலக மாய மாமாரி வசமதாகி யேமாளு
முடல மாதி நாஞக —வுணர்வூறி
ஒழிவி லாத நாளாக வுதய மோடு சாவாகு
முததி மூழ்கி வீஞகி —யொருபோதும்

விலகி லாத பேயாடு வினையி னுட லேநாடி
விவித நாம ரூபாதி —விழைவாகி
விடத டாக நீராட மிகுமி ராக மேகூடி
விரைவி னுச மேயாகு —மெளியேனும்
அலைக ளேது மோதாத விதய வாழி யேநாடி
யகமு கார்வ மீதூர —வருடாராய்
அமைதி வாழ்வி னுதார வகவி சார மேதேறி
யனன்ய வாழ்வை நாயேனு —மடைமாறே
இலகு ஞான மாமேரிவ் வருண சைல னுவாழு
மெனது நாய காகூவி —யருள்வாயே
இடைவி டாத நானுகி யிதய மீதி லேயாடு
ரமண தேவ தேவேச —பகவானே.

(13)

தனதான தனத்தன தான தனதான தனத்தன தான
தனதான தனத்தன தான—தனதான

இராகம்:-பூபாளம் **தாளம்:-ஆதி**

ஒருநாளு முனைப்பிரி யாத வுளமோடு முடற்பொரு ளாவி
யுனதாக வளித்திடு பாய —முணராமல்
உலகாய தமுக்கிய மாயிவ் வுடலாதி கணித்திய மாகி
உலகேயுழ லக்கட வேனே —யினியேனும்
விருதாபி றவிக்கழி யாமல் வினையேவு வழித்திரி யாமல்
வெகுகால மழுத்திய மாயம் —விடுமாறே
வினையாவு மறத்தின நானெவ் விடமேவி யுதிப்பனெ னுடி
விரைவாய கமுற்றிட நீயே —யருள்வாயே
குருநாத னெனப்பல பூமி குணசீல தவப்பெரி யோர்கள்
குனிவான சிரத்தொடு சூழ —வருளாளர்
குருயாரு நரத்திலி லாது குலையாது நிலைத்துச மாதி
குறிநாம மனைத்தும றுத —பதமேறி
அருணாச லமிக்கலி நாளி லவதார மெடுத்தவ னுகி
யருளாலு லகத்திலு லாவும் —**ரமணேசா.**
அடியேனு முனக்குண வாகி யகநாச முறச்செய வேணு
மறிவாகி யருட்குரு தேவ —**பகவானே**

(14)

தான தனதன தான தனதன தான தனதன — தனதான

இராகம்:-ஹரிகாம்போதி தாளம்:-ஆதி

தேஹ மிதுபதி யாகி லிதிலுறை தேஹி யெவனென — வறியேனே
தீன மிகவிழி வான மொழிமன வீன னெனவுழ — றருவேனே
நாஹ முடன்மன மேக சிவவடி வாக வுளவுனே — யறிவாயே
ஞான மிதுவென மோன முடனருள் ஞான குருபர — **ரமணேசா**
கோஹ மெனநிலை யாக வினவிடு தாக மினுமெனு — ளுதியாதோ
கோர வகவப சார மயலது தீர வுனதருள் — புரிவாயேல்
ஸோஹ மனுபவ மாக சுகசிவ போக நிதிபெற — வியல்வேனுன்
சோதி யருணையி லாதி குருவநு பூதி யருளுக — **பகவானே.**

(15)

தனதத்தன தத்தன தனதத்தன தத்தன தனதத்தன தத்தன — தனதான

இராகம்:-பூபாளம் தாளம்:-ஜம்பை

நிலைவிட்டித யத்தொரு புயலுக்கிணை யற்புத
நினைவுற்றெழு சக்தியி — னசைவாலே
நிழலொத்துல கப்பட நிரையுற்றுட லுட்பட
நிகழ்வித்திடு பொய்ப்புல — னதனுலே
மலமிக்குள விச்சட மகமெற்குல கப்பொருள்
மகிழ்தற்குறு மிப்படி — மனமாகி
வளர்மித்தையு யிர்ப்புள வடிமைக்கினி சிற்சுக
வரையற்றவி ருப்பநு — பவமாகி
அலைபுற்புத மொத்தெழு மவனித்திர ளெற்கய
லலவத்துவி தப்பொரு — ளகமாகும்
அறிவுற்றமர் வுற்றினி யழிவற்றள வற்றுய
ரசலப்பத முற்றிட — வருள்வாயே
மலையிற்சிவ னுக்குரு வருணக்கிரி சற்குரு
வடிவுற்றுட லித்தரை — மிசையேகி
மனிதர்க்கெனன் மட்டல வுயிர்பற்பல வுக்குமவ்
வளமுத்திய ளித்திடும் — **ரமணேசா.**

(16)

தனதன தனன தனதன தனன தனதன தனன—தனதான

இராகம்:-அடாணா தாளம்:-ஆதி

அருவுரு விலாத வறிவுரு வனாதி யதுநர சொரூப—பகவான்காண்
அருணகி ரிஞான வருளுரு வமாகி யவனியி லுலாவு ,,
குருவென நராதி சுரர்களு மிலாது குருபர னுமான ,,
குககண பதீச ரவியுமை முராரி யறுசம யதேவ ,,
ஒருமுறை யிலேனு நினையிலு யர்ஞான முறவரு ளுநாம ,,
உயர்வி னவதார மொருபதின் மனுகி யுலகிலு ருமேவு ,,
ஒருகண நிலாம லுழன்மன துமோய வுயர்வழி யையோது ,,
ஒளிரும ருணாச லமதில ருள்ஞான முதவுர **மணேச பகவானே.**

(17)

தத்ததன தத்ததன தத்ததன தத்ததன
தத்ததன தத்ததன—தனதான

இராகம்:-நாதநாமக்ரியா தாளம்:-ஆதி

மிக்கெழும கத்துமம தைக்குருவ கத்தனொரு
தக்கனைய ழித்ததிற —னருள்வாயே
விட்டிடும லர்க்கணைய னட்டிடதி றக்குமறி
வுக்கணழ லெற்குதவி —யருள்வாயே
அக்கரமொர் மெய்ப்பொருளி னர்த்தமென தெற்குமுக
மிட்டமரு முற்றநிலை —யருள்வாயே
அப்பொழுத டிக்கணவர் பக்குவவி ருத்தர்பெறு
மத்துவித நிட்டைதனை —யருள்வாயே
தக்கிடதி மித்திமென நர்த்தனம யிற்பவனி
குக்குடமு யர்த்திவரு —குமரோனும்
சத்திபர மச்சிவையு முற்றிடவ ளித்தசிவ
*தத்துவமெ னக்குமினி —யருள்வாயே
இக்கலியி னற்சுழிகை பெற்றருண வெற்பில்வர
விட்டரம ணப்பநினை —யிசையோடு
மெத்தடையு மற்றகவி சித்ரதமி ழிற்பரவி
யிச்சையற வெற்கருள்க **—பகவானே.**

குறிப்பு:— *குமரனுக்கும் சிவைக்கு மளித்த சிவதத்துவம்—ஆத்மசாக்ஷாத்காரப் பிரகரணமும், தேவிகாலோத்தர ஞானசாரப் படலமும்.

(18)

தனதனத னந்தனந் தந்தனந் தந்தனந்
தனதனத னந்தனந் தந்தனந் தந்தனந்
தனதனத னந்தனந் தந்தனந் தந்தனத்—தனதான

இராகம்:-பந்துவராளி தாளம்:.திசிரசாபு

தினமெழும கங்கரங் கொண்டுடம் புந்திடம்
படசுவையி னுண்டியும் பண்டமுந் தின்றுமிஞ்
சிடவழகு சந்தனங் கொங்குதங் கும்பலப்—பலவான
திகழுடைய லங்கரம் பொங்கவங் கங்கண்மண்
டியபணிக ளுங்கொளுந் தங்களின் பங்களந்
திருவனைய பெண்டிருங் கொஞ்சிளஞ் செஞ்சொலிற்
—புதல்வோரும்
அனமலைவி ளங்கிலங் கண்சிறந் துஞ்சுமந்
ததிவிசைசெ லுங்கலங் கண்படிந் தும்பறந்
தளகபுரி நம்பனின் செம்பொனும் பின்படத்-தனவானுய்
அடைபடுசு கங்களுங் கங்குலின் றுஞ்சிநெஞ்
சலைபலவி தஞ்செயுஞ் சஞ்சலங் கொண்டெழுந்
தகலுகன வென்றிகழ்ந் தங்கைதங் குங்கனிக்-கிணையாக
தனதருட ரும்பரந் தஞ்சமுன் செம்பதந்
தவிரவொரு தந்த்ரமந்த் ரங்களுந் துன்புறுந்
தமியனறி கின்றிலன் றன்பதங் கெஞ்சிநிற்-பவனுனேன்
தருமமென விங்கெனஞ் சங்கொணெஞ் சுங்கரைந்
துருகவரு ளும்பெயுங் கொண்டலுன் கண்கடந்
தடிமையெனகங்குளிர்ந் துன்பதங் கும்பிடத்- தரவேணும்
கனகதிபெ றுங்கணங் கங்கணந் தங்கரங்
கொளுமுயர்த வங்கிடந் தங்கமங் கும்பெருங்
கடவுணிலை பொங்ககங் கொண்டசம் பந்தசற்-குருதேவா
கதியிதய பங்கயந் தங்கிடங் கொண்டநங்
குருரமண சிங்கனென் றன்பர்கண் டிங்குவந்
தருணகிரி தென்புறங் கொலுடுகண் கண்டமெய்ப்
—பகவானே.

(19)

தனதன தானந்தத் தனதன தானந்தத்
தனதன தானந்தத்—தனதானு

இராகம்:-பூபாளம் தாளம்:-திரிபுடை

உருமலி காலுனுங்கட் புலனுணர் வாலிங்கற்
புதவுல கேதங்கட் —குயிரான
உவகைய தாகும்பற் பலவித போகங்கட்
குறைவிட மாகுங்கற் —பகமாகத்
திரிதரு பேரெந்தப் பொழுதெனு மேவந்தெற்
செறிவதி லாதிந்தச் —செகவாழ்விற்
றெருளுறு ஞானம்பெற் றிடவரு ளுடுஞ்சற்
சனருறை மாசங்கத் —திடையேநான்
அரஹர நாமஞ்செப் பிடவக நாசம்பெற்
றருளுணர் வேபொங்கத் —தரவேணும்
அயனரி தேடுஞ்சித் தழலுரு வாகுஞ்சத்
தகபர மானந்தத் —தனிவாழ்வே
அருணம காலிங்கத் திருவரு ளாலிங்குற்
றடிதொழ வேதந்திப் —பொழுதேநா
லருமறை யோதும்பொற் *பிடைமரு தூர்நின்றெற்
கருள்ரம ணுனந்தப் —பெருமானே.

(20)

தனனதன தான தத் தனதனதன தானதத்த
தனனதன தானதத்த—தனதானு

இராகம்:-செஞ்சுருட்டி தாளம்:-ஜம்பை

அலைகளென வேயுதித்துள் ளமைதியற வேயொழித்தென்
னறிவைவினை யாலுழற்று—மகமாயம்
அதுவசம தாயுழைத்திவ் வவனியுட லாசைமிக்குன்
னருமையறி யாதழித்தென்—னதிகாலம்

*திருவிடைமருதூர் சிவசந்நிதியிற் பாடியது.

தொலையவினு மேல்விடுத்த லணுவுமுத வாதகத்தி
றுயிலகல வேவிழித்துன்—னருளாலே
சுகவடிவ மாமகத்துண் முழுகிடவு ளேகுதித்தொர்
துரியபத மேநிலைக்க—வருள்வாயே
கலைகள்பதி னாறுமுற்றி யலைகடல்வ சீகரித்த
கவின்மதிய மாயிரெட்டின்—மலர்மேலோன்
கரியவனு மேமலைத்த கடவுளக மாபுரித்த
கடிமணநன் மாலையிட்டு—வதுவாகி
பலவிதவி நோதமுற்ற பருவதம ணமலைத்தென்
முகபசுமை சாரலுற்ற—**ரமணேசா**
பணிபவர்க ளானபத்தர் பரமசுக ஞானவித்தை
பயிலகுரு பார்வைவைத்த—**பகவானே.**

(21)

தனத்தன தனத்தந் தனத்தன தனத்தந் தனத்தன தனத்தந்—தனதான

இராகம்:-இந்துஸ்தான்-காபி தாளம்:-ஆதி

திருப்பணி யிழைத்துஞ் சிவப்பதி துதித்துஞ்
செபப்பணி திளைத்துஞ் —சினமாசை
ஜெயித்திட வுழைத்துந் திரிப்புல னிழுத்துந்
திடத்தவ மிருக்குந் —திருவாளர்
விருப்புள மழைக்குங் கணத்தவ ருவக்கும்
பரத்துரு வெடுக்கும் —பெருமானே
வினைச்சுமை மிகுத்துஞ் செகத்தினை நினைத்தும்
பலப்பொழு தொழித்தென் —புவிவாணுள்
ஒருக்கண முனைக்கும் பிடப்பகை மனச்சஞ்
சலத்தினை யொழிக்குந் —தவனுகேன்
உளத்துயர் வெதற்கும் பொருத்தமி லெனக்கண்
டருட்புக லெனக்குந் —தரவேணும்
நெருப்புரு மலைச்செம் பதத்தெனை யழைத்துன்
பணிக்கென வளர்க்குங் —குருதேவா
நினக்கல தெவர்க்கென் பவப்பிணி யொழிக்கும்
பொறுப்புள முதிக்கும் —**பகவானே.**

(22)

தந்ததன தானந் தானத்தானத்
,, ,, ,,
,, ,, ,, —தன தான

இராகம்:-சிந்துபைரவி தாளம்;-ஆதி

கங்குலொடு நாளுங் காலக் கோடிக்
கஞ்சனொடு மாலுந் தேடித் தேடிக்
கண்டறிகி லோமென் றாடிக் கூடிக்—களைமீறிக்
கம்பமழ லிதுங் காணக் காணக்
கண்கண்மன மார்வம் பூணப் பூணக்
கந்தசிவ பாதந் தோணத் தோணக்—கனிவாகி
"எங்களிறை யாகுங் கோனிச் சோதிச்
செந்தழல தாவந் தாய்தற் போதெற்
கிங்குதியு மாகங் காரப் பாவப்—பழித்தீராய்
எந்தை"யென நாடும் போதத் தேவர்க்
கின்பசிவ ரூபங் காணத் தாணுச்
சம்புவரு ணேசன் பேர்பெற் றேயிக்—கலிநாளில்
பொங்குலக மாயம் பேரற் காகச்
சிந்தையறு ஞானந் தேரற்காகப்
புந்திதடு மாறுஞ் சேய்கட் காகக்—குருவாகிப்
பொன்றிருவி காசந் தோயத் தூயத்
துங்கரம ணாகந் தானுற் "றாயப்
பொன்றுமக மே"யென் றேழைக் கோர்சொற்
—புகல்வோனே
சங்கையலை வாலும் பூர்வத் தாசைக்
குந்துவலி வாலும் போகத் தாகச்
சஞ்சலசு பாவஞ் சாதற் காகச்—சரணாகித்
தங்குமடி யேனின் றேடுற் பாவச்
சங்கடமெ ழாதுன் பாலுற் றேயத்
தந்தருள வேணும் பூமத் தேவப்—**பகவானே.**

(23)

தனதான தந்ததன தனதான தந்ததன
தனதான தந்ததன—தனதான

இராகம்;-காம்போதி தாளம்:-ஜம்பை

கனமாமி குந்தனமொ டுலகாள வுங்கனக
மகுடாதி கொண்டுசிவி —கையிலேறி
கவிவாண ரும்பரவ விபமாவி னந்தொடர
வலமேவி கந்தருவ —வெழிலோடும்
அனமேநி கர்ந்தமனை யவளோடி ளஞ்சொலிசை
யமுதியு மங்குழவி —யவையோடும்
அதிநாளி ருந்துலகி லதிகார மும்பெருகி
யரசாளு மிந்த்ரசுக —நுகர்வோனும்
இனமாயு றுந்தரும வெமனுரை ழுந்தருள
விழியேனு மிங்குதவி —யிலனுகி
யிவையாவு மந்தமுற வினையேதொ டர்ந்துவர
விழிவாகி நொந்தயரு —மிகவாழ்வின்
மனமாயை வெந்தழிய குருநாம மந்த்ரநம
ரமணய வென்றுசொலி —யருளாலிம்
மரணாதி தொந்தமற வுயர்வாழ்வு தந்தெனையுன்
மகனாய வணைந்தருள்க —**பகவானே.**

(24)

தனத்த னந்தன தனதன தனதன தனத்த னந்தன தனதன தனதன
தனத்த னந்தன தனதன தனதன—தனதானு

இராகம்:-ஹரிகாம்போதி தாளம்:-ஆதி

உழைக்கு மன்பர்க ளுனதரு ணெறிவழி
யுறக்க மும்பசி யுடலுணர் வறநிதம்
உலைப்ப றும்பர மசுகிர்த சிவசுக—வெறியேறி
உதிக்கு மம்புவி நிரைசெயு மயனரி
யொழித்தி டுஞ்சிவ னிறையவ ரிவர்களி
லொருத்த ருஞ்சம னிலரென நிமிர்தர
—வருள்வோனே

விழைப்பு லன்களை யடுமுள வறிகிலன்
விணைப்ப யன்களு மறநினை நினைகிலன்
விடச்சி னஞ்சுவை முயல்வழி முயல்கிலன்
—மனமார
வெறுக்கி லன்பழி வினைகளை விடுகிலன்
விடத்தெ ரிந்தவர் தமதடி பணிகிலன்
விழிக்கி லன்கன வெனுநன வதிதுயில்—வெகுகாலம்
மழைக்க ழும்பயி ரெனமன வலிவினை
வளர்க்கு மின்றுணை பெறவுள முருகிலன்
மலப்பெ ருங்குழி யுடலினை யகமெனு—மயறீர
மறக்கி லன்கரு மறலிசெய் கொடுமைகள்
வரப்பெ றும்பய வுணர்வொடு மூனையகம்
வரிக்கி லன்றவ சியர்களை யருள்பெற—வருமாறே
அழைக்கு முன்கிரி யருணம லையிலுல
கனைத்து முன்றிரு வருளுரு தரிசன
மதைப்பெ றும்படி யெழுசிவ குருபர—**ரமணேசா**
அடிக்க டைந்தவ ரகமப ஹரணமு
மகத்தொ ளிர்ந்திடு மகமக (ஸ்)வுரணமு
மளிக்கு முன்பத வடிமையை யருளுக—**பகவானே.**

(25)

தத்தத்தன தத்தத் தனதன தத்தத்தன தத்தத் தனதன
தத்தத்தன தத்தத் தனதன — தனதான

இராகம்:-ஷண்முகப்ரியா தாளம்:- மிசிர சாபு

சித்தத்தலை வற்றுப் பருவுல
கத்துச்சுவை சப்பிட் டகவழி
தித்திப்பெழ லுற்றுத் தனுநிலை - தெரியாதே
திக்கெட்டொடு செப்புத் தினமிர
வைச்சுட்டுமி ரட்டைப் பிரிவொடு
சிக்கிட்டுழல் வர்க்கத் ரிபுடிகள்—அழிவாகி
சத்தத்தொடு மிக்கத் தெரியொளி
யெத்தெத்தனை யக்கட் செவியிடை
தட்டுப்படு மற்றப் பகிர்முக—மலையாதே

தத்வப்பொரு ளத்திற் றிரமுட
னிற்கச்சுவை யுற்றுக் களிமிகு
சச்சித்தென கைக்குட் கனியென—மிளிர்வோனே
வித்தைக்கர சித்தைத் தவிரவொர்
வெற்றித்தவ மற்றெத் திலுமிலை
விட்டுத்தளு டற்பற் றெனவெகு—விதமாக
மெத்தத்தெளி சொற்கட் டமிழினின்
முத்துப்பதி ரத்னச் செயுளினின்
வித்தப்பர பத்தர்க் கருளிய—குருதேவா
பத்திச்சுவை முற்றத் திருவரு
ளிட்டிப்புலை யற்பப் பொதியுதி
பற்றற்றுன டிக்குட் புகலுற— வருள்வாயே
பக்ஷிக்கிரு பக்ஷித் வயநிகர்
பத்திச்சுவி ரத்திப் பெறவொரு
பக்கத்தெனை வைத்திட் **டரமண—பகவானே.**

(26)

தந்ததன தந்தனந் தந்ததன தந்தனந்
தந்ததன தந்தனந்—தந்ததான

இராகம்:-ஹிந்துஸ்தான் காபி — தாளம்:-கண்டகதி

கங்கையொடு சந்திரன் றங்குமுடி யுங்கருங்
கண்டமுமு கந்தவொன் —றும்பரான
சஞ்சனரி தஞ்சமென் றுய்ஞ்சகிரி யென்றெழுங்
கம்பநெடு வங்கிவந் தங்கமேவி
தங்கமுரு கும்பதங் கொண்டபொழு தங்குவெண்
சங்கநிற முங்கலந் —தங்கையூடே
தண்டொடுக மண்டலந் துண்டுகொவ ணஞ்சிரங்
கொண்டதிரு முண்டனந் —தந்தவேழஞ்
சிங்கநடை யும்பெரும் பங்கமுறு கம்பிரந்
தென்படந டந்துவந் —திங்குநீயே
தென்புறமு கந்தரும் பண்டுறுசு யம்புநின்
செங்கமலம் வந்தடைந் —“தங்கணுள

எங்கடவு ளுஞ்சரண் ட ந்தகுரு வும்பொருந்
தெந்தையனை யுந்திரண் —டொன்றதான
வெங்களுயி'' ரென் றுமுன் கெஞ்சுமென கம்புணர்ந்
தின்பரம ணம்பொருந் —தெம்பிரானே

(27)

தத்தத்தத் தத்தத் தத்தன
,, ,, ,,
,, ,, ,, —தனதான

இராகம்:-செஞ்சுருட்டி தாளம்:-ஆதி

உச்சிட்டத் துக்குப் பற்பலர் நத்திக்கைக் கெட்டிப் பெற்றிட
உச்சிச்சுட் டுப்பட் டப்பகல்—வெயிலூடே
ஒப்பித்தற் பொற்பெத் தப்பொதி வைத்தத்திற் பெற்றுக்
கொட்டுக
மூக்குக்குற் றப்பட்டப் பொழு—தினுமேலாய்
மெச்சித்தொட் டுப்பெற் றுக்கணி லொத்திப்பொத்
தித்தித் திப்புற
விச்சித்தத் திற்குச் சுத்தியு—மடைநாளில்
மிக்கத்தட் புற்றக் கட்கதி ரிட்டற்பப் புத்திக் குற்றவென்
மித்தைப்பைத் யச்சித் தத்திலும்—வலைவீசி
சச்சித்திற் புப்பெற் றிக்கினி சற்றெற்கிச் சைப்பற் றிக்கொள
சட்சுத்திட் சைக்குட் பற்றிய—வருளாலே
தர்க்கத்துட் சிக்கக் கற்றுளம் வெட்கப்பற் றிக்கொட்
புற்கலை
தப்பித்துச் சற்புத் திப்பெறு—மடியேனை
இச்சித்தற் கெற்கெத் தெத்தனை யற்பத்துர்ப் பற்றெத்தெத்திலு
மெட்கொப்புப் பெற்றச் சிற்றிட—மிலதாக
எற்றிச்செற் றுற்பத் தித்தனு வற்றிச்செத் துக்கெட்
டற்குளுன்
னிட்டத்திற் குட்பட்டுய்த்தருள்—**பகவானே.**

IV கீர்த்தனங்கள்

1 கிரிவலம்

இராகம்:-தோடி தாளம்:-ஆதி

பல்லவி

வலம் வர வேண்டுமையே —என்
மனதைக் கவர்ந்த அண்ணு மலையைத் தினந்தினமும் (வ)

அநுபல்லவி

நலந்திகழ் ஞான ரமணபி ரான் ஓர்வி
நாடிவிலகாத் ஞான மலையை நானும் (வ)

சரணம்

1. கலந்த சிவஞானக் காதற் பெருக்காலே
கடவுள் ரமணகுரு கழலடி தன்னுலே
மலர்ந்த விழிமலர்கள் மலைச்சிகரம் மேலே
வைத்து வலம்வந்தகார ணத்தை நினைந்ததனுலே (வ)

2. அமரர்இறை முனிவோர் அரியயன் தேவியர்கள்
அறுமுகன் ஐங்கரனும் அடியவர் புடைசூழ
இமயமலைமகளே இம்மலையை வலம் வந்தே
இடதுபா கமடைந்தால் என்போன்ற அடிமைகள் (வ)

2. எந்நாளும் உன்னருள்

இராகம்:-சகானு தாளம்:-ரூபகம்

பல்லவி

எந்நாளு முன்னருள் எனைக்கை விடாதென்றே
இருக்கின்றேன் அருள்வாய் அருணுசலா (எ)

அநுபல்லவி

அந்நாள் உனக்காண அருள்செய்த ரமணனே
பின்னுள் நீகைவிட்டாற் பெருங்கரு ணைக்கழகோ (எ)

சரணம்

முன்னுளிற் செய்கர்ம மூவா சனைகளை
மூலமோ டழித்திட முறைசெய்தேன்
அன்னுய்என் னுருயிர் அப்பாவென் றழைக்கின்றேன்
இந்நாள்நீ இரங்காயேல் என்செய்வே னென்
செய்வேன் (எ)

3. அனுதி சுகார்ணவம்

இராகம்:-கீர்வாணி தாளம்:-ஆதி

பல்லவி

அனுதி சுகார்ணவமே ரமணா
ஆரணன் மால்முன்னண் ணுமலையான (அ)

அநுபல்லவி

தனுதியல்பே ரருளால் அருணா
சலாலயமே வியமா னிடனே (அ)

சரணம்

1. மனுதியில்லா வழியே வகுத்தாய்
மதவா தியர்வாய் களைமூ டவைத்தாய்
கனுநன வுண்மையைக் காண வைத்தாய்
கருணா நிதிநீ குருவா யுதித்தாய் (அ)

2. அருணா சலமே யகலா தவனே
அடியார்க் ககலாப் புகலா னவனே
அருளா லெனையா ளுடையாண் டவனே
அகநா யகஸா ஹஸநா டகனே (அ)

4. அழகாகுமா ?

இராகம்:-கானடா தாளம்:-ஆதி

பல்லவி

அழகாகுமா அருணா சலா வுனக் கழகாகுமா—கொடி
யாரெனக் கேயிடை யூறுசெய் தாலுனக் (கழகா)

அநுபல்லவி

தொழுமடியார் வாழ்வில் துன்ப மிழைப்போர்களின்
சூதுவன்மையடி யோடழித்தருளாற் பாதுகாத்தநீயிப்
போதெனைக்கைவிடல் (அ)

சரணம்

கழுமரம் எரியவும் கடலிற்கல் மிதக்கவும்
கனலும்நீற் றறைதென்றல் காற்றெனக் குளிரவும்
முழுக மதுரை வைகை முழுவெள்ளம் பரவவும்
முன்னம் பெருங்கருணை மூண்டெழுந் தடியவர்

நினைத்த கணத்தி லரக்கர் பலத்தை
நெறித்த பயத்தைக் கொடுத்தவா—உனை
நினைத்து லகத்தொ ருடற்குள் வசிக்கும்
எனக்கினி ரக்ஷையளிக்கவா
பழவினை யிடர்தர பகிர்முக முறுவதைப்
பரமக ருணையினால் நிறுத்துவாய்
பரமசொ ருபமதிலே யிருத்துவாய்
பகலிர வறவக மேநிறுத்துவாய்
குருரமணா கிரிரமணா அருணா சலரமணா—கரு
ணாகரா சந்த்ர சேகரா அருள்சி வாகரா
அரஹ ரோஹரா இதுவுனக் (கழகாகுமா)

5. நினைவு ஏனோ?

இராகம்:-நாராயணி தாளம்:-ஆதி

பல்லவி

எந்த நினைவும் இனியேனோ?
ஏற்றவ னினிக்கை விடுவானோ? (எ)

அநுபல்லவி

தந்த வுடலுக் குடை யிடமோ
தாகம் பசியிற் குணவுகளோ
எந்த விதமு மீந்தருளல்
இறைவன் ரமணன் கடனன்றோ (எ)

சரணம்

1. பந்த மினிமேல் வாராமல் பதித ருறவே சேராமல்
எந்த விதமு முனைக்காக்க இறைவன் ரமண னறியானோ?
தந்தை மடிமேல் வாழ்சேய்நீ தளர்வுக் கிடமுந் தரலாமோ?
(எ)

2. இன்ன வுடல்நீ இதுநீயென் றெனது நானென் றினியேது?
என்ன விதமாய், எதுநாடி எண்ண முடியும், மனமேது?
உன்ன வுரிமை யுனக்கேது? ஒருவன் **ரமணன்** உளபோது?
(எ)

6. அவரே குருபகவான்!

இராகம்:-பியாக் தாளம்:-ஆதி

பல்லவி

அவரே குருபகவான்—வே
றூராலும் பயன் ஆவதொன் றில்லை

அநுபல்லவி

அவரே குருபரன் அவரே கடவுளர்
அவரே பரம்பொருள் ஆன்மநிலை (அ)

சரணங்கள்

1. எவரே யுன்னுண்ம வியற்கையைக் காட்டுவார்,
எவருன் றேகான்ம பாவத்தை யோட்டுவார்,
எவர்நீ கீழிறங் காநிலை நாட்டுவார்,
அவரே குரு!பிறர் எவரருள் கூட்டுவார்? (அ)

2. சித்தி, புகழ்,பொருளோ, தேவ சுகங்களோ,
சேர வரந்தருவர் சித்தர் கணங்களோ!
அத்தனை யும்பெறினு மழியாவின் பங்களோ?
ஆன்ம வுணர்வளிப்ப(து) யாரருட் கண்களோ (அ)

3. கேட்பதைத் தான்றரும் சுரதரு கற்பகம்;
கேளா தளிப்பது வோகுரு கற்பகம்!
ஆட்படு வோரகத் தாசை யழித்''தஹம்
அஹ''மெனு மனுபவம் அருள்வது தான்சுகம்! (அ)

4. ஆலயம் தலமென்றோ ரயலிட மோடாதே!
ஆதர வவரிவர் யாரையுந் தேடாதே!
பாலையும் பட்டினியும் பழகிநீ வாடாதே!
பரநிலை தருங்குரு பதமன்றிப் பாடாதே! (அ)

5. எவர்அரி மலரவற் கிடையொளி யானவர்,
எவரொரு நால்வருக் கிருநிழல் மோனவர்,
எவருனை†''இயலறி வின்'' பெனும் வானவர்,
அவரிதோ! ரமணமெய் யழகுரு வானவர் (அ)

---

† இயல் அறிவு இன்பு = சத் சித் ஆனந்தம்

7. நானே அதிகாரி!

இராகம்:-ஜோன்புரி   தாளம்:-ஆதி

பல்லவி

நானே வதிகாரி—ரமண—நாத னிருக்கையில்,ஏதிலுமே (நா)

அநுபல்லவி

சாதனை புரியவும் தலைவனை யறியவும்
ஏதொரு சுதந்திரமே!—அதாலே (நா)

சரணம்

1. தீதிது நலமிது வெனத்தெளி யேனே
சிற்றறி வினனேனே—ஆசானே
சேதனு! அசேதனு! சிறுதுரும் பசைவதுன்
திருவருட் செயலல்லவோ?—அதாலே (நா)

2. இத்தனை ஜன்மமாய் நானெனச் செய்தவை
யெல்லா மழிவாக—ரமணா
சத்திய குருநீ தாங்கிட வந்தபின்
சகலமு முன்பொறுப்பே!—அதாலே (நா)

3. தந்தைதா யிருக்கையில் தனக்கென்ன பயமோ?
சற்குரு வுருவோடே—தயாளுவாய்
வந்தஸ்ரீ ரமணதாய் தந்தைநீ யிருக்கையில்
மனமுடல் வாக்கிவையே—வசம்செய்ய (நா)

4. யார்கரஞ் சேர்கயிற் றுற்பரி யோடுமோ,
தேர்செலுத் துவனுரோ—நானுரோ
நீயவ னல்லவோ நிறுத்திட வெனை நீ
நினைந்திடி லசைவேனே!—போவேனே! (நா)

5. குருவரு ளலதெனக் கொருவலி விலையெனக்
குருவுமைச் சரணுனேன்—இந்நானே
திருவருட் கருணையாற் சிறியவனெ னக்கினி
சென்மமே யொழிந்தாலும்—வந்தாலும் (நா)

8. ஆன்மக் கல்வி

இராகம்:-மோஹனம் தாளம்:-ஆதி

பல்லவி

அதைக் கற்றுக் கொடுங்க ளப்பா ரமணப்பா
அதைக் கற்றுக் கொடுங்க ளப்பா!

அநுபல்லவி

விதிக்கும் வலிய, வருட் கதிக்கு முரியதாக
எதைக்கற்றுக் கொண்டாலெனக் கினிப்பிற விவராதோ (அ)

சரணங்கள்

1. உதிக்கும் உடலுடனே யுலகிற் பிறந்துபிறந்(து)
ஒவ்வொரு பிறவியும் உதவா திறந்திறந்தே,
மதிக்கெட்ட வனுயென்றன் வாழ்வை யிழந்திழந்தே,
எதைக்கற்றுக் கொள்ளாததா லிப்பிற விவந்ததோ (அ)

2. "விடுத்துல கைத்துறந்து வேட்கையெல் லாமழிக்க
வேண்டு"மென் றேபலவாய் வேதாந்த நூல்களிலே
படித்துப் படித்தும்வெறும் பரோக்ஷஞா னமே;அநு
பவநிலை யிலேகற்றுப் பயனடை யும்படிக்கே (அ)

3. எதைக்கற்றுக் கொண்டாலினி யின்பதுன் பமில்லையோ,
எதைக்கற்றுக் கொண்டால்வாழ்வில் என்றும்ப யமில்லையோ,
எதைக்கற்றுக் கொண்டாலன்றி யென்றுஞ்சாந் தியில்லையோ
எதைக்கற்றுத் தரகுரு வுருவெடுத் துவந்தீரோ (அ)

4. படிப்பறி வறியாத பரமஹம் சருமென்றன்
பகவான் ரமணுஇளம் பருவம திலுந்தாங்கள்
குடிக்குங்கஞ் சிப்படிப்பைக் குப்பை எனவே தள்ளிக்
குறையாஞா னமாய்க்கற்றுக் கொண்டகல் வியெதுவோ (அ)

5. உருக்கும் உலைநெருப்பாம் உலகவெ றிக்கிடையில்
ஒருக்கண மும்விடாத உண்மைச் சுகத்துடனே
இருக்கும் படிக்கேகுரு இறைவன் அருணுசலன்
எந்தை ரமணுவுமக் கெதைக்கற்றுக் கொடுத்தாரோ (அ)

9. ரமண பகவானருள்

இராகம்:-கல்யாணி தாளம்:-ஆதி

பல்லவி

ரமண பகவான் அருளே நம்பினேன்

அநுபல்லவி

கமலநயனு கருணாரமணு - காமக்ரோதமோ காதிநீங்கவே (ரமண)

சரணங்கள்

1. அகமகமெனும் சுகஸ்புரணமே
அநுபவமெதோ அதையருள்கவே
பகலிரவிலாப் பரமவெளியே
பானுகோடிகோடி தானுமிணையிலா (ரமண)

2. வினைமுதலெனும் மனமழியவே
விலகிமயலே விமலமுறவே
தனையறியுமோர் தவநிலையிலே
சாந்திசாந்திசாந்தி சகஜமுறவே (ரமண)

3. எவருமயலார் இலையெனும்விதம்
இருமையறவே இதயமுறவே
சிவமயமிதே அநுபவமதாய்
தீனனுமெய்தி திரமடையவே (ரமண)

4. கடுகளவெனும் சுடுமொழியிலாக்
கனியமொழியும் வினயமுறவே
நடுநிலைவிடாத் திடமடையவே
நானெனதிலாத ஞானமடையவே (ரமண)

5. அருணமலையை யகலவியலாப்
பிரியமுறவே பிறவியறவே
திருவருளினுற் றிகழறிவினுல்
தேஹம்நாஹம்கோஹம் ஸோஹமாகவே (ரமண)

10. ஸஹஜ சமாதி

இராகம்:-நாட்டை தாளம்:-ஆதி

பல்லவி

ஸஹஜ ஸமாதியருள்—புரிவாய்
தன்னையல் லாதொன்றும் அன்னியங் காணுத (ஸ)

அநுபல்லவி

அகமுக மேயாகி ஆனந்த நிறைவாய்
ஆன்ம வடிவான மோன முடிவான (ஸ)

சரணம்

1. இகபர லௌகிக இன்பமெனுந் துன்ப
ஈஷணுத்ரய விசேஷ நாசமுற
பகிர்முக மாகாத பரமசுகிர்த சிவ
பக்தியின் வடிவான முக்தியனு பவமான (ஸ)

2. குருவழியே சென்ருேர் திருமொழியே நின்று
கோஹ மந்த்ரசிவ போக மருந்துண்டு
அருவுருவாய் சச்சித் தானுப வங்கண்டு
ஆத்ம சுதந்த்ரசாம் ராஜ்யப தங் கொண்ட (ஸ)

11. எது பெரியது?

இராகம்:-காபி தாளம்:-ஆதி

பல்லவி

கொடுத்தவன் பெரிதா? அல்லதிந்தக்
கொடைப் பொருள் பெரிதா?

அநுபல்லவி

கொடுத்த வன்றனை விடுத் துடலுல
கடுத்த திற்சுகம் பிடித்த லேகிருய்! (கொ)

சரணம்

1. கொடுத்த தெத்தனை நாள்?—அதிலேயுன்
கொட்டமு மெத்தனை நாள்?
கொடுத்த தென்னத்தி ஞல்?—அதைக்கண்டு
கொள்ளாத தென்னத்தி ஞல்?
கொடுத்த வன்றனை யடுத்தி டிற்பின்னுங்
கொடுப்பன் முன்னிலும் சிறப்பை யாதலால் (கொ)

2. மண்ணினுல் ஓர்பதுமை—உனக் கன்னே
வாங்கிக் கொடுத்திருந் தாள்
கண்ணுக் கினியததை—விடவன்னைக்
காதல் பெரிதல்லவோ?
உண்ண வழைக்கிருள்!—ஓடி வராமலிம்
மண்ணைக்கொண் டாற்பசி வந்தத டங்குமோ (கொ)

3. கொடுத்த வன்றனேயே—விடாது நீ
கூவித் தொழுதிருந் தால்
கொடைப் பொருளெனவே—தன்னேயே
கொடுத்து நினறருள் வான்!
கொடுத்த ரமணன் அடுத்து லகுடல்
விடுத்தி டாதென்ன மடத்த னம்மிது? (கொ)

12. யாரோ பாராய்!

